டாம் ஹேங்க்ஸின்..

# காஸ்ட் அவே

## தனிமையில் ஒரு காதல் கதை



தி. குலசேகர்

http://www.pustaka.co.in

# காஸ்ட் அவே

## தனிமையில் ஒரு காதல் கதை

# Cast Away

## Thanimaiyil Oru Kaadhal Kathai

Author:


தி. குலசேகர்

**T. Kulashekar**


For more books

http://www.pustaka.co.in/home/author/kulashekar


**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.


பொருளடக்கம்


******ebook converter DEMO Watermarks*******

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

******ebook converter DEMO Watermarks*******

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

# ஓர் அறிமுகம்



இவரின் சிறுகதை தொகுப்பு நூல்களை கவிஞர் மீராவின் "அன்னம் பதிப்பகம்" பிரசுரித்திருக்கிறது. மீராவை தன்னை பெறாத தந்தை என்று நினைவு கூறுகிறார். இவரின் வாழ்க்கைப் பயணத்தில் அவரோடு சேர்ந்து பயணித்த காலம் சிலிர்ப்பானவை என்கிறார்.
திரைப்படத்துறையை இவர் தேர்ந்தெடுத்ததும் இவரை கவிக்கோ அப்துல் ரகுமான் மூலம் இயக்குநர் பாக்யராஜிடம் உதவி இயக்குநராக

******ebook converter DEMO Watermarks*******

சேர்ந்துவிட்டதும் கவிஞர் மீரா தான். பிரபல இதழ்களில் ஏழு நாவல் வெளி வந்திருக்கிறது. இவரின் படைப்புகளை அன்னம், சந்தியா, ஆழி, ப்ளாக்ஹோல் மீடியா, வருண் பதிப்பகம் போன்ற பதிப்பகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

இவரது வாழ்வில் மறக்க முடியாத மனிதர்களில் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி முக்கியமானவர். தனது முதல் புத்தகம் "ஒரு சிநேகிதிக்காக" வெளியீட்டில் அறிமுகமான நாளில் இருந்து நினைவின் கடைசித்துளி வரை துளியும் குறையாத நட்போடும், வாஞ்சையோடும் ஆழ்மனதிற்கு நெருக்கமாக இயைந்துகொண்ட மனிதம் அவர் என்கிறார். அதேபோல பூர்ணம் விசுவநாதனின் நட்பும் அபாரமானது என்கிறார். இவரின் "வானம்பாடி" புத்தகத்தை தனக்கு பிடித்த புத்தகம் என ஒரு கட்டுரையில் பூர்ணம் குறிப்பிட்டிருக்கிறார். இவரது கதைகளில் உள்ள உயிர்ப்பு பற்றி சுஜாதா, கமல்ஹாசன் போன்றவர்களிடம் சிலாகித்து கூறியிருக்கிறார். இயக்குநர் வசந்த்திடம் துணை இயக்குநராக சேர்த்து விட்டதும் இவர் தான். இந்த மூவரின் நட்பை குலசேகர் தன் "வாழ்வின் அர்த்தங்கள்" என்கிறார்.

இயக்குநர் சந்தோஷ் சிவனின் "டெரரிஸ்ட்" "மல்லி' ஆகிய திரைப்படைப்புகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்து நூலாக்கியிருக்கிறார். "தாமரை" இதழில் இவர் எழுதிய திரை விமர்சனங்கள் நுட்பம் மிகுந்தவை. இவரின் "வருண் பதிப்பகம்" வெளியீட்டில் "சமூகநீதிக் காவலர் டபிள்யு.பி.ஏ. சௌந்திர பாண்டியன்" என்கிற வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியிருக்கிறார்.

இவரது "ஒரு சிநேகிதிக்காக" தொகுப்பில் உள்ள சிறுகதைகள் பேராசிரியர் டாக்டர் முத்தையா அவர்களால் வங்கமொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, "பிரேமாந்தர்' இதழில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. "வானம்பாடி" நூல் குறித்த கட்டுரையை "எனக்குப் பிடித்த புத்தகம்" என்கிற தலைப்பில் "தினமணிக்கதிரில்" பூர்ணம் விஸ்வநாதன் எழுதியிருக்கிறார். இவரது "மனதில் ஒரு பிரார்த்தனை" சிறுகதை காவ்யா பதிப்பகம் வெளியிட்ட 'நெல்லைச் சிறுகதைகள்' தொகுப்பு நூலில் இடம் பெற்றிருக்கிறது.

"புதிய பார்வை - நீலமலை தமிழ்ச்சங்கம்" இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றிருக்கிறார், ஆறுதல் பரிசு, மூன்றாம் பரிசு, முதல் பரிசு என தினமலர் நடத்திய டி.வி.ஆர் நினைவு சிறுகதைப் போட்டிகளில் தொடர்ந்து மூன்று முறை பரிசுகள்
******ebook converter DEMO Watermarks*******

பெற்றிருக்கிறார். "நேசங்களுடன்' சிறுகதை நூலுக்கு "லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கிய சிறப்புப் பரிசு" பெற்றிருக்கிறார்.

அமெரிக்கன் கல்லூரியில் முதுகலை ரசாயணம் படித்துக் கொண்டிருக்கையில், தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தில் பணி கிடைத்து, அங்கே இருந்த காலங்களில் உலக திரைப்படங்கள் மற்றும் இலக்கிய பரிட்சயமேற்பட்டு, படித்தும், எழுதியும் கொண்டிருந்தவர், பின் திட்டமிட்டபடி திரைப்படத்துறைக்கு வந்து தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதழியலில் முதுகலை பட்டயப்படிப்பும் அஞ்சல் வழியில் படித்திருக்கிறார்.

விளம்பரப் படம், டெலிஃபில்ம், நெடுந்தொடர்களில் திரைக்கதை, வசனம் மற்றும் எபிசோட் இயக்குநராகவும் பணியாற்றியிருக்கிறார். தமிழகத்தின் பல மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆவணப்படத்தின் உருவாக்கத்தில் கவிஞர் லீனாமணிமேகலையோடு இணைந்து பணியாற்றி இருக்கிறார். குமுதம் டாட் காம் இணையதள தொலைக்காட்சிக்காக பல துறைகளைச் சார்ந்த பிரபலங்களின் நேர்காணலை இயக்கியிருக்கிறார். நடிகை ரோகினி தொகுத்து வழங்க கேப்டன் தொலைக்காட்சிக்காக "உலக சினிமா" என்கிற தொடர் நிகழ்ச்சியை எழுதி, இயக்கியிருக்கிறார். இவர் எழுதி இயக்கிய "நீ+நீ=நாம்" என்கிற குறும்படம் "வேந்தர்" தொலைக்காட்சியில் தேர்வாகியிருக்கிறது.

இயக்குநர்கள் கே.பாக்யராஜ், ராஜன் சர்மா, ரேவதி, வஸந்த் ஆகியோரிடம் துணை இயக்குநராக பணி புரிந்திருக்கிறார். இயக்குநர் பார்த்திபனோடு கதை விவாதம் மற்றும் இணைஇயக்குநராக பணிபுரிந்திருக்கிறார். திரைமொழியின் மீதும், இலக்கியத்தின் மீதும் தீராத காதல் கொண்டிருப்பவர். அந்த அடர்த்தியான காதல் புருவம் உயர்த்த வைக்கிற படைப்புகளை தொடர்ந்து வழங்கச் செய்யும்.

# திரைக்கலை மீது காதல் வந்த வரலாறு

பதினாறு வயதினிலே படத்துக்குப் பிறகு தான் அந்தப் பொறி எனக்குள்ள ஜனிச்சி பெருசா ஆகிட்டிருந்திருக்கனும். அல்லது எனக்கே தெரியாம அந்தப் பொறி என் மரபணுக்கள்ல ஒளிஞ்சிட்டிருந்து, பதினாறு வயதினிலே பாத்ததும் சுயஉணர்வு துௗண்டப்பட்டு வெளிவந்திருக்கனும்னு தோணுது.

******ebook converter DEMO Watermarks*******

பதினாறு வயதினிலே படத்துக்கு ராஜான்னு ஒரு நண்பர் கூட்டிட்டுப் போனார். படம் துவங்குனதும் சப்பாணி மேல அனுதாபப்பட ஆரம்பிச்சேன். அந்த டாக்டர் வந்ததும் சப்பாணி, மயில் மேலெ வச்சிருக்கிற காதலை களைக்கறதுக்காகவே வந்துட்டானேன்னு அவனை சபிச்சிக்கிட்டே ஒக்காந்திருந்தேன். இடைவேளையில டாக்டர் ஸ்ரீதேவியெ கட்டிக்கமாட்டேன்னு சொல்லிட்டு வில்லு வண்டியில வேற பொண்ணெக் கட்டிக்க வெளியூர் பொறப்பட்டதும் தான், அப்பாடான்னு மனசு ஆசுவாசமாச்சி. சப்பாணிக்கி மயிலு கெடைக்கிறதுக்கு ஒரு சதவீதமாவது சான்ஸ் இருக்கேன்னு நெனைக்கறதே மகிழ்ச்சியா இருந்துச்சி.

அப்ப நடந்த ஒரு மறக்கமுடியாத நகைச்சுவை. இடைவேளை விட்ட நேரம் பாத்து நண்பர் ராமநாதபுரம் ராஜா அதாவது அவர் ஊரு ராமநாதபுரம் பேரு ராஜா... வெளியில போயி சாப்பிட எதுவோ வாங்கிட்டு வந்து இருட்டுக்குள்ள மினிப்ரியா தியேட்டர்ல ஒக்காந்திருந்த என் கையில தந்தார்.

அரை இருட்டுல அது என்னன்னு உத்துஉத்துப் பாத்தேன். அது ஒரு கூம்பு மாதிரியிருந்துச்சி. ஆனா அது எதுனால ஆனதுன்னு தெரியலெ. பழுப்பு நிறத்துல இருந்துச்சி. ஒரு வேளை காகிதமா இருக்குமோ? உள்ளுக்குள்ள ஐஸ் க்ரீம் இருந்துச்சி. நாக்கை உள்ள கஷ்டப்பட்டு வுட்டுவுட்டு ஐஸ்சை மட்டும் சிரமப்பட்டுச் சாப்பிட்டு முடிச்ச பிறகு, அந்த கோன் பேப்பரை எங்க போடறதுனு தெரியாம சுத்தி முத்தும் நைசா பாக்கறேன். அங்க ஒரு பொண்ணு அந்த கூம்பெ பேப்பரோட நறுக்நறுக்குனு கடிச்சிக் கடிச்சி சாப்பிடறதெ பாத்ததுந் தான் தெரிஞ்சது. அது பேப்பர் இல்லெ. பிஸ்கட்னு. நல்லவேளை. இருட்டுக்குள்ள நான் பண்ணிட்டிருந்த கூத்தை யாரும் கவனிக்கலெ. இது என்னோட முதல் கோன் ஐஸ் அனுபவம்.

இடைவேளைக்கி பிறகு படிப்படியா சப்பாணி மேல மயிலுக்கு காதல் வளர ஆரம்பிக்கும். அப்பாடான்னு இருந்தேன். உச்சக்கட்ட காட்சியில பரட்டை மூலமா பிரச்னையாகி சப்பாணி ரயில்ல ஜெயிலுக்கு மயிலைப் பிரிஞ்சி போறப்பத் தாங்கமுடியாம மூச்சுத் திணறிட்டேன்.

அந்த நேரத்துல பாத்து பாரதிராஜா சப்பாணி நிச்சயம் திரும்பி வருவான். மயிலின் வாழ்வு மலரும்னு ஒரு வாக்கியம் மட்டும் போடாம விட்டிருந்தார்னா அன்னைய தேதியில எத்தனை பசங்களுக்கு நெஞ்சு வெடிச்சிருந்திருக்குமோ தெரியாது.
******ebook converter DEMO Watermarks*******

சிநிமா அத்தனை கலைகளும் சேந்த ஒரு அற்புதக் கலையோட வெளிப்பாடுன்னு எத்தனையோ உணர்வு வயப்படற நெஞ்சங்களுக்குள்ள ஆழமா போயி உணர்த்துன ஒரு காரணத்துக்காகவே பாரதிராஜாவுக்கு ஒரு சிலை இயக்குநர் சங்கம் அல்லது அவரால பரவசப்படுத்தப்பட்ட மக்கள் வச்சாகனும்னு விரும்புது மனசு.

அவர் படங்கள் தான் சினிமாங்கற மொழியை, கலைத்தன்மையை, மௌனத்தோட வலிமையை, காட்சி மூலமாவே சொல்ல நெனச்சதை உணர்த்தின உத்திகள்ல, இயற்கையோட

வெளிப்பாடுகளால, பறவைகள் மூலமா கதையோட புரிதலை உணர்த்திய விதத்துல, திரைக் கலை ஒரு சக்தி வாய்ந்த சாதனங்கற அதனோட வீரியத்தை மக்கள் முன்னால வச்சி அவங்களுக்கிருந்த வெறும் பொழுதுபோக்குக்காக அப்படீன்ற எண்ணத்தை மறுபரிசீலனை செய்ய வச்சதுக்கான துவக்கம்னு சொல்லலாம்.

பாரதிராஜாவோட பதினாறு வயதினிலே பாத்த பிறகு சினிமா மேல இருந்த பிரியம் மரியாதையா ஆயிருச்சி. எழுந்து நின்னு மானசீகமா கைகட்டிக்கணும்னு தோண ஆரம்பிச்சிச்சி.அதுவரை என்னைத் தேடி வந்த சிநிமாவை பாத்திட்டிருந்தேன். அதுக்கு பிறகு நல்ல சினிமாவை தேடிப்போய் பாக்க ஆரம்பிச்சேன். அப்போ தான் உலக சினிமாவோட பரிச்சயம் ஏற்பட்டுச்சி. அதை தேடித்தேடி பாக்க ஆரம்பிச்சபோது தான் அதோட உலகதரத்துக்குக் காரணம் அதுல பயன்படுத்தப்பட்டிருக்கிற இலக்கியகூறுகள் தான்ற விசயம் புரிய ஆரம்பிச்சது. இலக்கியத்தோட பரிணாம வளர்ச்சியா ட்ராமடிஸம், ஃபேன்டஸிசம், ரொமான்டிசிஸம், ரியலிசம், நியோரியலிசிஸம், மேஜிகல் ரியலிசம், ஸ்ட்ரக்சரலிஸம், மார்டனிஸம், போஸ்ட்மார்டனிஸம் மாதிரியான பல கூறுகளெ வாழ்வியல் அனுபவத்தோட துல்லியமா உலக திரைக்கலை பயன்படுத்தியிருக்கிறது தெரிஞ்சது. அதுலயிருந்து இலக்கியத்தோட தேவை தரமான கிளாசிக் திரைப்படைப்புகளுக்கு மூலகாரணமா இருக்கறதை புரிஞ்சுக்க முடிஞ்சது. அதோட திரைக்கலை இலக்கணத்தை, அதுக்கேயான மொழியை சரியா பயன்படுத்தி புதியபுதிய இலக்கணங்களை வகுக்கிற படைப்புகளா அவை பரிணமிச்சிட்டிருக்கிறதை உணர முடிஞ்சது. அப்படிப்பட்ட நுட்பமான படைப்புகளை தான் தேடிப்பிடிச்சி இங்கெ மாலையா கோர்க்க முயற்சி பண்ணியிருக்கேன்.

******ebook converter DEMO Watermarks*******

பதினாறு வயதினிலே படத்துல துவங்கின பயணிப்பு நிக்காம அற்புதமான பல ஆயிரம் உலக சினிமா கடந்து ஓடிக்கிட்டே இருக்கு. முடிவில்லாத அந்த தேடல் பல உலகளாவிய அற்புதங்களை உணர்த்திக்கிட்டே இருக்கு.

உலகத்தில படைக்கப்படற அத்தனை இலக்கியங்களையும் திரைக்கதை சுவீகரிச்சிக்கறப்போ, அந்த திரைக்கதைகளை நாம ஏன் இலக்கியமா ஆக்கக்கூடாதுன்னு தோணுன புள்ளியிலருந்து கிளைத்தெழுந்த ஆர்வந் தான் இந்த முயற்சி.

இதை பார்ப்பதும், படிப்பதும் முற்றிலும் வெவ்வேறான அனுபவமா இருக்கும்ன்றதை இந்த இடத்தில உறுதியா சொல்ல முடியும். இதை படிச்சிப் பாக்கற ஒவ்வொருவரும் நான் சொன்னது நிஜம்னு படிச்சதுக்கப்புறம் சத்தியம் பண்ணி சொல்லுவீங்கன்னு இப்பவே உறுதி சொல்ல முடியும்.

சினிமா தோன்றுன நூற்றாண்டுல பிறந்ததுக்கு எவ்வளவு கொடுத்து வச்சிருந்திருக்கனும்னு நினைக்கறப்போ ஏற்படற சிலிர்ப்பை வார்த்தைகள்ல எப்படி எழுதறதுன்னே தெரியல.

"உலகின் மிகச் சிறந்த காதல் திரைக்கதைகளின் நாவல் வடிவம்" அப்படீன்ற இந்த

திரட்டு (ஆந்தாலஜி) முயற்சிக்காக கையாளப்பட்டிருக்கிற திரைக்கதைகள் எல்லாமே தரத்தில உயர்வா மதிப்பீடு செய்யப்பட்டு உலக விருதுகளை தட்டிட்டு போன கதைகள் மட்டுமில்ல... பொருளாதார ரீதியா மிகப்பெரிய வெற்றி பெற்ற படைப்புகள். அந்த திரைக்கதைகளை அடியற்றி உருவாக்கப்பட்டிருக்கிற இப்படைப்பு ஒரு ட்ரான்ஸ்லிட்ரேச்சர் என வகைப்படுத்தலாம்.

இந்த புத்தகத்தை படிக்கிற வாசகர்கள் நல்ல திரைப்படங்களை தேடிப்போய் வரவேற்பதும், படிக்கிற படைப்பாளிகளிடம் உலகத் தரமான அதே சமயம் பெருவாரியான மக்கள் ஆராதிக்கிற படைப்புகளை தரணுங்கிற தாகம் அடங்காமல் மேலமேல அதிகரிச்சிக்கிட்டே போகும்னு நிச்சயமா சொல்லுது மனசு. இப்படிப்பட்ட ஒரு விசயத்தை அறிமுகப்படுத்தற இந்த முயற்சி தமிழ் படைப்பாளர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் திரைப்பட ரசனையை இன்னுமின்னும் செழுமைப்படுத்த ஒரு உந்துதலா இருக்கும்ன்றது

******ebook converter DEMO Watermarks*******

என்னோட நம்பிக்கை.

நேசத்தோடு,

தி. குலசேகர்

# தனிமையோடு உறவாடி

இதன் நாயகன் ஒரு எளிமையான மனிதன். மனிதநேயவாதி. ரொம்ப எளிமையான வாழ்வை வாழ்வதற்குத் தான் நினைத்திருந்தான். சூழ்நிலை அவனை ஒரு சரித்திர புருஷனாக ஆக்கிப் பார்க்க அல்லவா தீர்மானித்திருந்தது. தனிமை அவனுக்குள் திணிக்கப்பட்டது. அவன் அதை வேதமாக்கினான். தன்னையே நண்பனாக்கித் துணைக்கு வைத்துக்கொண்டு அவனின் உலகை விசாலமாக்கினான். அது வாழ்வின் சூட்சுமத்தை அவனுக்குக் கிரீடமாய்ச் சூட்டிவிட்டுச் சென்றது.

அவனின் தன்னம்பிக்கை இதனை வாசிக்கும் அத்தனை மனதிற்குள்ளும் நிரந்தரச் சிம்மாசனமிட்டுக் கொள்ளும். அவன் கற்றுத் தரும் அந்தத் தன்னம்பிக்கை, உறவுகளில் தலையாய உறவாய் நம்மோடு உறவாடி எட்டமுடியாததை எட்ட வைக்கும். சோர்ந்து, தளர்ந்து போகையில் ஊட்டச்சக்தியாக இயங்கி அதனைத் துரத்தும். சோம்பலாகிறபோது சுறுசுறுப்பாக்கும். வாழ்வின் சூட்சுமம் புரிய வைத்து முன்னோக்கிய சிந்தனை விதைக்கும்.

இந்தக் கதையை உருவாக்கியது இதன் நாயகனான டாம் ஹேங்க்ஸ். வில்லியம் ப்ராய்ல்ஸ் ஜுனியர் திரைக்கதை அமைத்தார். ராபர்ட் ஜிமெக்கிஸ் இயக்கினார். டாம் ஹேங்க்ஸ் நடித்து இரண்டாயிரமாவது வருடம் வெளிவந்த "காஸ்ட் அவே" என்கிற ஆங்கிலத் திரைக்கதையை அடியற்றி எழுதப்பட்டது தான் இந்தத் "தன்னந்தனியே" நாவல்.

இந்த நாவல் எழுதுவதற்கான பிரத்யேகக் காரணம் உண்டு. தன் கையே தனக்குதவி என்று முன்னோர் சொல்லி வைத்திருக்கிறார்கள். அதன் தத்துவார்த்த உண்மையை இந்த "சக் நோலன்" கதாபாத்திரம் வாழ்ந்து காட்டியிருக்கிறது. அதற்காகவே அவருக்கு அந்த ஆண்டிற்கான "கோல்டன் குளோப்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கதைக்குள் பல புதுமைகள் புதைந்திருக்கின்றன.

******ebook converter DEMO Watermarks*******

யதார்த்தத்தளத்தில் உருவாக்கப்பட்ட அற்புதமான படைப்பு இது. சக் நோலன் கதாபாத்திரம் தன்னம்பிக்கையின் உருவகம். தனிமை பற்றி இந்த நாவல் நிறையவே உணர்த்துகிறது. கற்றும் தருகிறது. அதன் அப்பழுக்கற்ற புனிதத்தை ஒரு புள்ளியில் தொட்டும் விடுகிறது.

தனிமையில் இருப்பவர்களுக்கு மிகச் சிறந்த நண்பன் தரமான நூல்கள் என்பார்கள். இங்கே சக் நோலனுக்கு அவனின் அந்தகாரத் தனிமையே உற்ற நண்பனாகி விடுகிறது. அந்தத் தனிமை அவனுக்குள் எவ்வளவோ கற்றுத் தருகின்றன. வலிகளைத் தாங்கக் கற்றுத் தருகிறது. தற்காத்துக் கொள்ளக் கற்றுத் தருகிறது. போராட கற்றுத் தருகிறது. துணிச்சல் கற்றுத் தருகிறது. முத்தாய்ப்பாய்த் தன்னம்பிக்கையைக் கற்றுத் தருகிறது. இந்த நாவலைப் படிக்கையில் அதனை முழுமையாய் உணர முடியும்.

சிறுபிராயத்தில் தனியாக இருப்பதற்கோ, இருட்டிற்குள் செல்வதற்கோ விரும்புவதில்லை. ஆனால் துவக்கப் புள்ளியிலேயே கருவறையில் இருள் மண்டிய பிராந்தியத்தில் இருந்திருக்கிறோம். தனியே... மிகமிகத் தனிமையில் இருந்திருக்கிறோம்.

உண்மையில் நம்மை மிகவும் நேசிக்கிற, நம்மை நம்முடைய குறைநிறைகளோடு ஏற்றுக் கொள்கிற ஒரேயரு நண்பனோ நண்பியோ நாம் தான். நாம் தான் நம்மை அதிகபட்சமாய் புரிந்து வைத்திருக்கிற ஒரே நபர்.

எல்லோருக்குள்ளும் ஒரு "நார்சிஸிஸ்ட்" இருக்கக்கூடும். தன்னைத் தானே நேசிப்பவரை அப்படிச் சொல்வதுண்டு. நம்மை நாமே நேசிக்காதவர் யார் தான் இல்லை... அப்படித் தன்னோடு, தன்னோடு மட்டுமே உறவாடி வாழ நேர்ந்த ஒரு அற்புத மனிதனின் தன்னம்பிக்கை மிக்க வாழ்வு வாழ்வின் சரித்திரமாய் இங்கே பதிவாகியிருக்கிறது.

பல சமயம் நாம் உறவுகளோடு கூடியிருக்கிறோம். புரிதலோடு ஒத்த சிந்தனையோடு தானா அப்படி இருக்கிறோம். எதிர்பார்ப்புகள் ஏதாவது ஒரு வகையில்... அது தான் இந்த லௌகீக உண்டாக்கப்பட்ட உறவுகளின் உயிர்களைக் காத்து வருகிறது. உண்மையில் வலிகளின் பின்நோக்கிச் சென்று அதன் ஞானம் தொட நேர்கிறபோது எல்லாம் தெரிந்துவிடும். இந்த உறவுச் சங்கிலிகள் எத்தனை பலகீனமான குழப்பமான சிலந்தி வலை நூலிழையினால் பின்னப் பட்டிருக்கிறது என்பது புரிந்துவிடும்.

******ebook converter DEMO Watermarks*******

ஆனால் அந்த உறவுகள் தேவையாயிருக்கின்றன. இந்தப் பொருளியல் சித்தாந்தம் தலையில் அமர்ந்து சதா அழுத்தும் இந்த வாழ்வியலில் அது தவிர்க்கமுடியாத தேவையாய்த்தான் ஆகிவிடுகிறது.

எனினும் நாம் யாவரும் தனியாகத் தான் வருகிறோம். தனியாகத் தான் போயும் கொண்டிருக்கிறோம். தனிமை மட்டுமே நமக்கான தேடலின் சாசுவதமாய் இருக்கிறது. ஒருவர் ஒருவர் மாதிரி இருப்பதில்லை. எல்லாம் தனித்தனி தான்.

இதை உணர்ந்ததாலேயே புத்தர் அத்தனையையும் விட்டுவிட்டுப் போதிமரம் போய் தன்னுள் பயணித்து தன்னைத் தேடிக் கண்டுபிடித்து தன்னிலிருந்து அத்தனையையும் உணர்ந்து தன்னையுணர்ந்த தன்னையே தனக்கான துணையாக்கிக்கொண்டாரா? அதுமட்டுமே அவரது வாழ்க்கையின் சேதியாகவும் தந்துவிட்டுச் சென்றாரோ?

சக் நோலன் ஒரு எளிமையான மனிதன். அபாரமான மனிதநேயவாதி. ரொம்ப எளிமையான வாழ்வை வாழத்தான் நினைத்தான். ஆனால் சூழ்நிலை அவனை ஒரு சரித்திர புருஷனாக ஆக்கிப் பார்க்க அல்லவா தீர்மானித்திருந்தது.

தனிமை அவனுக்குள் திணிக்கப்பட்டது. அவன் அதை வேதமாக்கினான். தன்னையே நண்பனாக்கித் துணைக்கு வைத்துக்கொண்டு அவனின் உலகை விசாலமாக்கினான். அது வாழ்வின் சூட்சுமத்தை அவனுக்குக் கிரீடமாய்ச் சூட்டி விட்டுச் சென்றது. இதனை வாசிக்கும் அத்தனை மனதிற்குள்ளும் அவனின் தன்னம்பிக்கை நிரந்தர சிம்மாசனம் போட்டுச் சாசுவதமாய் வீற்றிருக்கும்.

அவன் கற்றுத் தரும் அந்தத் தன்னம்பிக்கை உறவுகளில் தலையாய உறவாய் நம்மோடு உறவாடி எட்டமுடியாததை எட்ட வைக்கும். சோர்ந்து தளர்ந்துபோகையில் ஊட்டச்சக்தியாக இயங்கி அதனைத் துரத்தும். சோம்பலாகிறபோது சுறுசுறுப்பாக்கும். வாழ்வின் சூட்சுமம் புரிய வைத்து முன்னோக்கிய சிந்தனை விதைக்கும்.

# 1

******ebook converter DEMO Watermarks*******

ஜனசஞ்சாரமற்ற நெடீய சாலை அது. அந்தப் பரந்தவெளியில் ஒரு துளி மனிதவாசனை கூட இருப்பதாய்த் தெரியவில்லை. எங்கும் வெறுமையோடியிருந்தது. எதுவும் இல்லாத தனிமையின் குறியீடாய் இருப்பதுபோல அந்தச் சாலை தன்னந்தனியே வீழ்ந்து கிடந்தது.

அது தனக்குள் பலவிதமான ஈரமான கனவுகளை புதைத்து வைத்துக் கொண்டு அதிலேயே உறைவு கொண்டிருப்பதாய்ப்பட்டது. இயற்கையான புல்வெளி இருமருங்கிலும் நிறைத்துக்கொண்டு மர்மமாய்ப் புன்னகைத்தது.

அந்தச் சாலை தனியே விடப்பட்டிருந்தது. என்றாலும் அது அனைவருக்கும் தேவையாயிருந்தது. அந்தச் சாலையும் அந்தச் சேவையை நிகழ்த்தும் பொருட்டு, விரும்பியே அந்தத் தனிமையைத் துணை சேர்த்துக் கொண்டிருந்தது.

எங்கும் ஒரே மாதிரியான நிதப்தம். நீக்கமற நிறைந்திருக்கும் நிசப்தம். அந்தச் சாலை துடைத்துவிட்டாற்போல் தூய்மையாய் இருந்தது. அது தனக்குள் ரகசியமாய் எத்தனை அழுத்தங்கள் வைத்திருந்தாலும் அதை எப்போதும் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. தன்னை அழுத்திவிட்டு உடனே கடந்துசென்று விடும் வாகனம் பற்றி அது எப்போதும் மறப்பதில்லை. வாகனம் எங்கோ புள்ளியாகிக் கரைந்து போய்விட்டாலும் அதன் மனதிலிருந்து அவை போவதேயில்லை. அதற்குள் ஒரு ஆழமான நிஜக்கதை ஏராளமான சம்பவங்களின் அனுபவங்களோடு அரூபமாய் ரகசிய உறைவு கொண்ட படிமங்களாய்ப் படிந்திருப்பதாய்ப்பட்டது.

அந்த நெடிய சாலையின் இருமருங்கிலும் பரந்த புல்வெளி. அந்தப் புல்வெளி தொடுவானம் வரை நீண்டிருந்தது. அந்தச் சாலையில் ஒரு புள்ளி தெரிந்தது. வரவர அந்த வேன் தெளிவாகி அருகில்வந்து அந்த நாற்சந்திச்சாலையைத் தொட்டு எதிர்ப்புறம் திரும்பி மறுபடி புள்ளியாகி மறைந்தது.

அதில் "ஃபெடரல் எக்ஸ்பிரஸ்" என்று எழுதியிருந்தது. அது ஒரு பார்சல் சர்வீஸ். "ஏஞ்சல் விங்" அதற்கான அடைமொழி வாசகம். ஊர்விட்டுஊர், நாடுவிட்டு நாடு, கண்டம்விட்டுக் கண்டம் என்று பிரபஞ்சத்தில் மனித சகவாசம் இருக்கிற அத்தனை இடத்திற்கும் என்ன பொருள் வேண்டுமானாலும் அனுப்புவதற்காகவே அவதாரமெடுத்திருந்த
******ebook converter DEMO Watermarks*******

நிறுவனம் தான் ஃபெடரல் எக்ஸ்பிரஸ். சுருக்கமாக ஃபெடெக்ஸ்.

அந்த வாகனம் விரைந்து வந்து ஒதுக்கமாய் நின்றிருந்த அந்த அலுவலகத்திற்குள் நுழைந்தது. அதன் பக்கத்தில் ஒரே ஒரு வீடு தனியாக அல்லது அந்த அலுவலகத்திற்குத் துணையாக நின்று கொண்டிருந்தது.

அந்த அலுவலகத்தின் முகப்பில் ஒரு ஆர்ச் இருந்தது. அதில் ஒரு தேவதை தன் பெரிய இறக்கைகளோடு நடுவில் நின்றிருந்தாள். வாகனம் உள்ளே சென்றது. உட்புறம் இருந்த வெற்றிடங்களில் அழகுக்கு குற்றுச் சவுக்கு மரங்களில் அந்த பறக்கும் தேவதையின் வடிவமைப்புகள் செதுக்கிவிடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியின் வெளியே வேறு எந்தப் புளக்கமும் தெரியவில்லை. ஆங்காங்கே சில சவுக்கு மரங்கள் அடர்ந்து தனித்தனியாக நின்றிருந்தன.

வண்டி உள்ளே வந்து நின்றதும் வாகனத்தின் கதவு மேல்நோக்கி விலகிக்கொண்டது. சில நொடி இடைவெளியில் உள்ளேயிருந்து ஒரு நபர் வெளிப்பட்டான். அங்கே சென்று அழைத்தான். உள்ளே ஒரு பெண் வேலை செய்து கொண்டிருந்தாள். அவன் அங்கே இருந்த அந்தப் பார்சலை எடுத்துக்கொண்டுபோய் உள்ளே வைத்துக் கதவை இழுத்துவிட்டான்.

# 2

மறுபடி திறக்கையில் அது எங்கும் பனி¢ படர்ந்திருந்த மாஸ்கோவில் இருப்பது தெரிந்தது. அந்த பார்சல் அங்கிருந்த ஒரு ரஷ்யக் கிளையின் ஊழியனால் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே ஒரு வீட்டில் பட்டுவாடா செய்யப்பட்டது. கதவைத் திறந்து அதைப் பெற்றுக்கொண்டவனுக்குப் பின்னால் ஒரு இளம்பெண் தூக்கக் கலக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள். அது எங்கேயோ உள்ள ஒரு மனைவி தூரதேசத்திற்கு வந்து பணி செய்து கொண்டிருக்கும் தன் கணவனுக்கு அனுப்பி வைத்திருந்த பார்சல். பெற்றுக்கொண்டு கையெழுத்திட்டு அனுப்பி வைத்தான்.

ஃபெடெக்ஸ் பார்சல் சர்வீசுக்குக் கிளைகள் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் இருக்கும் எனத் தெரிந்தது. அது எத்தனையோ உறவுகளை உருவாக்கிக்கொண்டிருந்தது. ஒட்ட வைத்துக் கொண்டிருந்தது.

******ebook converter DEMO Watermarks*******

உண்மையென நம்ப வைத்துக் கொண்டிருந்தது.

இந்த நிறுவனத்தில் தான் சக் நோலன் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அதில் ஒரு முக்கியமான பதவி வகித்திருந்தான். அந்த நிறுவனத்தின் ஆபத்பாந்தவன் அவன். ட்ரபிள் சூட்டர். எப்படிப்பட்ட பிரச்னை வந்தாலும் அவன் உடனே அங்கே இருப்பான். எப்படிப்பட்ட பிரச்னைகளையும் லெகுவாகத் தீர்த்து வைத்து விடுவான். சமயோஜிதமானவன். முடியாது என்கிற வாசகத்தை அவனது அகராதி அறிந்து கொள்ள விரும்பியதேயில்லை.

அவன் அந்த நிறுவனம் இருக்கிற அத்தனை பகுதிகளுக்கும் சென்று அங்கிருக்கிற ஊழியர்களுக்கு ஆலோசனைகள் தருவான். எப்படி வெற்றிகரமாக செயல்படுவதென வகுப்பெடுப்பான். நேரம் அவனது உயிர். எப்படியெல்லாம் நேரத்தைக் காப்பாற்றலாம் என்பதில் அவன் ஒரு அகராதியே போடலாம். நேரத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுகிற வித்தை தெரிந்தவன். எளிமையாய் அதன் சூட்சுமத்தைத் தன் ஊழியர்களுக்குக் கற்றுத் தருவான். அனுபவப்பயிற்சி எடுப்பான். அதனால் அவன் வாழ்க்கையின் அதிகநேரம் விமானப் பயணத்தில் தான் தீர்ந்துகொண்டிருப்பதாய்ப்பட்டது.

அவனுக்கு நேரம் மிகவும் முக்கியம். சொன்னநேரத்திற்கு வேலையை முடித்தாக வேண்டும். அன்பானவன். ஆனால் வேலை என்றால் கராரானவன்.

மாஸ்கோவில் துவங்கியிருந்த அதன் கிளை அலுவலகத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளித்து முடித்த கையோடு அடுத்த வேளை அவனுக்காகக் காத்திருந்தது. உடனே அவன் ஆசியாவில் உள்ள ஒரு பிராஞ்ச் செல்ல வேண்டியிருந்தது. அதற்குள் அவன் காதலியை ஒரு முறை சந்திக்க விரும்பினான். அதன் தலைமையிடமான அமெரிக்காவில் உள்ள மெம்பிஸ் நோக்கிப் பயணிக்க மாஸ்கோ விமானநிலையம் வந்தடைந்தான்.

செல்ஃபோனில் காதலியை அழைத்தான். அமெரிக்காவில் அவள் அறையில் லேன்ட் லைன் சிணுங்கியது. அதில் பதிவு செய்யப்பட்டிருந்த அவளின் ரெடிமேட் குரல் முக்கியமான விசயம் ஏதாவது தனக்குத் தெரிவிக்கவேண்டுமென்றால் அதனை வாய்ஸ்மெயிலில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொண்டது. அந்த லேண்ட் லைன் இருந்த இடத்தின் அருகே கெல்லி, சக்நோலன் இருவரும் புகைப்படத்தில்
******ebook converter DEMO Watermarks*******

சேர்ந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். அது ஒரு எளிமையான நிறைவான வசிப்பிடம் என்பது பார்த்ததும் தெரிந்தது.

அந்த புகைப்படத்தில் நோலன் கூடுதல் அழகாய்த் தெரிந்தான். ஏற்றி¢ச் சீவப்பட்ட கேசம். மழுங்க வழித்திருந்த முகம். மீசை இத்யாதிகள் கிடையாது. சிவந்த நிறம். கண்களில் மட்டும் சொல்லில் அடங்காதவொரு தேடல்... தவிப்பு... ஈரம்...

நோலன் வாய்ஸ்மெயிலில் பேசினான். "ஒரு குட் நியூஸ் அப்புறம் ஒரு பேட் நியூஸ் கெல்லி... இப்ப நான் மாமனிதர் லெனின் வாழ்ந்த பூமியில இருந்து தான் பேசிட்டிருக்கேன். மாஸ்கோ வந்த வேலை வெற்றிகரமா முடிஞ்சிருச்சி. கிட்டத்தட்ட இன்னும் பதினெட்டு மணி நேரத்துல உங்கிட்ட இருப்பேன். உன்னை வந்து சந்திச்சிட்டு நான் அடுத்ததா மலேசியா பயணமாக வேண்டியிருக்கு. அதுக்கிடையில உன்னைச் சந்திக்க அய்யா மெம்பிஸ் வராரு.

பேட் நியூஸ் என்னன்னா என் பல்லுல ஏதோ உருத்திட்டிருக்கிறாப்ல இருக்கு... செமையா வலிக்குதுப்பா. வந்ததும் பாத்துக்கலாம். உன்னெ இப்பவே முத்தங்குடுங்கனும்னு ஆசையாசையா இருக்கு... ஆசைகளைத் தேக்கி வச்சிக்கறதைத் தவிர இன்னும் பதினெட்டு மணி நேரத்துக்கு என்னால என்ன செய்ய முடியும்... அப்படித்தான் இந்த "இடைவெளி" நெனச்சி ஏமாந்திட்டிருக்கும். அதுக்குத் தெரியுமா... என்னோட நினைவுகள் நெனச்ச நேரத்துல காலங்கடந்து உன்னை உன் நினைவுகளோட தூக்கிட்டு வந்து என் முன்னால நிறுத்திடுங்கற சேதி...

கெல்லி... என் புரிதலின் புரிதலே... என் மனசை ஆளும் மான்பரசியே... நான் உன்னையே நெனச்சிட்டிருக்கேன்டா... உன் பிரிவை என்னால தாங்கிக்க முடியல... ஆனாலும் இந்தப் பிரிவுக்கு நான் நான்றி சொல்லியாகனும்... உன்னெ எந்த அளவு நான் நேசிக்கிறேங்கறதை உணர்த்திட்டேயிருக்கு இல்லையா... ஐ லவ் யூ கெல்லி... ஐ லவ் யூ மோர் தன் எவ்ரிதிங் அன்டர் தி யுனிவர்ஸ்..." என்று ஏர்போர்ட்டில் நின்றபடி அவன் வாய்ஸ்மெயில் அனுப்பினான்.

அந்தச் சின்ன ரகக் கம்பெனி விமானத்தில் ஏறிக்கொண்டான். ரொட்டி உண்டான். உடனிருந்த அதிகாரிக்கும் கொடுத்தான். திராட்சை ரசம் குடித்தான்.

ஏர்போர்ட் வந்திறங்கியதும் மறுபடி அவர்கள் வசிப்பிடத்திற்கு

******ebook converter DEMO Watermarks*******

அடித்தான். அவளி'ன் ரெடிமேட் குரல் சொன்னதையே சொன்னது. புரிந்து கொண்டான். அவள் தன்னுடைய ஆய்வு

மேற்க்கொண்டிருக்கிற இன்ஸ்டிடியூட் சென்றாகிவிட்டதை. ஏர்வே ட்ராலி வாகனம் அவனையும் அந்தச் சக அதிகாரியையும் ஏற்றிக்கொண்டு ஏர்போர்ட் வாசலில் போய் இறக்கி விட்டது. போகும் வழியில் சகஅதிகாரி பல் டாக்டர் யாரோ ஒருவன் பற்றிச் சொன்னான். அதற்குள் வாசல்வந்து விட்டது. அவன் அங்கிருந்து விடைபெற்றான்.

நேராக கெல்லி இருக்கும் அலுவலகம் சென்றான். லிஃப்ட் ஏறி அந்தப் பகுதிக்குப் போனான். அவள் இருக்கும் இனஸ்டிடியூட் உள்ளே நுழைந்து, ஆராய்ச்சிக்கூடம் கடந்து முன்னால் விசாரித்தான். அந்தப் பெண் தகவல் தந்தாள்.

"அவங்களோட தீசிஸ் பேப்பர்களை ஜெராக்ஸ் எடுத்திட்டிருக்காங்க... அந்த அறையில போயிப் பாருங்க..."

செல்லும் வழியெங்கும் தவளையின் விதவிதமான படங்கள் ஒட்டப்பட்டிருந்தது. உள்ளே வந்தான். கெல்லி அந்த அறையில் தனியாக நின்றபடி ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டிருந்தாள். அவன் அசையாமல் நின்றபடி அவளைப் பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் தற்செயலாக உள்ளுணர்வின் உந்துதலில் திரும்பினாள். பார்த்தாள். புன்னகைத்தாள். பறந்து வரும் பறவையாய் இரண்டு கைகளும் விரித்து அவனை நெருங்கி வந்து கழுத்தோடு அணைத்துக் கொண்டாள். உதடுகள் கதகதப்புடன் ஒற்றிக்கொண்டன.

"இன்னம் ஒன்னு..." என்றாள்.

தாராள மனதோடு தந்தான்.

தழுவிக்கொண்டார்கள். அவள் ப்ரவ்ன் நிற கேசம் அடர்ந்திருந்தது. வட்டமாய் மெலிதான

ஃபிரேமில் பவர்கிளாஸ் அணிந்திருந்தாள். சிலிம்மாக இருந்தாள். ஜீன் பனியன்

******ebook converter DEMO Watermarks*******

ஓவர்கோட் போட்டிருந்தாள். நீளமான நாசி. அமைதி படர்ந்திருந்த ஆழமான கண்கள் என்று எளிமையாய் ஆனால் ஏதோவொரு கூடுதல் வசீகரம் அவளுக்குள் புகுந்திருந்தது தெரிந்தது. அந்த மோனாலிசப் புன்னகை அணைக்கையில் அவனைக் கவசமாய்ச் சூழ்ந்து கொண்டது.

இருவரும் நளினமாய் பாலே ஆடுவதுபோல மெலிதாய்ச் சுற்றினார்கள். புன்னகையோடு முத்தம் பரிமாறிக் கொண்டார்கள்.

# 3

இரவு. அவர்கள் வசிப்பிடம். அந்தத் தொலைக்காட்சி அருகே இருந்த கண்ணாடி அலமாரியில் சேர்ந்து எடுத்துக்கொண்ட பலவிதமான புகைப்படங்கள் இருந்தன. அவர்கள் உல்லாசமாய் மேற்கொண்ட சைக்கிள் பயணம், பனிச்சறுக்குப் பயணம், கார் பயணம், படகுப் பயணம் என்று விதவிதமாய் மேற்கொண்டிருந்த பயணங்களின் அடையாளங்கள் அந்த இடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

எங்கும் அமைதி. தொலைக்காட்சியில் "சி.என்.என்" செய்திச் சேனல் ஓடிக் கொண்டிருந்தது. எதிரேயிருந்த சோபாவில் சாய்ந்திருந்த நிலையில் கெல்லி பார்த்துக்கொண்டிருந்தாள். அருகில் அமர்ந்தநிலையிலேயே சக் நோலன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

நாடு விட்டு நாடு பயணிக்கையில் காலமாற்றத்தின் சிக்கல் மனதுள் செய்யும் ரகளையால் அப்படித் தூங்க வைத்துவிடும் தான். அவன் கையில் வைத்திருந்த ரிமோட் கண்ட்ரோலை அலுங்காமல் எடுத்துத் தொலைக்காட்சியை அணைத்தாள். அவன் அருகே நெருங்கி அவனை ஆதர்சத்துடன் அணைத்துக்கொண்டு அவளும் அப்படியே சோபாவில் படுத்துக்கொண்டாள். அவனின் கதகதப்பு அவளை நிறைக்க கண்கள் துயில்கொள்ளத் துவங்கியது.

மறுநாள் நண்பர்கள், உடன் பணிபுரிபவர்கள், முக்கிய உறவினர்கள் எனப் புடை சூழ விதவிதமான உணவுகளை பெரிய உண்பதற்கான மேஜையைச் சுற்றியமர்ந்து ருசித்துக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக் கிழமைகளின் சங்கமிப்பு. சமையல்காரப் பெண்மணி இன்னொரு வகை உணவைத் தட்டில் சுடச்சுட எடுத்துக் கொண்டு வந்து சபையில் வைத்தாள். அனைவரும் உற்சாகமாய்ச் சாப்பிட்டபடி சளசளவென

******ebook converter DEMO Watermarks*******

மகிழ்ச்சி தெறிக்கப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சக் நோலனிடம் துருக்கி பற்றிக்¢ கேட்டார்கள். அவன் தன்னுடைய உலக நாடுகள் பயணத்தில் அறிந்த விசயங்களைச் சுவாரஸ்யத்துடன் பகிர்ந்து கொண்டே சாப்பிட்டான். அவன் சென்ற இடங்களில், தான் பனியாற்றும் நிறுவனத்தை எப்படிப் பிரபலமாக்கினான் என்பது பற்றிச் சொன்னான். அதற்காக அவன் கையாண்ட உத்திகள்பற்றி விளக்கினான்.

அவன் சரியாகச் சாப்பிடுகிறானா என அவள் அத்தனை அமர்க்களத்திற்கு நடுவேயும் கவனித்துக் கொண்டாள்.

அவன் கடிகாரத்தைக் காட்டச் சொன்னாள். பார்த்தாள். "நேரம் இருக்கு" என்று புன்னகைத்தாள். அவன் பதினைந்து நிமிடத்தில் விருந்துண்ணும் வைபவத்திற்கு ஆகும் என்றான். அப்போது துவங்கி பதினான்கு நிமிடந்தான் ஆகியிருந்தது. கெல்லி ஒத்துக்கொண்டாள். "நீங்க ஜெயிச்சுட்டீங்க... சொன்ன மாதிரி நான் உங்களுக்கு அஞ்சி டாலர் தந்திடறேன்..."என்று சிரித்தாள். "அப்போ... நான் உன்னை ஜெயிச்சிட்டேன்..." என்று சொல்லிக் கேலியாகச் சிரித்தான்.

"எப்பக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?" என்று ஒரு நலம்விரும்பி கேட்டார்.

சக் நோலன் சொன்னான்.

"கெல்லி இப்பத்தான் தோல்வியில முடிஞ்ச முதற்கல்யாண முறிவுல இருந்து மெல்லமெல்ல விடுபட்டுட்டிருக்கிறா... நான் அவசரப்படலெ... அவெ மனசு தயாராகற வரை, அது எத்தனை நாள் ஆனாலும் காத்திருக்கத் தயாரா இருக்கேன்..."

"ஆன்ட் கெல்லி ஏற்கனவே திருமணம் பண்ணினவங்க மாதிரியே தெரியலெ..."

"இப்ப அது தான் உண்மை..." என்றான்.

கெல்லி மோனாலிசாவாய்ப் புன்னகைத்தாள்.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சுருக்கென்றது. "ஆ" என்றான்.

******ebook converter DEMO Watermarks*******

அவள் கவனித்து விட்டாள். அவன் பல் கூச்சத்திற்காக இப்போது தான் ஒரு பல் மருத்துவரிடம் போய்

வந்திருந்தார்கள். அவன் ஏதோ குடைந்துவிட்டு பூச்சுத்தடவிவிட்டு அனுப்பி வைத்தான். அதில் எதுவும் பிரச்னையாகிவிட்டதா? பார்க்கலாம்.

"கல்லு எதையாச்சும் கடிச்சிட்டியா?" என்று கூட்டம் விசாரித்தது.

"இல்லை" என்றான்.

ஆனால் பல் வலித்தது.

என்ன பிரச்னையாக இருக்கும்? லேசாக உடைந்திருக்குமோ?

அவன் அவனுடைய பேன்ட் பாக்கெட்டிலிருந்த டே பிளானர் எடுத்து இன்று என்ன நிகழ்ச்சிகள் எனப் பார்த்தான். அதைக் கவனித்த கெல்லி உடனே புரிந்துகொண்டு விட்டாள்.

விருந்து முடிந்தது.

வந்திருந்த நண்பர் குலாம் வெளியில் நின்றிருந்த காரில் புறப்பட்டார்கள்.

# 4

"அப்படின்னா இந்தப் பயணத்தைக் கேன்சல் பண்ணிடலாமே?"

"வேணாம் வேணாம்... நான் இந்த மலேசியப் பயணம் நிச்சயம் போய்த்தான் ஆகனும்..."

"நிச்சயம் புத்தாண்டு வைபவத்தை இங்கெ நாம ரெண்டு பேரும் சேந்து கொண்டாடறோம். அதுல எந்த மாற்றமும் இல்ல... புரிஞ்சுதா?"என்றாள் கெல்லி.

"நிச்சயமா"

"எப்ப அங்கெ வேலை முடியுது?"

******ebook converter DEMO Watermarks*******

"ஜனவரி பனிரெண்டு..."

"இங்க எப்ப வருவீங்க?"

"அநேகமா பதிமூனு"

"வந்திருவீங்கள்ல... நீங்க இந்தப் புத்தாண்டுல என்கூட இருக்கனும்னு விரும்பறேன்..." அவள் குரலில் இனம்புரியாத தவிப்பு இருந்தது.

"நிச்சயமாடா"

அவள் புன்னகைத்தாள்.

"என்ன?"

"நான் உங்களுக்காக ஒரு பரிசு வச்சிட்டு இருக்கேன்..."

"அதைக் கார்ல வச்சிக்கலாம்..." என்றான்.

கார் விமானநிலையம் வந்தடைந்தது. இது அவளுக்குப் பிடித்த மாடல் என்கிற காரணத்தினாலேயே வாங்கியிருந்தான். ஃபெட்டெக்ஸ் விமானம் குட்டியாய் அழகாய் நின்று கொண்டிருந்தது. ஊழியர்கள், அதிகாரிகள் இவனை வரவேற்கக் காத்திருந்தார்கள். கார் நின்றதும்

உள்ளேயிருந்தபடியே, "ரெண்டு நிமிசத்துல வந்தர்றேன்..." என்றான். அவர்கள் தலையசைத்து விட்டு அவனின் அந்தரங்க கணங்களை அவனுக்காக விட்டுவிட்டு விலகினார்கள்.

உள்ளே ஒருவரையருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவள் அந்தப் பரிசைத் தந்தாள். "தேங்ஸ்" சொல்லி வாங்கினான். அதை உற்றுப்பார்த்தான்.

"இதைக் கட்டியிருக்கிற ஜிகினா கயிறு நல்லாயிருக்கு" என்று அவிழ்த்தான். கண்கள் அவளைப் பார்த்தன. அவள் உதடுகள் புன்னகைத்தது. சுற்றியிருந்த வண்ணத்தாளை அவிழ்த்தான், "இந்த டப்பாகூட ரொம்ப நல்லாருக்கு...."என்றான். அவள் மீண்டும் அத்தனை அழகாய்ப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் அவனின் உயிர் தெரிந்தது.

******ebook converter DEMO Watermarks*******

அதைத் திறப்பதற்கு முன்னால் அவன் அது என்னவாக இருக்கும் என யோசித்துப் பார்த்தான். காலண்டராக இருக்குமா? கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையாக இருக்குமா?என்று என்னென்னவோ கற்பனையில் நினைத்தபடி அதைத் திறந்தான்.

அதற்குள் ஒரு லாக்கெட் இருந்தது. எடுத்தான்.

"ரொம்பரொம்ப நல்லாருக்குப்பா..." என்றபடி அதைத் திறந்தான்.

உள்ளே அவளின் அழகான படம் பொருத்தப்பட்டிருந்தது.

"அட... நான் எடுத்த ஃபோட்டோல இது... எனக்கு உன் படங்கள்லயே ரொம்பவும் பிடிச்ச படம்ப்பா இது..." என்றான் உற்சாகத்துடன்.

"எனக்குத் தெரியாதா?" என்றாள் அவள்.

"இதை எப்பவுமே என் கூடவே வச்சிக்கப் போறேன்..." என்றான்.

"இது என் தாத்தா வச்சிருந்தது... என் ஃபேமிலியோட நினைவுச்சின்னமா என்கிட்ட இருக்கற இந்தப் பொருளை உங்களுக்குப் பரிசா குடுக்கறதுல உள்ளூர அப்படியரு சந்தோஷம்..." என்று புன்னகைத்தாள்.

அதில் உள்ள நேரத்தைச் சரி செய்தபடி, "இதுல இருக்கற மெம்பிஸ் நேரத்தை கெல்லி நேரமா மாத்தி வச்சிட்டேன்..." என்றான்.

அவள் நிறைந்து போனாள்.

அவன் அவளுக்கு ஏற்கனவே தந்திருந்த பரிசுகள் அத்தனையும் அவனுக்குப் பிடித்த ஊதா நிறத்தில் இருந்தது.

நீ என் பரிசுகளைப் பத்திச் சொல்லவேயில்லையே... பிடிக்கலையா?" என்றான்.

உடனே, "அப்பிடியெல்லாம் இல்லெ... எனக்கு ரொம்பவே புடிச்சிருக்கு... இந்த டைரி... ரொம்ப நல்லாருக்கு..."

"நீ உன்னோட அழகான அனுபவத்தைக் குறிச்சி வச்சிக்கலாம்..." என்றான்.

******ebook converter DEMO Watermarks*******

அவள் புன்னகைத்தாள்.

"பேஜர் பத்திச் சொல்லவேயில்லையே?" என்றான்.

"ரொம்ப நல்லாருக்கு... அதுல இருந்த ஊதா நிறத்திலான ஒரு சின்ன வீட்டிற்குள் இருந்து பார்க்கும் ஒரு குழந்தையின் படத்தைக் காட்டி அவள் குதூகலித்தாள்.

"மிதமான ஒளியில் விளக்கை அணைத்து விட்டு இரவு நேரத்தில் இதைப் பார்த்தால் இதன் வேலைப்பாடு அசத்தும்... இதுல உன்னோட நிகழ்ச்சி நிரல்களைத் தேதி வாரியாப் பதிவு பண்ணி வச்சிட்டேன்னா அது சரியான நேரத்துக்கு அதிர்ந்து உனக்கு ஞாபகப்படுத்தும்..." என்றான்.

அடுத்ததாய் அவன் பரிசளித்திருந்ததில் கை துடைக்கிற டவல்கள் இருந்தன. அதைப் பார்த்துவிட்டு, "இதை நான் பயன்படுத்தறப்பல்லாம்... உங்களை நெனச்சுப்பேன்..." என்றாள்.

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

அந்தப் பார்வையில் அவளை அடுத்துச் சந்திக்கிறவரை நினைவோடு அள்ளிச்செல்கிற அளவு அவளை விழித்திரை வழியாக நினைவுத்திரைக்கு அள்ளிஅள்ளிச் சேமிப்பதை உணர்ந்து அவள் பெருமிதத்தில் நாணினாள்.

"ஹேப்பி கிறிஸ்மஸ்..." என்றான் அவன்.

"ஹேப்பி கிறிஸ்மஸ்..." என்றாள் அவளும். உடனே இருவரின் உதடுகளும் கொஞ்சிக்கொண்டு

உலகின் அத்தனை பரவசங்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டன.

"ஐ லவ் யூ..." என்றான்.

"ஐ லவ் யூ டூ..." என்றாள்.

அவன் காரிலிருந்து இறங்கிக்கொண்டான். அவள் விமானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவளுக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. வெளியே கை நீட்டி அவனை அழைத்தாள்.

******ebook converter DEMO Watermarks*******

"சக்"

அவன் திரும்பினான்.

"சாவியெக் குடுக்காமப் போறீங்க?"

அவன் மறுபடி அவளை நோக்கி வந்தான்.

கார் சாவியைத் தந்தான்.

"கொஞ்சம் முன்னாடி நான் காருக்குள்ளெ உன்கிட்ட என்னோட பிரசன்ட்னு குடுத்த டைரி, பேஜர், டவல் மாதிரியான பரிசு இல்ல இது... அதெல்லாம் சும்மா உன்னோட

விளையாடறதுக்காகக் குடுத்தேன்... இது தான் நான் உனக்குக் குடுக்க நெனச்ச உண்மையான பரிசு..." என்றான்.

"இது என்னைச் சிலிர்க்க வைக்குது..." என்றாள்அவள்.

"புத்தாண்டுத் திருநாள்ல இந்தப் பரிசைப் பாக்கறப்போ கூடுதலா இப்பச் சொல்லப் போற வார்த்தையையும் சேத்துக்க... ஐ லவ் யூ..." என்றுவிட்டு நகர்ந்தான்.

"நான் சொன்ன மாதிரி வந்துருவேன்..." என்று கையசைத்தான்.

அவள் பிரமிப்போடு அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவன் போய்விட்டான்.

# 5

இதோ அவன் பசிபிக் பெருங்கடல் மீது அந்த ஜாம்போ செட் விமானம் ஏறிப் பறக்க ஆரம்பித்து விட்டான். பைலட் நீங்கலாக பயணி என்று பார்த்தால் அவன் மட்டும் தான் அதில் இருந்தது. தனியான பயணம்.

அவன் தன் இருக்கையில் அமர்ந்ததும் கண்களை ஒளியிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் கண் மீது அந்தத் துணிப்பட்டையை

******ebook converter DEMO Watermarks*******

அணிந்து கொண்டு விட்டு நிம்மதியான நித்திரைக்குள் மூழ்கினான்.

சிறிது நேரம்கூட ஆகியிருக்காது. விமானம் சுண்டிவிட்ட மாதிரி ஒரு முறை குலுங்கியது. அவன் சட்டென கண் பட்டையை நீக்கிப் பார்த்தான். கண்களைத் தேய்த்துவிட்டுக் கொண்டான். தன் பாக்கெட்டில் இருந்த அந்த லாக்கெட் எடுத்து அதில் புன்னகைத்துக் கொண்டிருந்த கெல்லியைப் பார்த்தான்.

அதைத் தன் பார்வையில் படும்விதத்தில் தன் இருக்கையின் அருகில் வைத்தான். எழுந்து அருகில் நின்றிருந்த விமானஓட்டியைக் கேட்டான். அவர் தண்ணீர் ஊற்றிக் குடித்தபடி காத்து வேகம் கொஞ்சம் அதிகமாயிருக்கு... அதான்..."என்றான்.

"இப்ப நாம எங்கெ இருக்கோம்?"

"பசிபிக் கடல் மேலெ..."

அவன் சோப்பு எடுத்துக்கொண்டு பாத்ரூம் சென்றான்.

கெல்லி தனியாக புன்னகைத்துக்கொண்டிருந்தாள்.

பாத்ரூம் சென்றான். வாஷ்பேஷின் முன் போய் நின்றான். கடிகாரத்தைக் கழற்றி வைத்தான். குனிந்து முகம் அலம்பத் துவங்கினான். கழுவி விட்டு நிமிர்ந்து கண்ணாடியில் முகம் பார்த்தான். ஈரத்தைக் கைகளால் வழித்துவிட்டான். அப்போது அவனது இடது கை கட்டைவிரலில் ஏதோ சிறுகாயத்திற்காகச் சுற்றியிருந்த பேன்ட்எய்ட் பட்டது. அதைக் கழற்றிப் போட்டான். கண்ணாடியைப் பார்த்துச் சிரித்தான்.

அடுத்த நொடி பெரிய சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு ராட்சஸ குலுக்கம். ஒரு நொடி சகலமும் உறைந்துகொண்டது. இங்கே என்ன வெடிச் சத்தம்?

பைலட் அறிவித்தான்.

"எங்கயோ தீப்பிடிச்சிருக்கு..."

உதவிக்கு இருந்த ஸ்டேன்ட் பை பைலட் ஓடி வந்து சக் நோலன் முகத்தில் ஆக்சிஜன் மாஸ்க் மாட்டிவிட்டான். எதையாவது பிடித்துக்
******ebook converter DEMO Watermarks*******

கொள்ளும்படிச் சொன்னான். உள்ளேபோய் எக்ஸ்டிங்யூசர் எடுத்து வருவதாகச் சொல்லிப் போனான்.

இருக்கையில் அமர்ந்து சீட் பெல்ட் அணிந்துகொண்டு எதையாவது இறுக்கிப் பிடித்துக் கொள்ளச் சொன்னார்கள். சக் நோலன் பிடித்துக் கொண்டான்.

"ஒரு வேளை நாம மூழ்க வேண்டி வரலாம்..." என்றான்.

அவர்கள் பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தார்கள். பைலட் தங்களுக்குள் கட்டளையிட்டுக்கொண்டார்கள். உடனே விமானத்தைக் கீழ எறக்கு என்றான் சீனியர் பைலட்.

சக் நோலன் கையில் ஒரு லைஃப் ஜாக்கெட் வழங்கப்பட்டது.

அவன் அருகில் இருந்த லாக்கெட்டில் கெல்லி புன்னகைத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு விமானஓட்டி அந்த மிதவைக் கச்சையைப் போட்டுக்கொள்ளும்படிக் கத்தினான். அதைப் போட்டுக்கொண்டிருக்கையில் மறுபடி லேசாய் குலுங்கியது. அந்த லாக்கெட் முன்னால் தாண்டிப்போய் விழுந்தது. அவன் தரையில் விழுந்தபடி உயிர்ப் பிரயத்தனப்பட்டு அந்த லாக்கெட்டை+ நோக்கி நகர முயன்றான். பின்னால் பிடித்து இழுப்பதுபோல ஏதோ விசை இழுத்தது. அவன் அந்த லாக்கெட் நோக்கி விடாமல் முன்னேறினான். எடுத்துவிட்டான். பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அந்த ஆட்டத்தில் லைஃப் ஜாக்கெட் அணிந்துகொள்வது மிகுந்த சிரமமாயிருந்தது. அணிந்து கொள்ளப் போராடினான். விமானத்தின் முன்கண்ணாடி வழியாக இடியும், மின்னலும், பலத்த காற்றுமாய் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

அவன் கண் முன்னால் விமானம் தண்ணீருக்குள் மூழ்கிக் கொண்டு வந்த காட்சி தெரிந்தது. அடுத்த நொடி அந்தச் சரிவு அவனை ராட்சஸத்தனமாய் இழுத்துப்போட்டு அறைந்தது. நொடியில் அவன் சுருண்டு விழுந்தான். எழுந்தபோது அவன் விமானத்திற்குள் ஏதோ ஒரு பகுதியில் கழுத்தளவு தண்ணீரில் இருந்தான். மேலே எதையோ எட்டிப் பிடித்தான். அவன் கையில் லைஃப் வெஸ்ட் இருந்தது. அதை

******ebook converter DEMO Watermarks*******

இறுக்கமாய் அணைத்துப் பிடித்துக் கொண்டான். ஒரு நொடி நொடிப்பதற்குள் நூற்றுக்கணக்கான அடி கடலுக்குக் கீழே போய் விட்டது விமானம். அதன் மேற்பாகம் பிய்த்துக்கொண்டு உள்ளே தண்ணீர் புகுவதை சக் நோலன் பார்த்தான்.

அடுத்த கணம் கையிலிருந்த லைஃப் வெஸ்ட் சாதனத்தின் பட்டன் தட்டி விட்டான். அது ஒரு மிதவை ரப்பர் போட்டாக விரிந்து உடனே மடமடவென மேலே சென்று கடல் மட்டத்திற்குச் சென்றுவிட்டது. அதிலிருந்து நீண்டிருந்த கயிற்றைப் பிடித்து அவன் மேல்நோக்கி உதைத்தபடிச் சென்றான். மேலே வந்து விட்டான். பெரிதாய் மூச்சுவிட்டான். யோசிக்க அவகாசமிருக்கவில்லை.

கடல் பரப்பெங்கும் தீச்சுவாலை மிதந்து கொண்டிருந்தது. அவன் மிகுந்த பிரயத்தனப்பட்டு அந்த அலைகளின் அலைக்கலைப்புக்கு மத்தியில் தன் சக்தி அத்தனையும் திரட்டி எப்படியோ அந்த மிதவைப் படகிற்குள் ஏறி விழுந்தான்.

அவன் கண் முன்னால் விமானத்தின் வால் பகுதி கொஞ்சங்கொஞ்சமாய் மூழ்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. மழை சூரைக்காற்றின் தாளத்திற்கேற்ப ஆடிக்கொண்டிருந்தது.

அலைகள் மேலும்கீழும் எழுந்து அவனைப் பக்கவாட்டில் உலுக்கிக்கொண்டிருந்தது. அவன் அந்த வட்ட வடிவிலான ரப்பர் மிதவையினுள் மல்லாந்து படுத்தபடி சுற்றிலும் உட்புறம் இருந்த கயிற்றை இருபக்கமும் இறுக்கமாய்ப் பிடித்துக்கொண்டான். அந்தப் படகை இயக்குவதற்காக உள்ளே செருகி வைக்கப்பட்டிருந்த சிறிய மரத்துடுப்பை உள்ளே பத்திரப்படுத்திக்கொண்டான். மின்னல் தொடர்ந்து மிளிறிக் கொண்டிருந்தது. அலைகள் கோரத்தனமாய் ஆடிக்கொண்டிருந்தது. "ட்ரிஃப்ட் எஃபெக்ட்" அந்த மிதவையை அந்த இடத்திலிருந்து மிக வேகமாக எங்கோ இழுத்துச் சென்றுகொண்டிருந்தது தெரிந்தது. மின்னல் மட்டும் இல்லையென்றால் அங்கே இருள் மட்டுந்தான் துணை. மின்னல் விட்டுவிட்டு அவனின் இருப்பை வெளிச்சமிட்டுக் காட்டிக்கொண்டிருந்தது.

அந்த மிதவை எதன் மீதோ மோதியதில் அதிலுள்ள காற்று கொஞ்சங்கொஞ்சமாய் வெளியேறத் துவங்கியது. சக் மயங்கத் துவங்கினான். மின்னல் தொலைந்து போனதில் என்ன நடந்ததென்று பார்க்க முடியாதபடி இருள் அந்தப் பிராந்தியம் எங்கும் நிறைத்துக்
******ebook converter DEMO Watermarks*******

கொண்டது.

# 6

ஒளி மெல்லமெல்ல வந்தது. சக் நோலன் மயக்கம் தெளியத் துவங்கியது. விழித்தபோது கண்களில் சூரியன் நேராக வந்து பாய்ந்து கொணடிருந்தது. காற்று பாதி இறங்கிய நிலையில் மிதவை எங்கோ கரை ஒதுங்கியிருந்தது.

உயிரோடிருக்கிறேனா? என்ன நடந்தது? விமானத்தில் பைலட்டிடம் பேசிக்கொண்டிருந்த போது அந்தச் சத்தம் கேட்டது. அதன் பிறகு என்ன ஆனது? பைலட் எங்கே போனார்? கடைசி நேரத்தில் உதவிய அந்த இன்னொரு விமானஓட்டி எங்கே? இபபோது நான் எங்கிருக்கிறேன்?

அது ஒரு தீவு.

சக் நோலன் அதிலிருந்து இறங்கினான். அலை அவனை குப்புறப்பிடித்துதுத் தள்ளிவிட்டது. அவன் அந்தக் கடற்கரையின் ஈரமணலில் சக்தியற்றவனாய்த் தவழ்ந்துதவழ்ந்து சென்றபடி ஒவ்வொன்றாய்க் கிரகித்தான். உட்கார்ந்து கடலை வெறித்துப் பார்த்தான்.

பாக்கெட்டில் இருந்த பேஜர் எடுத்துப் பார்த்தான். அதிலிருந்து தண்ணீர் ஒழுகி ஓடியது. ஞாபகம் வந்தவனாய்ப் கால்சட்டைப் பையிலிருந்து அந்த லாக்கெட் எடுத்துத் திறந்து கெல்லியைப் பார்த்தான். கடிகாரம் ஓடுகிறதா எனப் பார்த்தான். காதில் வைத்துச் சோதித்தான். ஆட்டிப் பார்த்தான். பின்னர் அத்தனையையும் தன் பாக்கெட்டிற்குள் போட்டுப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அவன் வெற்றுக் காலில் தவங்கித்தவங்கி நடந்தான். விமானத்தில் அமர்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தபோது ஷ§ கழற்றி விட்டுவிட்டு வெறும் சாக்ஸ் காலோடு படுத்திருந்தான். வெறுங்காலில் நடக்கச் சிரமமாயிருந்தது. கெந்திக்கெந்தி நடந்தான். கரையோரமாய் ஒதுங்கி இருந்த சில ஃபெடெக்ஸ் பார்சல்களை எடுத்துக்கொண்டான்.

மணல்வெளியில் நின்றுகொண்டு மிரட்சியோடு பார்த்தான். ஒரே இரவிற்குள் அவன் நிலைமை தலைகீழாக ஆக்கப்பட்டிருந்தது.

******ebook converter DEMO Watermarks*******

நேற்றுவரை அவனோடு இருந்த எவரும் அவனோடு இல்லை. அவனுக்கு உடமையென்று நினைத்திருந்த வீடு, வாசல், வேலை எதுவுமே இப்போது அவனிடம் இல்லை. நேற்று தன்னோடு தன் வீட்டில் அமர்ந்து விருந்துண்ட உற்றார், சுற்றத்தார், நண்பர்கள் யாரும் இப்போது அவனோடு இல்லை. பார்க்கும் திசையெல்லாம் ஊதா நிறத்தில் கடல் நீர். அந்த மாற்றத்திற்குள் ஒளிந்திருந்த வாழ்வியல் சூட்சுமம் சட்டென பிடிபடாமல் மனது கிடநது பேதலித்தது.

"ஹலோ" எனப் பயங்கரமாகக் குரல் எடுத்துக் கத்தினான்.

வானம் ஊதா நிறத்திற்கு மாறியிருந்தது. கடல் நீர் ஊதா நிறத்தை விழுங்கிக்கொண்டு கண்ணாடியாய்த் தகதகத்தது. அலைகள் இப்போது தங்கள் கோரமுகத்தைத் தொலைத்திருந்தன. மெதுவாக விட்டுவிட்டு வந்து போய்க்கொண்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை எங்கும் தண்ணீர்க்காடு. எங்கும் நீக்கமற ஊதா நிறம் விரிந்திருந்தது.

சக்நோலன் சுற்றும்முற்றும் பார்த்தான். ஒரு பக்கம் சின்னச்சின்ன பாறைகளாக இருந்தது. இன்னொரு பக்கம் பரந்துபட்ட மணல்வெளியும், அதனைத் தொடர்ந்து அடர்ந்த காட்டு மரங்களும் தெரிந்தது. மற்றபடி எங்கெங்கு பார்த்தாலும் தண்ணீர் மயம்தான்.

சூழ்நிலையை அனுமானித்துக் கொண்டவனாய் ஓடிப்போய் அந்த மிதவையைக் கரையோரம் இழுத்துக்கொண்டு வந்தான். மரத்தடிக்கு வந்து அவைகளைப் பத்திரப்படுத்தினான். காட்டு மரங்களுக்கிடையே ஆங்காங்கே தென்னை மரங்கள் இருந்தன. அவன் காட்டுப் பகுதிக்குள் சென்று யாரும் இருக்கிறார்களா பார்த்தான்.

"ஹலோ" என்று கத்தினான்.

எந்தப் பதிலும் வரவில்லை.

மனித நடமாட்டத்திற்கான எந்தவித அறிகுறியும் தட்டுப்படவில்லை. விரைவிலேயே அவன் புரிந்து கொண்டான். அது மனிதர்களே இல்லாத ஒரு தீவு. யாருமில்லாத தீவில் அவன் மட்டும் தனியாக. அவனும் கெல்லியின் நினைவுகளும் தனித்துவிடப்பட்டார்கள்.

"யாராச்சும் இருக்கீங்களா... இங்க ஒரு ஆளு தனியா வந்து மாட்டிட்டிருக்கேன்... காப்பாத்துங்க... ப்ளீஸ்... காப்பாத்துங்க..." என்று

******ebook converter DEMO Watermarks*******

கத்திப் பார்த்தான்.

"கடல் மணலில் ஆங்கிலத்தில் "உதவி" என்று மணலைப் பறித்துப் பெரிதாக எழுதினான். யாராவது ஆகாய மார்க்கமாக வரும்வேளையில், ஒரு வேளை தாழ்வாக பறக்க நேரிடலாம் அல்லது தன்னைத் தேடிக்கூட வரக்கூடும்... அப்படி வருகிற நேரத்தில் இந்த அடையாளம் தன்னைக் கண்டுபிடித்து அழைத்துச் செல்ல உதவக் கூடும் என நினைத்தான்.

ரப்பர் மிதவையை கூடாரத்தின் கூரையாக அமைத்துக் கொண்டான். உள்ளே அமர்ந்து, "என்ன செய்யட்டும்... சொன்ன வார்த்தையை எப்படிக் காப்பாத்தப் போறேன்... எனக்கு உடனே பாக்கனும் போல இருக்கு..." என்று லாக்கெட்டில் இருந்த கெல்லியை நோக்கிப் பார்வையால் கேட்டான். அதைத் தன் முன்னாலிருந்த ஃபெடெக்ஸ் பார்சல் மீது வைத்துக்கொண்டு பார்த்தவண்ணமிருந்தான். அவனுக்குள் அவள் பக்கத்தில் இருக்கிற ஒரு பிரமை.

இருள்வதும், விடிவதும் மாறிமாறி நிகழ்ந்துகொண்டிருந்தன. அவனுக்கு லேசாக தாடி முளைத்திருந்தது. அவனின் கறுமையான கேசம் செம்பட்டையடித்துக் கொண்டிருந்தது. பசி அவனை ஏதாவது செய் என்று அதட்டிக் கொண்டேயிருந்தது.

அவன் தன்னுடைய ஸ்வெட்டரைக் கழட்டி தலையில் சும்மாடு கட்டிக்கொண்டான். நீளநீளமாய் விழுந்து மக்கியிருந்த தென்னை மரத்தை உருட்டிக்கொண்டு வந்து, அந்தப் பரந்த மணற்பரப்பில் மீண்டும் ஆங்கிலத்தில் "உதவி" என்கிற வாசகத்தை அவைகளை வைத்து பிரமாண்டமாய் அமைத்தான்.

இன்னும் சில ஃபெடெக்ஸ் பார்சல் கடல் அலையில் அடித்துக்கொண்டு வந்து கரை

ஒதுங்கியிருந்ததைக் கவனித்து, எடுத்து வந்து தன் இடத்தில் பத்திரப்படுத்தி வைத்தான்.

காட்டுப் பகுதியில் இருந்து கிளை அசைந்ததில் சத்தம் வந்தது. யாராவது இருக்கிறார்களோ என்கிற நம்பாசையில் மீண்டும்மீண்டும் கத்திப் பார்த்தான். எந்தப் பதிலும் வராதது கண்டு அவனுக்குக் கோபங்கோபமாய் வந்தது. எரிச்சலாய் வந்தது. பொறாமையாய் இருந்தது. யார் மீது என்று தெரியாத அரூபமான ஒரு பொறாமை...

******ebook converter DEMO Watermarks*******

ஆதங்கம்... ஆத்திரம்... அழுகை... மாறிமாறி அவனைச் சுழற்றியடித்தது.

தளர்ந்து மட்டும் விடக்கூடாது என்று தனக்குத்தானே மனதிற்குள் சொல்லிக் கொண்டான். அவனிடம் அவன் மட்டுமே துணைக்கு இருந்தான். திடீரென மாயாஜாலக் காட்சிபோல அவனைச் சுற்றியிருந்த சூழல் அத்தனையையும் மாற்றியிருந்தது.

நண்பர்கள், உறவினர்கள், சகஅதிகாரிகள், உடன் பயணித்த விமானிகள், வீடு, வாசல், சொத்து, சுகம், கெல்லி அனைத்தும் எந்த மந்திரக்கோலின் சொல் கேட்டோ மறைக்கப்பட்டு விட்டதாய்ப் பட்டது. இதெல்லாம ஒரு கனவைப்போல களைந்துபோய் பழையநிலை திரும்பி விடாதா எனத் தோன்றியது. சென்றது எதுவும் திரும்புவதில்லையோ?

ஏதாவது உதவி எதிர்பாராமல் திடுதிப்பென முன்னால்வந்து நிற்கத் தான் போகிறது என்று நம்புவது அவனுக்குப் பிடித்திருந்தது.

அடுத்த நொடி ஒரு வஸ்து அவன் முன்னால் பெரிய ஓசையோடு நங்கென வந்து விழுந்தது. அதிர்ந்துபோய்ப் பார்த்தான்.

# 7

தேங்காய். எடுத்துப் பார்த்தான். பச்சைப்பசேல் என்று இருந்தது. அடுத்த நொடி தன்னுடைய ஸ்வெட்டரை இடுப்பில் கட்டிக்கொண்டு அதில் ஐந்தாறு தேங்காயைச் சேகரித்துக்கொண்டு இருப்பிடத்திற்கு வந்தான்.

ஆட்டிப் பார்த்தான். "கிலுக்...கிலுக்" என ஓசை எழுப்பியது. அதனை எடுத்து அங்கே இருந்த பெரிய பாறை மீது எறிந்தான். எப்படியாவது தோலை உறித்தெடுக்க முயற்சித்தான். அது அத்தனை சீக்கிரம் மசியவில்லை. கைக்கெட்டியது இன்னும் வாய்க்கெட்டாமல் அடம் பிடித்தது. நாக்கு அவசரப்படுத்தியது. எங்கு பார்த்தாலும் தண்ணீர்ப் பிரவாகம். ஆனால் ஒரு பொட்டு குடிக்க முடியாது. தாகம் உயிர் பிடுங்கியது. தேங்காய் கண்ணில் பாடாதபோதுகூட இத்தனை தாகம் உணரவில்லை. பார்த்ததும் தாகம் உயிரைப் பிடுங்கித் தின்னத் துவங்கியது.

ஆத்திரத்தோடு பாறையில் எறிந்துஎறிந்து பார்த்தான். அது கொஞ்சமும்

******ebook converter DEMO Watermarks*******

பிடிகொடுக்கவில்லை. பந்து மாதிரி எவ்விளவ்வி அவன் கண் முண் முழுசாய் வந்து விழுந்து அவனைக் கேலி செய்தது.
களைத்துப்போனான். பாறையில் வைத்து அடித்தான். தரையில் இருந்த கூர்மையான கல் மீது வைத்து அடித்தான். ஒரு கல் மீது வைத்து இன்னொரு பெரிய கல் எடுத்து வந்து அடித்துப் பார்த்தான். பதட்டத்தில் சக்தி ஒரு புள்ளியில் ஒன்றுபடாமல் சொதப்பியது. அடித்த கல் தான் உடைந்து சிதறியதே தவிர தேங்காய் கல்லுக்கெனக்காக அசைந்துகொடுக்காமல் இருந்தது.

என்னடா செய்வது எனப் பார்த்தான். உடைந்து சிதறியிருந்த கல்லில் ஒரு கல் சப்பையாய்க் கூர்மையாய் மாறிப் போயிருந்தது. கெட்டதில் ஒரு நல்லது என நினைத்து அதனை எடுத்துக் கத்தி போல் பிரயோகித்தான். ஆச்சர்யம். வெட்டுப்படத் துவங்கியது.

ஒரு வழியாய் படாத பிரயத்தனப்பட்டு ஒரு பகுதியை உரித்து விட்டான. அவன் முகத்தில் அத்தனை சந்தோஷம். பரபரவென முழுவதும் உரித்தெறிந்தான.

தேங்காயை உடைத்துத் தண்ணீர் குடிக்கலாம் என உடைத்ததும் முகம் தொங்கிப் போனான். அந்தத் தேங்காயில் தண்ணீரே இல்லை. கொஞ்சமாய் ஒட்டிக்கொண்டிருந்ததும் சிந்தியதில் தரை உறிஞ்சிக் கொண்டது. அதனுள் ஒட்டியிருந்த சில துளிகளை கைகளில் கொட்டி நாவில் போட்டுக் கொண்டான்.

அடுத்த முறை அவன் அப்படிப்பட்ட தவறு நிகழ்ந்துவிடாமலிருக்கும் பொருட்டு உரித்த தேங்காய் கண்ணில் ஒரு கூர்மையான கல் வைத்து அடித்து ஓட்டை போட்டான். இந்த முயற்சி பலனளித்தது. கண் பொத்துக்கொண்டுவிட்டது. அதன் வழியாகச் சிந்தாமல் சிதறாமல் அத்தனை தண்ணீரையும் வாயில் விட்டுக்கொண்டான். முகம் தெளிந்தது. போன உயிரைப் பிடித்து நிறுத்திய மாதிரி உணர்ந்தான். "அப்பாடா" என ஒரு பெருமூச்சு விட்டான்.

# 8

இடுப்பளவு தண்ணீருக்குள் கையில் ஒரு தாங்கு குச்சி வைத்துக் கொண்டு நடந்தபடி தீவின் வெளிப்பகுதியைச் சுற்றிப் பார்த்து நோட்டம் விட்டான். அந்தப் பாறைகளில் கூட சில செடிகள்

******ebook converter DEMO Watermarks*******

பசுமையாய் முளைத்திருந்தன. அதில் ஒரு விசயம் புரிந்தது.

அங்கே ஒரு கற்குகை இயற்கையாக அமைந்திருப்பதைக் கவனித்தான். அட... இது நாமெ தங்கறதுக்கு ஆகுமா பாக்கலாம். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. வெளியில் இருந்தபடியே,

"உள்ளெ யாரும் இருக்கீங்களா?"என்றான்.

கடலுக்குள் நடக்கையில் அவன் காலில் பாறை கிழித்து ரத்தம் வெளிப்பட்டதில் தண்ணீர்

அந்த இடத்தில் மெலிதாய் நிறம் மாறியது. வலி உயிர் பின்னியது. தாங்கித்தாங்கி நடந்து கரையோரம் வந்தான்.

எங்கு பார்த்தாலும் மலைகளும், பாறைகளாலும் அந்தத் தீவு நிரம்பியிருந்தது. என்னடா இது என்று பார்த்துக்கொண்டிருக்கையில் காலில் இன்னொரு ஃபெடெக்ஸ் பார்சல் வந்து தொட்டது. எடுத்துக் கொண்டான். அந்த அஞ்சல்சிப்பத்தில் "வேல்ட் ஆன் டைம்" என்கிற வாசகம் அச்சடிக்கப்பட்டு இரண்டு இறக்கைகள் அச்சில் பொறிக்கப்பட்டிருந்தது.

ஒரு பாறையில் அமர்ந்து கொண்டு சிவந்து கன்றிப்போயிருந்த பாதத்தை உப்புத்

தண்ணீருக்குள் வைத்துக் கொண்டான். தான் அணிந்திருந்த முழுக்காற்சட்டையை அரைக்கால் சட்டையாக மாற்றிவிட்டான். மீதமிருந்த பகுதியை நேர்த்தியாய்க் கிழித்து கால்கள் இரண்டிற்கும் பூட்ஸ் போல அமைத்துக் கால்களைச் சுற்றினான். அந்தத் துணியின் இன்னொரு துண்டுப் பகுதியைக் கல்லால் கிழித்துக் கயிறு போன்ற அமைப்பை உருவாக்கினான். காலில் சுற்றியிருந்த துணிக்குள் பெரியபெரிய இலைகளை வைத்துக் கட்டிக்கொண்டான். ம். இது கால்களை பாதுகாத்துக் கொள்ளும்.

# 9

இப்போது டவுசர், பனியனுக்கு மாறியிருந்தான். சட்டையைத் தலையில் சும்மாடாகக் கட்டிக் கொண்டான். கையில் கைத்தடி இருந்தது. மலைக்குன்றாய் உயர்ந்திருந்த அந்தப் பாறையின்
******ebook converter DEMO Watermarks*******

உச்சி மீது ஏறினான்.

மேலே இருந்து பார்த்தபோது கடல் வித்யாசமாய் இருந்தது. அலைகள்யாவும் மிகமிகச் சிறிய உருவமாய் மாறிப் போயிருந்தன. அவன் உதவிக்காக "ஹெல்ப்" என எழுதி வைத்திருந்தது நன்றாகத் தெரிந்தது. அந்த உயரத்தில் இருந்த பாறையின் மீது ஒரு மரம் எப்படியோ வளர்ந்து ஒரு கட்டத்தில் வறட்சிக்கு ஆட்ப்பட்டு பட்டுப்போயிருந்தது. அந்த மொட்டை மரத்தின் அருகே நின்றபடி சுற்றிலும் பார்த்தான். அதிர்ந்தான்.

அங்கே ஓரத்தில் யாரோ கிடப்பது தெரிந்தது. உடனே பதறியடித்துக் கொண்டு அங்கே ஓடினான். தண்ணீருக்குள் அதை நோக்கி நீந்திச் சென்றான். குப்புற மிதந்து கொண்டிருந்த பைலட்டை இழுத்தான். திருப்பினான். இத்தனை நாட்களில் அவர் முகம் ஊறி வீங்கிப்போயிருந்தது. அதைப் பார்த்த நொடி அவனால் தாங்க முடியவில்லை. வாய் கோணிக்கொண்டு வந்தது. கண்கள் நீர் சுரந்தது. வாய் பொத்தி ஊமையாய்க் கலங்கினான்.

அவரை கரைக்கு இழுத்து வந்தான். ஒரு தென்னம்பாளையில் வைத்து தன் இருப்பிடம் இழுத்துக்கொண்டு வந்தான். அவர் பக்கத்தில் இருந்த ஒரு ஐந்துவைக் குச்சி வைத்துத் துரத்தியபடி, "போ...போ"என்றான். அருகில் உட்கார்ந்து அவரைப் பார்த்தான். மூச்சு வாங்கினான்.

அவரின் பூட்ஸ் உருவினான். தன் காலுக்கு அது பொருந்துகிறதா எனப் பார்த்தான். சற்று சிறியதாக இருந்தது. அவருடைய ஓவர்கோட் கழற்றி எடுத்து வைத்தான். அவரது பாக்கெட்டில் ஒரு சிறிய டார்ச் லைட் இருந்தது. அடித்துப் பார்த்தான். எரிந்தது. அது ரெக்சின் உறைக்குள் பத்திரமாய் இருந்ததால் உயிர் தப்பியிருந்தது.

அடுத்ததாய் ஒரு பர்ஸ் எடுத்தான். திறந்து பார்த்தான். உள்ளே ஒரு புகைப்படம் இருந்தது. அதில் டெபிட் கார்ட், ஐ.டி கார்ட் போன்ற வஸ்துக்கள் இருந்தன. அதில் "ஆல்பர்ட் மில்லர்" என அச்சிடப்பட்டிருந்தது. அதன் அடுத்த அறையில் ஒரு குடும்ப புகைப்படம் இருந்தது. எடுத்துப் பார்த்தான். அதில்ஆல்பர்ட் தன் மனைவியின் தோளை அரவணைத்தபடி அமர்ந்திருக்க, பின்னால் அவர்களின் பதின்பருவத்து மகன் நின்று புன்னகைத்துக்கொண்டிருந்தான். இவ்வளவு தான்டா வாழ்க்கை என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது அந்தப் புன்னகை.

******ebook converter DEMO Watermarks*******

அவரை உரிய முறையில் அடக்கம் செய்ய நினைத்தான். குழிவாக இருந்த இடத்திற்குள் அவரை இழுத்துக்கொண்டு போய் வைத்தான். முகத்திறகு மேலே ஒரு துணியை வைத்தான். மறக்காமல் அவர் சட்டைப்பையில் அந்தப் புகைப்படத்தை வைத்தான். இலைதளை போட்டு மூடினான். அதன் மீது மணல் போட்டு மூடினான்.

அதன் பக்கத்தில் இருந்த பாறையில் ஆல்பர்ட் மில்லர் ஆயிரத்துத் தொலாயிரத்து ஐம்பது முதல் ஆயிரத்து தொல்லாயிரத்துத் தொன்னூற்று ஐந்து வரை என்று எழுதினான். அவனுக்கு அழுகையழுகையாய் வந்தது. ஆனால் அழவில்லை. துயரம் அடைத்துக்கொண்டு விட்டது. அவர் தான் இவனிடம் லைஃப் வெஸ்ட் எடுத்துக் கொடுத்தவர். கடைசி நொடிகளில் சுவாசிக்க மாஸ்க் கொடுத்தவர். உயிர் காத்தவர் என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். எல்லாம் அவன் ஞாபகத்தில் ஊடாடியிருக்க வேண்டும்.

அத்தனை பயங்கரமான உயிர்ப்போராட்ட கணங்களிலும் தான் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த உயிரைக் காப்பாற்றியாக வேண்டும் என்பதில் குறியாக இருந்து அதனை நிறைவேற்றியும் விட்டார் என்றால் இந்த உயிரை என்னவென்று சொல்வது. அந்த உயிருக்கான அர்த்தம் சாஸ்வதமாய் அர்த்தப்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட உயிரால் உயிர் கொடுக்கப்பட்டு அவருக்கே இறுதிச்சடங்கு செய்து கொண்டிருக்கிறேன். அப்படியென்றால் இப்போது நான் அவரது நண்பர் ஸ்தானத்திலிருந்து மகனாக மாறி விட்டேனா?

சக்நோலன் அவருக்கு உண்டாக்கிய சமாதியை உணர்வுப் பெருக்கோடு பார்த்தான். "இவ்வளவு தான் வாழ்க்கை" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

# 10

அவரின் சிறிய பூட்ஸ் இப்போது இவனின் செருப்பாகிவிட்டிருந்தது. முன்னால் மட்டும் வட்டமாய் அறுத்து ஓட்டை போட்டு விட்டிருந்தான். விரல்கள் சுதந்திரமாய் முன்னால் நீண்டுகொண்டதில், கச்சிதமாய் இருப்பதாகத் தான் பட்டது.

அந்த இருட்குகையைச் சுத்தம் செய்தான். அவனின் வீடாக மாற்றியமைத்தான். உள்ளே அந்த ரப்பர் மிதவையில் ஒரு படுக்கை

******ebook converter DEMO Watermarks*******

தயாரித்துக் கொண்டான். எதிரே தன் பார்வையில் படுகிறாற்போல் வரிசையாக அந்த ஃபெடக்ஸ் பார்சல்களை அடுக்கி அதன்மேல் அந்த லாக்கெட்டைத் திறந்து வைத்துக்கொண்டான்.

கெல்லி அவனைப் பார்த்து நிறுத்தாமல் புன்னகைத்துக்கொண்டிருப்பதாய் நினைத்தபடிப் படுத்துக் கொண்டான். ஏதாவது தோன்றினால் அந்தச் சிறிய டார்ச் லைட் அடித்து அவள் புன்னகையைப் பார்த்துக் கொண்டான்.

காட்டுப் பகுதிக்குள்போய் சின்னச்சின்னதாய் குழி பறித்து காலைக்கடன் முடித்துவிட்டு மூடிவிட்டு வந்தான். பல் துலக்க எந்த மரக்குச்சியைப் பயன்படுத்தலாம் எனக் கண்டுபிடித்தான்.

குடிக்கத் தான் தண்ணீர் இல்லாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு பழுத்த இலையில் எப்போதோ பெய்திருந்த மழை நீர் தேங்கியிருப்பதைச் செத்தைகள் நடுவே பார்த்தான். உடனே படுத்து அதன் அருகே தவழ்ந்து சென்றான். அந்த இலையில் நாவால் நக்கிப் பார்த்தான். நேர்த்தியாக தூசியை விட்டுவிட்டு உறிஞ்சினான். "

தான் கண்ணில் ஓட்டை போட்டுக் குடித்து முடித்திருந்த ஒரு தேங்காயை எடுத்து அதன் கண்வாயிலில் ஒரு பெரிய இலையை உருட்டி உள்ளே புனல் போல் பொருத்தினான். அங்கே இருந்த பெரியபெரிய இலைகள் கொண்ட குற்றுமரத்தின் இலைகளில் தேங்கியிருந்த மழைத் தண்ணீரைக் கொஞ்சங்கொஞ்சமாய் அந்தத் தேங்காய்க்குள் சேகரித்தான். இப்போது ஆசை தீர திருப்தியாய்க் குடித்து முடித்தான்.

தாகம் தணிக்கிற வழியை ஒரு வழியாய்க் கண்டறிந்து விட்டான். இனி அவ்வப்போது பெய்கிற மழையில் குடிநீருக்காக சேமிக்கிற வழியில் பல வழிகள் அவனால் உண்டாக்கிக் கொள்ள முடியும்.

உயிர்த் துளியே... எனக்காகக் காத்திரு... மனதின் தீராத அத்தனை பக்கங்களிலும் உன் மீதான தியானிப்பை உணர்வு மசியால் தோய்த்துத்தோய்த்துப் பச்சை குத்திக்கொண்டேயிருக்கிறேன். நேரில் வந்த பிறகு அத்தனையையும் உன் முன் சமர்ப்பிக்கிறேன். அந்த நம்பிக்கை என்னை உற்சாகமாய் இயங்க வைக்கிறது. என் வாழ்விற்கான, போராட்டத்திற்கான புதிய அர்த்தமாய் அவை ஒளிர்கிறது. எப்படியும் உயிர் பிழைத்து உன்னைத் தேடி வருவேன்.

******ebook converter DEMO Watermarks*******

பிழைப்பேனா? பார்க்கலாம். என் கடைசித் துளி உணர்விருக்கிற வரை உன்னைத் தேடி வருகிற முயற்சியில் தளராமல் முனைந்து கொண்டேயிருப்பேன்.

# 11

வாழ்வாதாரத்திற்குக் கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்த ஒரு விசயம் பெரிதுபெரிதான மீன்கள். ஆனால் எந்தவித உபகரணமும் இல்லாமல் எப்படிப் பிடிப்பது? அவன் அதை ஆசையோடு பாறை மீதமர்ந்து கவனித்துக்கவனித்து ஏங்கினான்.

அது அழகாக வாலை ஆட்டிக்கொண்டு ஆட்டங்காட்டுவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருநதான். கையில் இருந்த குச்சியை அதை நோக்கி ஈட்டி போல எறிந்து பார்த்தான். கதைக்கு ஆகவில்லை. பேரடாக்ஸ் பிழை. அவை அவனை ஆட்டங்காட்டி வெறுப்பேற்றிக் கொண்டிருந்தன. படுதோல்வியைப் பரிசாகத்தந்து பரிகசித்தன.

யோசித்துக்கொண்டேயிருந்துவிட்டுப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று வெறுங்கையோடு கிளம்பினான்.

இருள் மண்டியிருந்த அதிகாலை. காலத்தின் கணக்கில் அத்தனை கராராக இருந்தவன் இன்று காலத்தின் நகர்வு புரியாமல், இரவெது பகலெது புரியாமல், நாள் புரியாமல், கிழமை புரியாமல், நேரம் மறந்து போனவனாய் ஆனால் கெல்லியிடம் போய்த் தன்னை ஒப்புக்கொடுத்து விடவேண்டும் என்கிற ஒரே சிந்தனையோடு அந்தக் கடற்கரையில் காத்திருப்பு என்கிற தவத்தை விடாமற்ச் செய்தவண்ணமிருந்தான்.

புலன்கள் அனைத்தையும் ஓர் புள்ளியில் கூர்தீட்டிக் கொண்டு, வெகுநேரம் கடலையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தவண்ணமிருந்தான். அவனின் நினைவு யாராவது

வான்வெளியாகவோ, கடல்மார்க்கமாகவோ வந்து தன்னை அழைத்துக்கொண்டு மெம்பிஸ் சென்று கெல்லி முன் நிறுத்திவிடமாட்டார்களா என திரும்பத்திரும்ப நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது தூரத்தில் ஒரு கப்பல் வருவதைப் பார்த்துவிட்டான்.

******ebook converter DEMO Watermarks*******

அவனின் விருப்பம் இத்தனை சீக்கிரம் நிறைவேறப் போகிறதென நினைத்துப் பார்த்திருக்க முடியாது. அத்தனை சிக்கலாய் ரேடியோ அலைகள் தொடர்பு கொள்ள முடியாதவொரு இடத்தில் சிக்கியிருந்தான்.

இந்த அரிய வாய்ப்பை விட்டுவிடக் கூடாது என அவன் மனது முடிவெடுத்தது. உடனே முடியுமட்டும் கத்தினான். தன் கையில் இருந்த டார்ச் லைட் அடித்துக் காட்டினான். அதன் வெளிச்சத்தை தன் மறுகையால் மறைத்து விட்டு மறைத்து விட்டு மின்னுகிற மாதிரிச் செய்தான்.

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பார்த்திருப்பார்கள். நிச்சயம் பார்த்திருப்பார்கள். நான் செல்லப் போகிறேன். எனக்கான விடுதலையைத் தழுவிப்பிடித்துக்கொள்ளப் போகிறேன். கெல்லி... இதோ வந்து விட்டேன்...

வேகமாக ஓடினான். பத்திரமாக அந்த லாக்கெட்டை எடுத்து கால்சட்டைப் பையில் பத்திரமாய் வைத்துக் கொண்டான். தயார் செய்து வைத்திருந்த ரப்பர் மிதவையை எடுத்து வந்து தண்ணீரில் போட்டான். தன்னுடைய சட்டையைத் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டான். வேகமாக துடுப்புப் போடத் துவங்கினான். எதிர்த்து வந்த அலைகளின் மீதேறி மிதவை கடலின் ஆழத்திற்குள் அச்சமின்றிப் பயணித்தது.

கப்பலை நெருங்கிவிட்டான் என நினைக்கிறபோது சற்றும் எதிர்பாராமல் எங்கிருந்தோ எழும்பி வந்த ராட்சஸ அலை அவனைத் தூக்கியடித்து தண்ணீருக்குள் சுழற்றிப்போட்டது. அடுத்து வந்த அலை அடியில் இருந்த சிப்பிப்பாறையில் வைத்துத் தேய்த்துவிட்டது. "ஆ!" வலி தாளாமல் தண்ணீருக்குள் துடித்தான். அந்தத் துடிப்பைக் கெல்லியின் நினைவு அதிகப்படுத்தியது.

விரக்தியுடன் அந்த மிதவையை ஒரு கையில் இழுத்தபடி கரை வந்து சேர்ந்தான். அவனின் தன்னம்பிக்கை துடித்துக்கொண்டிருந்தது. வேட்கை உச்சம் தொட்டிருந்தது. காயம் உயிர் எடுத்தது. கண்கள் நீர் வற்றி அழுகையைத் துறந்திருந்தது. நா வறண்டு கொண்டு வந்தது. மூச்சு போராடியது.

அவன் நொண்டிநொண்டிக் கரையேறினான். சூரைக்காற்று அவனின் மனநிலையைப் பிரதிபலித்தது. மழை கொட்டியது. மரத்தடியில் அந்த

******ebook converter DEMO Watermarks*******

மிதவையை விரித்து வைத்தான். நடுவில் குழிவு செய்தான்.

தன்னுடைய குகைக்குச் சென்றான். டார்ச் அடித்து உள்ளே பார்த்தான். அவனின் ஸ்வெட்டரை எடுத்து மேலே சுற்றிக்கொண்டான். அதற்குள் இருட்டிவிட்டிருந்தது.

மின்னல் பலமாக அடித்தது. அந்த மின்னல் ஒளி அவனின் இருப்பை ஊர்ஜிதப்படுத்தியது. தளர்ந்துபோய் உள்ளே வந்தான். மழை கொட்டத் துவங்கியது. அவன் வேதனையில் அப்படியே சரிந்தான். சில நொடிகளில் அவன் தன்னை ஒருவித ஈரம் தொட்டுச் செல்வதை உணர்ந்து டார்ச் அடித்துப் பார்த்தான். அங்கே மழை நீர் ஒரு சிறிய கோடாய் வந்து வழிந்து பயணித்துக் கீழே ஒரு சிறுபள்ளத்தில் சேகரமாகியிருந்ததைப் பார்த்தான். அவனிடம் எழுந்து செல்லக்கூட திராணி இல்லை.

டார்ச் லைட் அடித்து வெளிச்சத்தைப் பாறை விளிம்பில் தண்ணீர் சேகரமாயிருந்த இடத்திற்கு நேராக அமைத்தான். சிரமப்பட்டு அதன் அருகே சென்றான். ஆசை தீரும் மட்டும் நக்கிநக்கிக் குடித்தான். மயக்கமுற்றான்.

எரிந்து கொண்டிருந்த ஒளி விளக்கு எரிந்தெரிந்து ஒரு கட்டத்தில் தன் உயிர் கரைந்து விடைபெற்றுக்கொண்டது. அந்தக் குகை முழுமையான இருளுக்குள் சிறைப்பட்டுப்போனது.

# 12

விடியத் துவங்கியிருந்தது.

மழை விட்டிருந்தது.

மெலிதான காற்று அடித்துக்கொண்டிருந்ததில் மரங்கள் தாலாட்டிக் கொண்டிருந்தன.

சக் நோலன் மயக்கத்திலிருந்து இன்னும் மீளவில்லை.

சூரிய ஒளி கன்னத்தைத் தொட்டு எழுப்பியது.

அவன் மெல்ல சுயஉணர்விற்குத் திரும்பினான். கண்களைச்
******ebook converter DEMO Watermarks*******

சிரமத்தோடு திறந்தன.

மெல்ல எழுந்து பாறையில் சரிந்து கால் நீட்டி உட்கார்ந்தான். டார்ச் லைட் எடுத்துச் சோதித்தான். அது உயிர் இழந்திருந்தது. அவனுக்குள் ஒட்டியிருந்த கொஞ்சம் சக்தியும் கழன்றுகொண்டு விட்டது போல் ஒரு உணர்வு.

கால்கள் வலித்தது. அதைப் போர்த்தியிருந்த துணியை எடுத்துப் பார்த்தான். மாயமாய் அந்தக் காயங்கள் ஆறியிருக்க வேண்டும் என்று நம்பினான்.

ஆனால் அப்படி எதுவும் நடந்திருக்கவில்லை. காயம் அப்படியே தான் இருந்தது. மறுபடி அந்தத் துணியால் காயத்தை மூடிக்கொண்டான்.

அந்த இருள்பிரியாத அதிகாலையில் மங்கிய வெளிச்சத்திற்குள் அவனுக்குக் கெல்லியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அந்த லாக்கெட்டை எடுத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அதேசமயம் சூரியன் தன் வருகையை மெல்லமெல்ல அதிகரித்தான்.

குகைக்குள் மெலிதான ஒளி பரவத் துவங்கியது.

# 13

அங்கே சேகரமாயிருந்த தண்ணீரை எடுத்துத் தொண்டையை நனைத்துக் கொண்டான். கண் திறக்கப்பட்டுக் கிடந்த தேங்காய்களுக்குள் சேகரமாயிருந்த மழை நீரை எடுத்து வாயில் விட்டுக் கொண்டான்.

அடுத்த கட்டப் போராட்டத்திற்குப் புத்தெழுச்சியுடன் தயாராகி விட்டான். கெல்லி... நீ ஒன்றும் கவலைப்படாதே... நான் சொன்னால் சொன்னது தான்... எப்படியும், எப்பாடு பட்டாவது வந்து விடுவேன்... உனக்காகவே வருவேன். ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் வந்து விடுவேன்.

அவன் ஒரு ஃபெடெக்ஸ் பார்சலை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

அதில் "விஹெச்எஸ்" கேசட்டுகளாக இருந்தது.

******ebook converter DEMO Watermarks*******

அடுத்ததைப் பிரித்தான். அதில் சில தஸ்தாவேஜுக்கள் இருந்தன.

அடுத்ததில் "ஜானி" எனக் கையெழுத்திட்டு உள்ளே ஒரு பிறந்த நாள் வாழ்த்து அட்டை இருந்தது. அதில் ஒரு சிறுவனும் சிறுமியும் ஹெலிகாப்டரில் கடல் மேல் பயணித்தபடி அடியில் செல்லும் கப்பலை ஜன்னல் வழியாகப் பார்த்துக் குதூகலிக்கிற மாதிரி ஒரு படம் இருந்தது.

உள்ளே திறந்து பார்த்தான்.

"இந்த உலகத்திலேயே மிகவும் அழகான பொருள்

என்ன என்று கேட்டால்

சந்தேகமில்லாமல் சொல்லலாம்

அது இந்த பூமியே தான்"

என்று அதில் அச்சிடப்பட்டிருந்தது.

அன்புள்ள ஜானிக்கு,

இந்தப் பிறந்த நாள்

உன் வாழ்நாளிலேயே

மறக்க முடியாதவொரு பிறந்த நாளாக இருக்க

என் மனமார்ந்த வாழ்த்துகள்.

அன்புடன்

உன் அன்பிற்குரிய தாத்தா

ஸ்கோர்.

சக் நோலன் அந்த வாழ்த்து அட்டை என்னவோ தனக்கே வந்ததுபோல பாவித்து சில நொடிகள் மெய்மறந்து போய்விட்டான்.

அந்தப் பார்சலில் ஜானி என்கிற பேரனுக்கு அவன் தாத்தா வெள்ளை

******ebook converter DEMO Watermarks*******

நிறத்தில் ஒரு வாலிபால் அனுப்பியிருந்தார். அதில் அதன் கம்பெனி பெயர் வில்சன் என்று இருந்தது. மற்றொன்றில் ஸ்கேட்டிங் ஷு§ இருந்தது. அதன் அடியில் கூர்மையான கத்தி போன்ற குதிங்கால்பட்டை இருந்தது. மற்றொன்றில் ஒரு நீளமான கவுன் இருந்தது. அந்தக் கவுனின் வெளிப்பகுதியில் வேலைப்பாடுடன் கூடிய வலை மாதிரியான மென்மையான நெட்டட் துணி அழகிற்காக நீண்ட பிரிலாய்ச் சுற்றிலும் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது.

இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. முதல் வேலையாய் காயத்திற்கு ஒரு வழி பண்ணியாக வேண்டும் என்று தோன்றியது. ஸ்கேட்டிங் ஷு§வின் அடிப்பாகத்தைக் கத்தியாகப் பயன்படுத்தி ஒரு மொந்தையான துணியை வெட்டினான். காயத்தின¢ மீது வைத்தான். அங்கே பார்சலில் ஷாக் அப்சார்பராக வைத்துக் கவர் செய்யப் பயன்படுத்தியிருந்த காற்றுக்குமிழ்கள் கொண்ட பிளாஸ்டிக் சீட் இருந்தது. அதை எடுத்துக் காயத்தின் மீதிருந்த துணி மீது வைத்தான். ஸ்கேட்டிங் ஷு§ லேஸ் எடுத்து நன்றாகக் கட்டி விட்டான். ம். இப்போது காயத்திற்குக் கட்டுப்போடும் வேலை முடிந்தது.

சின்னச்சின்ன காய்ந்த மரக்கட்டையை வைத்து ஒரு கூடாரத்திற்கான மேற்சட்டம் அமைத்தான். அதன்மேல் ரப்பர் மிதவையை வைத்துக் கூரை அமைத்தான். உள்ளே மணல் மீது அனுப்புவதற்கான அஞ்சல் சிப்பங்கள் வைக்கப்பட்டிருந்த அட்டைப்பெட்டிகளின் அட்டையை விரித்து மெத்தை அமைத்தான்.

உடனடி உணவிற்கு ஒரு தேங்காயை எடுத்து ஸ்கேட்டிங் ஷு§ அடிப்பகுதியால் கெந்திவெட்டி எளிதில் உரித்தான். தண்ணீர் அருந்தினான். தேங்காயை உடைத்து முழுவதும் தின்றான்.

# 14

அந்தக் கவுனின் வெளியில் வலை போன்ற துணி அமைப்பு இருந்ததைக் கிழித்து எடுத்தான். நான்கு ஒரு அடி நீளக் குச்சிகளைச் சதுரமாக வைத்துக் கட்டினான். அதனுள்ளே அந்த வலைத்துணியை வைத்துச் சுற்றிக் கட்டிவிட்டான். இப்போது கிட்டத்தட்ட ஒரு வலைக்கூடை உருவாகி விட்டது.

கடலுக்குள் சென்றான். தண்ணீருக்குள் முக்கிப் பிடித்தான். மீன் வரும்

******ebook converter DEMO Watermarks*******

என்று காத்திருந்தான். வந்ததும் தூக்கிப் பார்த்தான்.

முதல் முயற்சியில் ஒரு சிறிய மீன் மாட்டியது. படுதோல்விகளைத் தொடர்ந்து மிகச் சுமாரான ஒரு வெற்றி. அவன் அதை என்ன செய்வதென்று ஒரு நொடி தான் யோசித்தான். இருந்த பசியில் அதை அப்படியே தன் வாய்க்குள் போட்டுக் கடகடவென மென்றான். முதலில் கொஞ்சம் சிரமமாகத் தெரிந்தாலும் யோசிக்கவில்லை. மருந்தை விழுங்குவதுபோல விழுங்கி வைத்தான்.

அந்த ஷ§வின் அடிப்பகுதியை வைத்து ஒரு குச்சியின் நுனியைக் கூர்மையாகச் சீவினான். அதை ஒரு ஈட்டியைப் போல பாவித்தான். ஒரு பாறைக்கு உட்புறமாய் இருந்த பெரிய நண்டு ஒன்றைப் பிடித்தான்.

நன்கு பெரிதாக இருந்த நண்டைப் பார்த்ததும் அவனுக்குப் பசி அதிகரித்தது. அதன் கைகளை ஒடித்தெடுத்து அப்படியே சாப்பிடலாமா என நினைத்தான். அதற்குள்ளிருந்து வளவளப்பான திரவம் கொட்டியதே தவிர உள்ளே வேறு ஒன்றுமில்லை. அவனுக்கு ஏமாற்றமாகி விட்டது.

வேறு வழியில்லை. நெருப்பை உண்டாக்கியே ஆகவேண்டும். சமைத்துச் சாப்பிடத்தான் அது பயன்படும். எப்படி உருவாக்கலாம்?

ஒரு மரக்கட்டையில் குழிவாய்ச் சிறு பள்ளம் செய்து அதில் பொருந்துகிறாற்போல் ஒரு குச்சியை விட்டுக் கைகளால் தயிர் கடைவது போல கடைந்து கொண்டேயிருந்தான். அந்த மாதிரியான உராய்வில் நெருப்பு வந்து விடும் எனப் பள்ளிக்கூட அறிவில் கிடைத்த தகவல் ஒன்றை முதன்முதலாய்ப் பயன்படுத்தி முயற்சித்தான். ஆச்சர்யமாயிருந்தது.

அந்தப் பள்ளத்திற்குள் கொஞ்சம் ஃபெடெக்ஸ் பார்சல் பேக்கிங்கில் வந்திருந்த சிறியசிறிய பேப்பர் சுருள்களைப் போட்டுக் கடையத் துவங்கினான். உள்ளங்கை எரிந்தது. அவன் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருந்தான்.

"கமான்... கமான்... கமான்... நெருப்பே வா... நான் சொல்றேன் வா... உனக்கு நண்டுக் கறி ருசி பாக்க ஆசையில்லையா... வாடாச் செல்லம்... வந்துரு... வந்துரு... வந்துருன்றன்ல..."

******ebook converter DEMO Watermarks*******

மாலை மங்கி, இரவு படர்ந்தது. அவன் இருட்டிற்குள் உட்கார்ந்து வெளிச்சம் தேடியவனாய்த் தொடர்ந்து கடைந்து கொண்டேயிருந்தான். நெருப்பு தான் பற்றவில்லை. என்ன செய்யலாம்?

பசித்தது. ஒரு தேங்காய் உடைத்து அதன் பருப்பு எடுத்துக் கடித்தான். வலதுபக்கம் பல் வலித்தது. என்ன வைத்தியம் பார்த்தானோ அந்த பல் டாக்டர்? பல் வலி அதிகரிக்கச் செய்துவிட்டான்? சின்ன வலியை மறக்கப் பெரிய வலியைத் தந்துவிட்டான் போல?

சரிச்சரி... போகிறான்... போடா போ... நல்லாயிரு... எனக்கு நீ தந்த வலியின்

பிராயத்சித்தமாகவாவது இனி கவனமாய் வைத்தியம் பார். அடுத்தவர்களின் வலியை நீக்கி விமோட்சனம் தேடிக்கோ... என் பிரார்த்தனைகள்... என்று வன்மம் துறந்து அவனை மன்னித்ததில் வலி குறையவில்லை என்றாலும் மனது லெகுவாகியிருந்தது.

அவன் தேங்காய் பத்தை இடதுபக்கமாய் வைத்து அரைகுறையாய் மென்று விழுங்கினான். சிரட்டையிலிருந்து தேங்காய் பத்தை எடுக்கப் பக்கத்தில் இருந்த கூர்மையான கல்லைப் பயன் படுத்தினான்.

இப்போது நெருப்பு வரவைக்கிற முயற்சியில் வேறு வழியைக் கையாண்டு பார்த்தான். அந்தப் பட்டையான மரக்கட்டையில் நேரடியாக முயற்சிக்காமல் முன்னும்பின்னுமாய் இப்போது அந்தச் சிறிய குச்சியை வைத்து பழைய துணியை கைபிடியாய்ச் சுற்றி வாகாகப் பிடித்துக்கொண்டு தேய்க்க ஆரம்பித்தான்.

விடாமல் தேய்த்தான். ஆக்ரோசமாகத் தேய்த்தான்.

சட்டென கை வழுக்கி விட குச்சி கையைக் கிழித்து விட்டது. வலி தாளாமல் கையை எறிந்து விடுவது போல உதறிக்கொண்டே அலறினான். வந்த ஆத்திரத்தில் அந்தக் குச்சியைத் தூக்கி அடித்தான்.

கீழே கிடந்த பொருட்களை எத்தினான். அந்தப் பந்தை ரத்தம் தோய்ந்த கரத்தினால் எடுத்து ஆத்திரம் அத்தனையும் செலுத்தி எறிந்தான். கடற்கரையோரமாய்ப்போய் வாய்விட்டுக் கத்தினான். ஆத்திரம் வடியுமட்டும் அலறினான். இந்தப் பிரபஞ்சமே கேட்டு திகிலுறும்வண்ணம் அலறினான். அவனது வலது கையில் அந்த ஆப்பு

******ebook converter DEMO Watermarks*******

பெரிதாய்க் காயமேற்படுத்திவிட்டிருந்தது.

வலி மட்டுப்பட்டதும் தன் நிலை அடைந்தான். மனஅழுத்தம் கணிசமாய் வெளியேறியிருந்தது. நொண்டிக்கொண்டே போய் அந்தத் தென்னை மர நிழலில்போய் அமர்ந்தான்.

கைகளைத் தண்ணீருக்குள் வைத்தான். ரத்தம் கழுவப்பட்டதில் கைகள் காய்த்துப்

பழுத்திருந்தது தெரிந்தது. தெரிந்த கைகள் தண்ணீருக்குள் விட்டதும் பெரிதாகிச் சற்றே விலகித் தெரிந்தது. அவனுக்கான ஆன்டிசெப்டிக், டெட்டால், டிங்ஞ்சர் எல்லாமே அந்தக் கடல் தண்ணீர் தான். அதில் உள்ள உப்பு தான் அவனது காயங்களுக்கான ஒரே மருந்து. கைளைத் தண்ணீரில் இருந்து எடுத்து உற்றுப் பார்த்தான். காயங்கள் ஆறத் துவங்கிவிட்டதாய் நம்பினான்.

# 15

இயற்கையை வசம் கொள்ளும் சாகசத்தில் தன்னைப் பிணைத்துக் கொள்வதென மனம் தீர்மானித்தது. நொண்டிக்கொண்டே வந்தான். தான் தேய்த்திருந்த மரக்கட்டையை எடுத்துப் பார்த்தான். நடுவே பாலம்போல நீள்குழிவாய் வழுவழுப்பாய் ஆகி இருந்தது.

அந்தப் பந்தைப் பார்த்தான். அதில் அவனது வலது கை ரத்த அடையாளமாக அச்சாய்ப் பதிந்திருந்தது. அதை எடுத்தான். சிறிதுநேரம் அந்த ரத்த அப்பலை உற்று நோக்கினான். ஒரு சிறு துணி எடுத்துத் தன் நெற்றி வியர்வையில் ஒற்றினான். அதைச் சுட்டுவிரலில் சுற்றி வைத்துக் காய்ந்து கொண்டிருந்த ரத்தத் தடத்தில் திருத்தம் கொடுத்துக், கண்கள் வாய் மூக்கு வரைந்தான். இப்போது அது ஒரு சுவாரஸ்யமான கார்ட்டூன் மனிதனாய் மாறியிருந்தது. அவனுக்கு அது அவனின் கார்ட்டூன் சித்திரம்போலத் தோன்றியிருக்கக்கூடும். தனது அந்தச் சாதனைக்காக மனதிற்குள் சிலாகித்துக் கொண்டான்.

அந்தப் பந்தில் வில்சன் என இருந்த அதன் கம்பெனிப் பெயரையே அந்தப் புதிய நபருக்குப் பெயராய்ச் சூட்டினான். ஒரு பாறை மீது வைத்தான். பக்கத்தில் உட்கார்ந்தபடி அதை உற்றுக் கவனித்தான்.

******ebook converter DEMO Watermarks*******

இப்போது அவன் தனியாள் இல்லை.

மறுபடி தேய்த்திருந்த கட்டையை எடுத்தான். அனுபவம் கற்றுத் தந்த தொழில்நுட்பத்தை ஒவ்வொரு முயற்சியிலும் சேர்த்துக்கொண்டு தன் செயல்பாட்டை மாற்றியமைத்து மேம்படுத்திக்கொண்டு போனான்.

இம்முறை பதட்டத்தோடோ வெறியோடோ இயங்கவில்லை. ஒரு ஞானியின் மனநிலையோடு மிகுந்த நிதானத்தோடும், லயம் பிசகாமலும் தேய்க்கத் துவங்கினான்.

வில்சனை அவ்வப்போது பார்த்துப் பேசிக்கொண்டான.

"உன்கிட்ட தீப்பெட்டி எதும் இருக்கா... இல்லையா... விடு... சமாளிக்கலாம்..." என்றான். வில்சன் அவன் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டு எதிரே அமர்ந்திருந்தான்.

நெருப்பு பற்றுவதாய்த் தெரியவில்லை. அந்தக் கட்டையை எடுத்து உற்று நோக்கினான். அந்தக் கட்டை தேய்த்த தேய்ப்பில் லேசாக நடுவில் சிறுவிரிசலாய்ப் பிளந்திருந்தது.

சத்தமாய்ச் சொன்னான்.

"காத்து படனும்ல... தேய்க்கறப்ப காத்து படலேனா எப்பிடித் தீப்பிடிக்கும்... பாத்துட்டிருக்கியே... சொல்ல வேணாம்... சரி விடு..." என்றவன், இப்போது அந்தப் பிளவு கொண்டிருந்த கட்டையின் அடியில் கொஞ்சமாய் மணலைப் பறித்துவிட்டு அந்த இடுக்கில் கொஞ்சம் தென்னம்பன்னாடை உதிரியைச் செருகி வைத்துத் தேய்க்க ஆரம்பித்தான். நிதானமாக இயங்கினான்.

வில்சனை இடைஇடையே பார்த்துக் கொண்டான்.

அவன் கண்கள் விரிந்தது. அந்தப் பன்னாடையில் லேசாகப் புகை தெரிந்தது. உராய்வு எழுப்பிய வெப்பம் அதன் வெளிப்பாட்டை முதன்முதலாய்க் காட்டும் அறிகுறி. அவன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு இதமாய் ஊதத் தொடங்கினான்.

"பிடிச்சிக்கோ... பிடிச்சிக்கோ... ம்ம்... பிடிச்சிக்கோ..." என்று சொல்லிக்கொண்டே ஊதினான். புகைவளையம் விரியத் துவங்கியது.

******ebook converter DEMO Watermarks*******

குனிந்து மிக அருகாமையில் முகத்தைக் கொண்டுபோய் ஓங்கி ஊதினான். அவன் நாசியின் நுனியில் வியர்வை குவிந்து திரண்டு மெல்லமெல்லப் பெரிதாகிக்கொண்டு வந்தது. பெரிய துளியாய் விரிந்து முத்தாய் உதிர நேரம் பார்த்திருந்தபோது, குப்பென நெருப்பு பற்றிக்கொண்டது.

# 16

"நான் சாதிச்சிட்டேன்... சாதிச்சிட்டேன்..." என்று உற்சாகமாய்க் கத்தினான். ஊளையிட்டான்.

தன் வெற்றிக்காகக் குதூகலித்தான். வெற்றிவாகை சூடிவிட்டதன் அடையாளமாய் மார்தட்டிக் கொண்டான்.

அந்த நெருப்பின் மீது இன்னும் கொஞ்சம் உதிர்ந்த பன்னாடைத் துண்டுகளைப் போட்டுப் பெரிதாக்கினான். இப்போது அந்திமாலை மெல்லமெல்ல இருள் விரிக்கத் துவங்கியிருந்தது. அவன் ஒரு பெரிய நெருப்புப் பிரவாகத்தையே, அதற்குள் உண்டு பண்ணியிருந்தான். அவன் முகம் அந்த வெளிச்சத்தில் ஆரஞ்சு வண்ணத்தில் தகதகத்தது. நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. சின்னதாய் அவ்வப்போது "பட்பட்" என வெடித்து நெருப்புப்பொறி பறக்க விட்டது. குதூகலமானான்.

இன்னுங்கொஞ்சம் உலர்ந்த தென்னம்பாளை எடுத்து வந்து அதில் போட்டான். தீ "திகுதிகு"வென எரியத் துவங்கியது. அவன் உற்சாகத்தில் வாய்க்கு வந்தபடிக் கத்தினான்.

"வா நெருப்பே...

என் வாழ்க்கையில்

ஒளியேற்றி வைக்க

வா நெருப்பே...

வா...வாவா..."

என்று பாடினான். உற்சாகம் தாளாமல் கத்தினான். "பாத்திங்களா... நான் படைச்ச தீ இது... நான் கண்டுபிடிச்ச தீ... நான் உண்டாக்குன தீ...
******ebook converter DEMO Watermarks*******

பாருங்க... நல்லாப் பாருங்க... எல்லாரும் பாருங்க..." என்று கூவினான். சுற்றிலும் விரவியிருந்த இருளைப் பார்த்து, "இப்பத் தெரிஞ்சுக்கிட்டீங்களா நான் யாருன்னு... நெருப்பைப் படைச்சவன் தெரியுதா! இனி நான் சொல்றபடி சமத்தாக் கேட்கனும். தெரிஞ்சுக்கங்க. ஹ்ஹஹ்ஹா..." என்று பெருமிதத்துடன் கெக்கலித்தான். கண்களின் ஓரம் ஈரம் கசிகிற வரை எக்காளமிட்டான்.

ஒரு பெரிய நண்டைத் தான் தயாரித்திருந்த ஈட்டியில் குத்தி எடுத்துக்கொண்டு வந்தான். அதை நெருப்பில் வேக வைத்தான். இப்போது அதன் பாகங்கள் வளவளப்பாய் ஒழுகவில்லை. பஞ்சுபோல வெந்திருந்தது. அதை எடுத்து ருசித்தான. வில்சனைப் பார்த்து, "பிரமாதமா இருக்கு" என்றான். முழுவதுமாய் அனுபவித்துச் சாப்பிட்டான்.

கடல் மணலில் குளிருக்கு இதமாக அந்த கேம்ப் ஃபயர் அருகே ஒருச்சாய்ந்து தலைக்குக் கை தாங்கக் கொடுத்து படுத்துக்கொண்டான். வில்சனைப் பார்த்துச் சொன்னான். "நாம மெம்பிஸ் நகரத்துல இருந்து பதினொன்னரை மணி நேரம் பயணிச்சி இங்க வந்து தங்கியிருக்கோம். ஆக எங்கயிருந்து எங்க வந்திருக்கோம்ன்றது தெரியுதுல... அந்த ரூட்டு பிடிபட்ருச்சில்லெ... யோசி... எப்படி மறுபடி அங்கெ போறது... கெல்லியை சந்திக்கப் போறதுன்றதை யோசி... புரிஞ்சுதா..." என்றான்.

வில்சன் ஒரு வகையில் அவனின் பிரதி. அவனின் மனசாட்சி. அவனின் ஆழ்மனது என்று எது சொன்னாலும் பொருந்தும். இப்போது அவனே அவனுக்கான நண்பனைத் தயார் செய்து அதோடு உயிருக்குயிராய்ப் பழகவும் தெரிந்துகொண்டு விட்டான்.

"என்ன வில்சன் நான் சொல்றது சரி தானெ... ஏதாச்சும் தப்பிருந்தா உடனே சொல்லிடனும். பதினொன்னரை மணி நேரம் தள்ளி வந்து பசிபிக் கடலோரமா இந்தத் தீவுல உக்காந்து நண்டுக் கறி சாப்பிட்டுக்கிட்டிருக்கோம். ஒரு மணி நேரத்துக்கு நானூத்து எழுபத்தஞ்சி மைல் வேகத்துல பறந்து வந்தோம். அப்படின்னா எவ்வளவு தூரம் மெம்பிஸ்ல இருந்து தள்ளி வந்திருக்கோம் தெரியுதா? சும்மா பாத்திட்டு உக்காந்திருக்கக் கூடாது? சும்மாயிருக்கறது எனக்குப் பிடிக்காது தெரியும்ல... மனசுலயே கணக்குப் போட்டுச் சொல்லு சொல்லிட்டேன் ஆமா..."

சக் நோலன் தீவிரமாய்க் கணக்குப்போட ஆரம்பித்துவிட்டான்.
******ebook converter DEMO Watermarks*******

"அதை வச்சிக் கணக்குப் போட்டுப் பாத்தா நம்மைத் தேடிட்டிருக்கிற மீட்புக் குழுவுக்கு நாமெ இந்தத் தீவுல தான் இருக்கோங்கிறது இந்நேரம் தெரிஞ்சிருக்குமா இல்லையா... ம்... நீ நெனைக்கறது சரி தான்... அவங்களுக்கு இந்நேரம் நாம இருக்கற எடம் தெரிஞ்சிருக்கும்... கை குடு... கரெக்டா என் மனசுல இருக்கற மாதிரியே நீயும் சொல்லிட்ட... ஆனா இதுல ஒரே ஒரு சிக்கல் தான்... நாம ரேடியோ தொடர்புக்கு அப்பால வந்துல விழுந்திருக்கோம்..." என்றான்.

"அதனால என்ன... எல்லாப் பிரச்னைக்கும் ஒரே ஒரு தீர்வு தானா... எத்தனையோ மாற்று வழி இல்லாமலா போகும்... யோசிச்சாக் கெடச்சிட்டுப் போகுது... நாம யோசிக்கிற மாதிரி மெம்பிஸ் மீட்புக் குழுவும் யோசிக்க மாட்டாங்களா என்ன?"

உடனே பக்கத்தில் இருந்த பாறையில் சிப்பிக் கல் வைத்துக்கொண்டு இருட்டிற்குள் சரளமாகப் போர்டில் எழுதுவதுபோல கணக்குப்போட்டுக் கணிக்க ஆரம்பித்தான். முடிவில் ஐந்து லட்சம் மைல் சதுரஅடி பரப்பு அவங்க தேட வேண்டிய பகுதியோட அளவா இருந்தா, அவங்களால இந்தத் தீவையும் கணக்குல எடுத்துக்க முடியும்... சரியா? ம்... உன் முகத்தைப் பாத்தாலே தெரியுது... என் கணக்கு சரிதான்னு..."

"அப்படி அவங்க அத்தனை சதுரஅடி பரப்பளவு தேடுதல் வேட்டை நடத்தறதுன்றது ரெண்டு டெக்சாஸ் மாநிலத்தோட பரப்பளவுக்குச் சமம்..."

வில்சனைப் பார்த்தான்.

எங்கிருந்தோ ஒரு மின்னல் வெட்டிவிட்டுப் போனது.

"எப்படியும் அவங்க நம்மைக் கண்டுபிடிக்கறதுக்குச் சாத்தியம் கம்மிதான்னு தெரியுது..." என்று தனக்குத்தானே சொன்னான்.

இடி பலமாக இடித்தது.

# 17

அவன் பல் வலி அதிகரித்திருந்தது. தன்னுடைய ஃபீஸ் வாங்காத மருத்துவரிடம் போனான். கடல் நீர் எடுத்து வாய்கொப்பளித்தான். வலி கொஞ்சமாய¢ மட்டுப்பட்டது.

******ebook converter DEMO Watermarks*******

அப்போதைக்கு. அவன் வைத்திருந்த ஊன்றுகோலை கடல் நீருக்குள் செருகி வைத்திருந்தான். அதன் மீது ஒற்றை ஸ்கேட்டிங் ஷ§ தொங்கிக்கொண்டிருந்தது. அதன் கூர்மையான உலோகப் பகுதி சூரிய ஒளி பட்டு மிளிறியது. அதை ஒரு கண்ணாடியாய்ப் பயன்படுத்தி தன் முகம் பார்த்தான். பிரமிப்பாய் இருந்தது.

இரண்டு விரலை உள்ளேவிட்டு வாயை அகலமாய் விரித்து வலி தந்த பல்லின் நிலைமையைப் பரிசோதித்தான். "ம்... கவனிச்சுக்கலாம்..." என்று தனக்குத்தானே தேறுதல் சொல்லிக்கொண்டான்.

இரவு. அந்தக் குகையில் அவன், கெல்லி, மற்றும் வில்சன் இருந்தார்கள். சற்றே நெருப்பு வெளியில் உண்டாக்கியிருந்தது அந்தக் குகைக்குள் மெல்லிய வெளிச்சம் ஊடுறுவச் செய்து கொண்டிருந்தது.

பல் வலி மேலும் தன் அளவை உயர்த்தி எச்சரிக்கை செய்தது. வில்சனிடம் சொன்னான்.

"என்னடா இத்துணூண்டு இருக்கற இந்தப் பல்லு இந்த வலி வலிக்குது. நேத்துவரை ஏதாச்சும் தின்னாத்தான் வலிக்கும். அதுவும் அந்தப் பல்லுல மட்டுந்தான் வலிக்கும். இன்னிக்கி என்னடான்னா எதுவும் திங்காமலே வாய் முழுக்க வலிக்குது... இதுல இருக்கற ஒரே வசதி எதுவும் திங்க முடியலியேனு வருத்தம் வராது பாரு... திங்கறதுக்கும் இல்ல... திங்கவும் முடியல... அந்த ஒரு அல்பசந்தோஷந்தான் இந்த விசயத்துல எனக்குக் கெடச்ச லாபம்... நான் பாத்த டாக்டர் பேரு என்ன தெரியுமா டாக்டர் ஜெரி... இப்ப இருக்கற ஒரே சிக்கல் என்னன்னா... டாக்டர் ஜெரியை இங்க கூப்ட்டா வரமாட்டாரு... அவ்வளவு தான்..." என்றபடி தேங்காய் சிரட்டையில் இருந்த அடர்த்தியான ஒரு திரவத்தைத் துணியில் ஒற்றி பல் இடுக்கில் பக்குவமாய் வைத்து அப்படியே கடித்துக் கொண்டான். அது மூலிகை இலையோ யூகிலிபிடஸ் இலையோ ஏதோ ஒன்றின் சாறாக இருக்கக்கூடும்.

அவன் கெல்லியை இப்போது பார்த்தான். அவன் கண்களில் நெருப்பின் ஒளி புகுந்து அவனை இளக்கம் கொள்ளச் செய்திருந்தது. "உனக்கு ஒரு விசயம் தெரியுமா... நீ இந்தப் போட்டோவுல இருக்கறதைவிட நிஜத்துல ரொம்ப அழகு தெரியுமா... அத்தனையையும் முழுசா எடுக்கறதுக்கு அந்த கருவிக்குத் தெரியலேன்றது இப்ப எனக்கு நல்லாவே தெரியுது... இந்தப் படத்தையும் என் மனசுல இருக்கற உன்னையும் ஒப்பிட்டுப் பாத்துத்தான் சொல்றேன்... என்ன உன்னெ மாதிரி நானும் ஆய்வுல

******ebook converter DEMO Watermarks*******

இறங்கிட்டேன்னு பாத்தியா... உன்னோட சேந்ததும் நான் நீயாவே மாறிட்டேன் போலருக்கு?

இந்த வலி எனக்குத் தேவை தான்... அங்க உன்னைத் தனியாத் தவிக்கவிட்டுட்டு இங்க ஜாலியா ஒரு தீவை நான் ஒருத்தனா இருந்து ஆண்டுக்கிட்டிருக்கனே... அதுக்குத் தண்டனை தான் இந்தத் தண்டனைன்றது எனக்குத் தெரியும்... இல்லஇல்ல... இந்த வலி எது தெரியுமா... உன் மனசுல என் பிரிவுனால நான் ஏற்படுத்தியிருக்கிற தாங்கமுடியாத அந்த வலியோட பாதியை, அது உன்னோட பாதியா இருக்கற எனக்குப் பங்குபோட்டு அனுப்பி வச்சிருக்கு... இந்த வலி போனதும்... அங்க உன்னோட வலியும் கொறஞ்சிரும்... சரி தானெ... ம்... சரி தான்... இப்ப அதுக்கு என்ன பண்ணலாம்?"

சக் நோலன் வில்லியம்ஸ் அமர்ந்திருந்த பக்கம் திரும்பினான். பெரிய அளவிலான ஒரு அழகான கடற்சிப்பி மீது ஒய்யாரமாக அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் மட்டும் எப்போதும், எந்தச் சூழ்நிலையிலும் கவலையின் சுவடுகள் படர்வதேயில்லை என்பது ஆச்சர்யமாயிருந்தது.

"ஏன்டா டேய்... சும்மா ஸ்டைலா உக்காந்திருந்தா ஆச்சா... அண்ணனுக்குப் பல் வலிக்குது... அதைச் சரி பண்றதுக்கு ஏதாச்சும் வழி சொல்ல மாட்டியா... எனக்கென்னவோ நீ பல் டாக்டருக்குப் படிச்சிருந்திருக்கலாமோன்னு தோணுதுடா... அப்படிப் படிச்சிருந்தின்னா இப்ப உன்னை வாடா போடான்னா கூப்பிட்டுட்டிருப்பேன்... டாக்டர் வில்சன் அப்படின்னு பேச்சுக்குப் பேச்சு சார் போட்டில்ல கூப்ட்டிட்டிருந்திருப்பேன்."

வில்லியம் பார்த்துச் சிரித்தான்.

"இப்ப பாரு உனக்குக் கெடைக்க வேண்டிய பேரு எனக்குக் கெடைக்கப் போகுது... வேற வழி... நானே டாக்டராயிட வேண்டியது தான்..."

அந்த ஸ்கேட்டிங் ஷூ எடுத்தான். அதன் கொக்கி போன்ற கூர்மையான அடிப்பாகத்தை வலி தரும் பல்லின் இடுக்கிற்குள் மாட்டிவிட்டுக்கொண்டான். கிட்டத்தட்ட பல் பிடுங்கும் கொரடுபோல பாவித்தான். அருகில் இருந்த உருண்டையான கல் கையில் எடுத்தான். அந்த ஷூவின் விளிம்புப் பகுதியில் குறி பார்த்து பலம் அத்தனையும் சேர்த்துக் கண்களை இறுக மூடிக்கொண்டு ஓங்கி அடித்தான்.

******ebook converter DEMO Watermarks*******

ஸ்கேட்டிங் ஷ§ தெறித்துக்கொண்டு வேகமாய்க் குகைக்குள் எங்கோ விழுந்தது. இவன் மூச்சுப் போகிறாற்போல் "க்ஆஆ" என்று அடிவயிற்றிலிருந்து ஒலி எழுப்பியபடி செத்தையாகச் சரிந்தான். வாயிலிருந்து ரத்தத் தீற்று தெறித்து விழுந்தது. தலை மேட்டில் அவன் உண்டாக்கியிருந்த கேம்ப் ஃபயர் சுவாலை விட்டு எரிந்துகொண்டிருந்தது.

நெருப்பு எரிந்தெரிந்து இறுதியில் கொஞ்சங்கொஞ்சமாய் தணிந்து அமர்ந்தது.

# 18

நான்கு வருடம் இப்படியே ஓடிவிட்டது.

இந்த நான்கு வருடத்தில் அவன் அந்தத் தீவின் அங்கமாகி விட்டான். அவனுக்கு எல்லாவிதமான பிரச்னைகளையும் சமாளிக்க இயற்கையும், சூழலும் கற்றுத் தந்திருந்தன. எந்த மரத்தின் குச்சியை வைத்துப் பல் துலக்குவது, எப்படிக் குடிதண்ணீர் சேமித்துக் கொள்வது, எப்படி உணவு தேடிக் கொள்வது, எப்படி அவசரத்திற்கான உணவை சேமித்து வைத்துக் கொள்வது, எப்படி வெயிலில் இருந்தும் மழையில் இருந்தும் தற்காத்துக் கொள்வது, உடம்மை மனதை எப்படி நோய் வராமலும், வந்தால் அதிலிருந்து எப்படி மீட்டெடுப்பது போன்ற சகல

கலைகளிலும் அனுபவம் தந்த பாடத்தால் டாக்டர் பட்டம் அவனே அவனுக்குக் கொடுத்து விட்டிருந்தான். இப்போது அந்த விசயங்களில் தேர்ச்சி பெற்ற ஒரு ஆய்வு மாணவன் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அளவு தேர்ச்சி பெற்றிருந்தான்.

கெல்லி தன் விருப்பமான படிப்பில் ஆய்வு மேற்கொண்டிருந்தாளே? இந்நேரம் நிறைவு செய்திருப்பாளா? செய்து முடித்துப் பட்டம் பெற்றிருப்பாள். மேலும் அதில் கூடுதல் ஆய்வு மேற்கொண்டு போஸ்ட் டாக்ட்ரேட் கூட முடித்திருப்பாள். இப்போது அவளைச் சந்திக்கையில் மரியாதையாகத் தான் பேசவேண்டும். டவுள் பி.ஹெச்.டி அல்லவா?

கடலோரம் கண்ணாடி மாதிரி ஊதா நிறத்தில் மின்னிய தெளிவான தண்ணீருக்கடியில் ஒரு பெரிய மீன் சுற்றிச்சுற்றி நீந்திக்கொண்டிருந்தது. அதன் மீது திடீரென ஒரு ஈட்டி துல்லியமாய்ப் பாய்ந்தது. அந்த ஈட்டி

******ebook converter DEMO Watermarks*******

கம்பால் ஆனது. அதன் நுனி இரண்டாக பிளந்த நிலையில் அதேசமயம் இரண்டு பகுதியும் கூர்மையாகவும் இருந்தது.

இப்போது குறி தவறவில்லை. உலகத் தரத்திற்கான ஒரு தேர்ந்த விளையாட்டு வீரனைப் போல காலம் அவனை ஆக்கிவிட்டிருந்தது. அநாயசமாய் எறிந்தவன் அவன் தானா? அந்தப் பெரிய மீன் துல்லியமாய் மாட்டிக்கொண்டுவிட்டது. தொடர்ந்து சக் நோலன் பக்கத்தில் தண்ணீருக்குள் தலைகாட்டிக் கொண்டிருந்த பாறை மீது நின்றிருந்தான். அவன் சக் நோலன் தானா?

சத்தியம் செய்து சொல்லலாம். அவனின் உருவம் இப்போது யாருக்கும் அத்தனை சுலபத்தில் அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாய் இல்லை. நீண்ட தாடி வளர்ந்து செம்பட்டை அடித்திருந்தது. மீசை, கேசம் அப்படியே. திறந்த மார்பு. வயிறு முதுகோடு ஒட்டிப்போய் உள்வாங்கியிருந்தது. முகம் ஒரு ஞானியைப்போல பழுத்திருந்தது. இடுப்பில் மட்டும் கிழிந்திருந்த அந்த முரட்டுத் துணி... அது டவுசரா அல்லது வேறு எதுவும் துணியா... எதுவோ ஒரு எஞ்சியிருந்த துணியைச் சுற்றியிருக்க வேண்டும். அல்லது அவனின் அந்த அரை டவுசர் அந்த நிலைக்கு வந்திருந்திருக்க வேண்டும். அவனைப் போல.

அவன் அந்த மீனை எடுத்து வகுந்தான். சதைப் பகுதியைப் பிய்த்தெடுத்து வாயில்போட்டு மென்று தின்றான்.

இரவு. குகைக்குள் பயமின்றி படுத்துக்கொண்டான். வெளியே இடியும்மின்னலுமாய் மழை கொட்டியது. மின்னல் வெளிச்சத்தில் உள்ளேயிருந்த கெல்லி மாறாத இளமையோடு தெரிந்தாள். வில்சன் ஓரமாய் ஒரு கடற்ச் சோவி ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான்.

சக் நோலன் முழுக்க முழுக்க இந்தச் சூழலுக்குப் பழக்கப்படுத்தப்பட்டிருந்தான். இருள் மெல்ல கரைந்து வெளிச்சம் படர்ந்தது. திடீரென ஒரு அலை டமார் எனச் சத்தத்தோடு வந்து பாறையில் மோதியதும், அவன் தூக்கம் கலைந்தவனாய்ச் சட்டென எழுந்து கொண்டான். கண்ணில் வில்சன் பட்டான். இவன் அப்படிப் பயந்துகொண்டு எழுந்ததை வில்சன் கவனித்துவிட்டு பரிகசிப்பபதுபோல தோன்ற எரிச்சலுற்றான்.

வில்சனைப் பார்த்து, "வாயை மூடுனு சொன்னேன்..." என்று அதட்டினான்.

******ebook converter DEMO Watermarks*******

# 19

ஈட்டியோடு கடலுக்குள் இருந்த பாறையின் பின்னால் ஒளிந்தபடி அந்த வஸ்துவைப் பார்த்தான். ஒரு வேளை திமிங்கலமாக இருக்குமோ? வழி தெரியாமல் இங்கு வந்து என்னை மாதிரி சிக்கிக்கொண்டுவிட்டதா? பதுங்கிப்பதுங்கி அதன் அருகே ஈட்டியோடு சென்றான். ஈட்டியை வைத்து அதைத் தொட்டுப் பார்த்தான். அசையவில்லை. இறந்திருக்குமா? அருகில்போய் பார்த்தான். அது ஒரு ஃபைபர் பிளாஸ்டிக்கால் ஆன நீண்ட ஒரு தகடு. அதை உற்றுப்பார்த்தான். பேக்கர்ஸ் ஃபீல்ட் என்று அதில் எழுதியிருந்தது.

அவனுக்கு உற்சாகம் தாங்கவில்லை. தன் விமானத்தின் பாகம் அது என்பதை அவன் உணர்ந்துகொண்டு விட்டான். அதைக் கரைக்கு எடுத்து வந்து நட்டமாக நிமிர்த்தி வைத்து, அதன் முன்னால் அசையாமல் குத்த வைத்து உட்கார்ந்துகொண்டான். நேரம் மறந்து பார்த்துக் கொண்டேயிருந்தான்.

நான்கு வருடத்திற்கு முன்னால் நான் இருந்த இருப்பென்ன? நீ இருந்த இருப்பு தான் என்ன? இன்று நாம் இருவரும் எப்படியிருக்கிறோம் பார்த்தாயா என்று அதைப் பார்த்துக் கேட்பது போல அவனது பார்வை இருந்தது. அது இரட்டைத் தகடாய் "ட" வடிவில் மடங்கக் கூடிய விதத்தில் நடுவில் பிளாஸ்டிக் கீல் வைத்து இணைக்கப்பட்டு இருந்தது. "ட" வடிவில் மணலில் நிற்க வைத்திருந்தான். அது காற்றில் லேசாக தள்ளாடிக் கொண்டிருந்தது.

அவனுக்குப் பின்னால் வில்சன் உட்கார்ந்து இருந்தான். அவன் கோலமும் கொஞ்சம் அலங்கோலமாகத் தான் போயிருந்தது. காற்று இறங்கி கொஞ்சம் தோள் தொங்கிப்போய் இருந்தான். கெல்லி வெயிலில் கறுத்துவிடக்கூடாது என்பதற்காக குகையில் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு வந்திருந்தான்.

காற்று பலமாக அடித்ததில் அந்த பிளாஸ்டிக் தகட்டுப்பாகம் சாய்ந்து விழுந்தது.

அவன் வில்சனை திரும்பித்திரும்பிக் கேள்வியோடு பார்த்தான்.

"ம்... நீ சொல்றது சரி தான்... இந்தத் தகடு நாமெ இங்கயிருந்து

******ebook converter DEMO Watermarks*******

தப்பிக்கறதுக்கு உதவும்னு தான் எனக்குந் தோணுது..." என்றான்.

அவன் களத்தில் இறங்கினான்.

தென்னை மரங்கள் அடியில் நெருப்பு வைத்து அதனைப் பலகீனமாக்கினான். வலிமையான மொக்கையான கம்பின் நுனி பிளந்து கூர்மையான கல் பொருத்தி கொடி மரத்தின் உலர்ந்த பட்டையினால் கச்சிதமாகக் கட்டி கோடாலி தயாரித்தான். அடியில் நெருப்பு வைத்துப் பலகீனமாக்கப்பட்டிருந்த தென்னை மரங்கள் சிலவற்றைக் கோடாலியில் வெட்டிச் சாய்த்தான். நிறைய மரக்கட்டைகள் வைத்துப் பாய்மரக்கப்பலுக்குத் தேவையான சட்டங்கள் அமைத்தான். கட்டுவதற்கு விஹெச்எஸ் கேசட் டேப் பயன்படுத்தினான்.

ஒரு தேர்ந்த பொறியியல் வல்லுநர் போல அதன் கட்டுமானப்பணிகளில் செயல்பட்டு அதனை உருவமைக்கத் துவங்கினான். காய்ந்த கட்டைகள் பொறுக்கிக்கொண்டுவந்து வரிசையாய்ப் பக்கத்தில்பக்கத்தில் அடுக்கி வைத்தான். எண்ணிப் பார்த்தான். இருபத்திரண்டு இருந்தது. மொத்தம் நாற்பத்திரண்டு தேவைப்படும் என்று கணக்குப் போட்டுக்கொண்டான்.

வில்சனைப் பார்த்தான்.

"இல்லடா... இதுக்கு நமக்கு எக்கச்சக்கம் நீளநீளமாக் கயிறு தேவைப்படும்டா... அதுக்கு என்ன செய்யலாங்கறெ... டேப் கொஞ்சம் இருக்கு... பத்தாததுக்கு... ம்ம்? ம்ம்... கொடிங்க, குத்துமரப் பட்டைங்கன்னு நெறைய உறிச்சி முடிச்சிப்போட்டு முடிச்சிப்போட்டு நீளமாக கயிறு ஆக்கலாங்கறியா? பரவாயில்லடாப் பையா... உனக்கு என்கூடச் சேந்துசேந்து மூளை கொஞ்சம் நல்லாவே வேலை செய்ய ஆரம்பிச்சிருக்குடா... என்னது... உன்கூடச் சேந்ததால தான் எனக்கே மூளை கொஞ்சமாச்சும் வேலை செய்ய ஆரம்பிச்சிருக்குன்றியா... அங்க மெம்பிஸ் வந்து என்னைப்பத்தி ஃபெடக்ஸ் அலுவலகத்துல கேட்டுப் பாரு... அப்புறந் தெரியும்... என்னது... முதல்ல பழைய பிரதாபங்களை நிறுத்தனுமா... சரி விடு... நமக்குள்ள என்ன வாக்குவாதம்... நீ வேற... நான் வேறயா என்ன... கோச்சுக்காதடா... வா...வா... ஆகவேண்டியதைப் பாப்போம்.

சீக்கிரம் ஊருக்குப் போகனும்... கெல்லி முன்னால போயி நின்னு கண்ணு இமைக்காமப் பாக்கனும்ல்ல... என்னது...? கெல்லி உன்னை

******ebook converter DEMO Watermarks*******

மன்னிப்பாளான்னு கேக்கறியா...? அவ மன்னிக்கவே மாட்டா... ஏன்னா... அவெ என் மேல கோபப்பட்டிருந்தாத் தானெ மன்னிக்கிறதுக்கு...?

நாந்தான்டா இங்க இருக்கேன்... என் மனசோட அலைவரிசை மெம்பிஸ் வரை கேக்கும்டா பையா... அவ அலைவரிசையும் அதே மாதிரி எனக்குக் கேட்டுட்டுத் தான் இருக்கு... புரிஞ்சுதா... அவெ அங்க இருந்தபடி என்னை உணர்ந்துட்டிருக்கா... நான் இங்க இருந்தபடியே அவளை உணர்ந்துட்டுத்தான்டா இருக்கேன்...

அதான், அவ வேற நான் வேற இல்லன்னு சொன்னனா இல்லையா... என்னது... அப்புறம் நான் யாருங்கறியா... பொறாமையெப் பாரு... நீ நானேதான்டா... அப்போ அவ யாருன்றியா... அவ என்னைப் படைச்சி, இயங்க வச்சிட்டிருக்கிற சக்திடா... உனக்கும் அவ அப்படித்தான்... கேள்வி மேலெ கேள்வி கேட்டுட்டிருக்காம வேலையப் பாக்க வுடு... இல்ல... மெம்பிஸ் போனதும் கெல்லிகிட்டச் சொல்லிக் காதைப் பிடிச்சி நல்லாத் திருக வச்சிருவேன் தெரிஞ்சுக்கோ..." என்று கண்களாலேயே வில்சனோடு அவர்களின் பிரத்யேக பரிபாசையில் உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டான்.

அவன் உற்சாகமாய்க் குற்று மரங்களின் கிளைகள், நீண்ட செடிகள்அனைத்தையும் வெட்டி எடுத்து வந்து போட்டான். அதன் பட்டையை லாவகமாக உரித்தான்.

வில்சனைப் பார்த்துக் கேட்டான்.

"இந்த வேலையெல்லாம் முடிக்க இன்னும் எப்பிடியும் ஒரு மாசமாவது ஆகாது...? அப்பிடின்னா நாம கெல்லியப் போய்ப் பாக்க எப்பிடியும மார்ச் கடைசி அல்லது ஏப்ரல் முதல் வாரமாகிடும்னு நெனைக்கிறேன்... சரிடா சரிடா... எவ்வளவு வேகமா முடியுதோ அவ்வளவு வேகமா வேலைய முடிச்சி உன்னை மெம்பிஸ் கொண்டுபோயி கெல்லி முன்னால நிறுத்திடறேன்டாப்பா... சும்மா போட்டு கண்ணைக் கசக்கி சீன் போடாத... அப்புறம் எனக்குத் தாங்காது தெரிஞ்சதா...

அவனுக்குள் கணக்குப் போட்டான். எப்படியும் நானூற்று எழுபத்தைந்து அடி நீளத்திற்குக் கயிறு தேவைப்படும் என்று தோன்றியது. கயிறு தயாரிக்கும் வேளையில் இரவுபகல் பாராமல் உழைத்துக் ஆரம்பித்தான். தினந்தினம் பதினஞ்சி அடிக்குக் குறையாம கயிறு தயாரிச்சே ஆகனும்...

******ebook converter DEMO Watermarks*******

அப்பத்தான் சீக்கிரமா போய்ச் சேரமுடியும்...அவனிடமோ... வில்சனிடமோ... மனதிற்குள்ளோ...அவன் கட்டளை இட்டுக் கொண்டபடி தொடர்ந்து வேலையில் ஈடுபட்டான்.

இத்தனை சீக்கிரமாய் இந்தப் பணியை முடித்தால் தான் கடல் அமைதியாக இருக்கிற பருவம் வரும்போது சரியாக பயணம் செய்ய ஏதுவாக இருக்கும் என நினைத்துக்கொண்டான். அந்தப் பருவத்தில் காற்றும் தீவுக்கு எதிர்த் திசையில் அடிக்கும் என்பதை எல்லாம் அனுபவத்தின் மூலம் கச்சிதமாய்க் கணக்கெடுத்து வைத்திருந்தான்.

வேலை துரிதமாக நடந்துகொண்டிருந்தது. களைப்பாற கொஞ்சமாய் ஓய்வெடுக்கலாம் எனக் கீழே கிடந்த ஒரு தென்னை மரத்தின் மீது அமர்ந்தான். உடனே வில்சனைப் பார்த்துச் சொன்னான்.

"என்னடா... கொஞ்சநேரங்கூட ரெஸ்ட் எடுக்க விடமாட்டேங்கற... இங்க பாரு... காத்து இன்னும் மேற்கு நோக்கித்தான் அடிக்குது... அப்ப நமக்குப் போதுமான காலம் புறப்படறதுக்கு இருக்கு... நீ வேணாப் பாத்துட்டே இரு... அதுக்குள்ள முடிச்சிருவேன்டா... அடடடா... படுத்தறான்யா..."

உடனே கோபத்தோடு வில்சனைப் பார்த்தான்.

"இப்ப எதுக்காக முறைக்கிற... மேற்கொண்டு தேவைப்படற அந்த முப்பது அடிக் கயிறு பத்தித் தானெ கேக்கற... எனக்குத் தெரியும்... அதுக்கு இப்ப என்ன செய்யனுங்கற... மேலெ போயி அதைப் பாத்து எடுத்துட்டு வான்னு சொல்ற... அதானெ... செஞ்சிட்டாப் போச்சி... அப்பிடி பொறுமையாச் சொல்லு... அதைவிட்டுட்டு கடுப்பேத்துனேன்னா என்ன அர்த்தம்... கத்தாத... போறேன்...போறேன்... போயிப் பாக்கறேன்... நான் ஒன்னும் அதுக்கெல்லாம் பயப்படற ஆள் இல்லெ..."

சக் நோலன் மேலே மறுபடி அந்த உயர்ந்த மலைப்பாறை மீது ஏறித் தேடினான். அதிலிருந்த அந்தப் பட்டமரத்தில் ஒரு கயிறு உள்நோக்கி தொங்கிக்கொண்டிருந்தது. அதைப் பற்றித்தான் வில்சன் ஞாபகப்படுத்தியதாய் சற்றுமுன் அவனுக்குள் வாக்குவாதம் செய்துகொண்டான்.

அந்தக் கயிறைப் பிடிக்கக் கொஞ்சம் ஆபத்தான காரியம் செய்ய

******ebook converter DEMO Watermarks*******

வேண்டியிருந்தது. செய்யத்தான் வேண்டும் என்றாகிறபோது செய்வதில் ஒரு ஆபத்துமில்லை என்று மனதிற்குள் திடம் சொல்லிக் கொண்டான்.

எட்டாத தூரத்தில் இருந்த அந்தக் கயிற்றை அந்தரத்தில் கை நீட்டிநீட்டிநீட்ட்டிக் கிட்டத்தட்ட வளைந்து தாவி, கைப்பிடி பாறையிலிருந்து தளர்ந்து அந்தரத்தில் குறிபார்த்து அந்தரத்தில் பயணித்து நினைத்த மாதிரி எப்படியோ பிடித்து விட்டான்.

பின்னர் சமாளித்துக்கொண்டவனாய் அதை மெல்ல மேலே இழுத்தான். அதில் ஒரு மனித உருவம் போன்ற ஒரு வஸ்து இருந்தது. அது கட்டையா, மனிதவுருவத்தின் கல்படிவமா... தெரியவில்லை. அதை மேலே தூக்கினான். ஒரு தலை உடல் மற்றும் கைகால்கள் கொண்ட மனிதனின் கேலிச்சித்திர வடிவமைப்பு கொண்ட ஒரு மரக்கட்டை தான் அது. பின் அந்த வஸ்துவின் தலைப்பகுதியில் மரப்பட்டையால் ஆன கயிற்றினால் சுருக்கிடப்பட்டு தூக்கிலிடப்பட்டு தொங்கவிடப்பட்டிருந்தது. கழற்றினான். தனியாக எடுத்துப் பார்த்தான். அது ஒரு நீளமான தூக்குக் கயிறு. பார்த்தது எதிர்பார்த்திருந்ததாக இருந்தும் திகிலாக இருந்தது.

இத்தனைக்கும் அது அவனே ஒரு விரக்தியான ஏதோ ஒரு கணத்தில் சோதித்துப் பார்ப்பதற்காகச் செய்து பார்த்தது தான். பின் காத்திருக்கும் கெல்லியிடம் என்ன பதில் சொல்வது என்கிற வில்சனின் கேள்வியால் அந்த எண்ணத்திலிருந்து விடுபட்டு வந்து விட்டான்.

அந்த மனித உருவ உருவகம் ஒரு குறியீடு போல காட்சியளித்துக்கொண்டிருந்தது. அவன்

இங்கேயே இருந்தால் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இப்படிப்பட்டவொரு மனநிலைக்கு உந்தித் தள்ளப்பட நேரிடும் என்கிற அர்த்தத்தின் படிமம் என்று அவன் அந்த நொடியில் உணர்ந்திருந்திருக்கக் கூடும்.

# 20

இரவு. குகைக்குள் தீ மூட்டியபடி வில்சனிடம் பேசிக்கொண்டிருந்தான். "நீ மேலெ போகச் சொன்னது இதுக்குத் தானா...? அது என்ன அடையாளம்? இங்க

******ebook converter DEMO Watermarks*******

மாட்டிக்கிட்டவங்க கதி இது தான்னு சொல்லாமச் சொல்லுதுனா சொல்ற? இங்க இருந்து தப்பிக்கவே முடியாதுங்கறியா? அதெப்பிடிடா நீ இந்த மாதிரிலாம் உளர்றதுக்குக் கத்துக்கிட்ட? அதைக் கட்டிச் சோதிச்சதே நாந்தான். ஆனா அதுவே என்னோட மனநிலையை, என்னோட எதிர்காலத்தை உணர்த்தற ஒரு அடையாளமா மாறிடுச்சின்றியே? அப்படின்னா நீ பயப்படறியா? என் மேல

நம்பிக்கையில்லையா?

அது எப்பிடி நீ என்னைப் பாத்து அப்படிச் சொல்லலாம்...? நான் தோல்வியை எப்பவுமே நிரந்தரமா அனுபவிச்சதேயில்ல தெரியும்ல...? யார்கிட்ட என்ன பேசறதுன்னு வேண்டாம்? எங்கிட்டயேவா? சரிதாம்ப்பா... நீ சொல்றது எல்லாம் இதுவரை பலிச்சிட்டு வந்திருக்கு தான்... நான் இல்லேன்னு சொல்லலையே... அதுக்காக எல்லாமே நீ சொல்றபடித்தான் நடக்கனும்னு இல்லெ...

அப்ப இங்க உக்காந்துட்டு இத்தனை பாடுபடற நாங்கள்லாம் சும்பப் பயலுகளா... சும்மா சொன்னதையே சொல்லிட்டிருக்காத... ஏதாச்சும் ஒத்தாசையா பேசு... உருப்படியா இங்க இருந்து போறதுக்கு வழி இருந்தாச் சொல்லு... அதை விட்டுட்டு இங்கயிருந்து போக நெனைக்கறது கயித்துல தொங்கறதுக்குச் சமம்னு கதை விட்டுட்டு இருக்காதெ... அப்படி நான் இங்கயிருந்து என்னை நானே சாகடிச்சிக்கறவனா இருக்கறதைவிட இங்கயிருந்து போற முயற்சியில சாவறதே மேல். அப்படிச் சாகற நெனப்பு வர்றதா இருந்தா இத்தனை கஷ்டப்பட்டப்பவேயே அந்த நெனப்பு ஏன் வரலை?

ஏன்னா நான் போராடப் பிறந்தவன்... நெனச்சதைச் சாதிக்கறதுக்காகப் பிறந்தவன்... எப்படிப்பட்ட பிரச்னை வந்தாலும் ஒன்டி ஆளா நின்னு சமாளிக்கத் தெரிஞ்சவன்... திரும்பவும் சொல்றேன்... என் கம்பெனி ஆளுங்க யார்ட்ட வேணா போயிக் கேட்டுப்பாரு... அப்பத்தெரியும் நான் யாருன்னு... அப்புறம் எதுக்குப் போன தடவை இங்கயிருந்து ரப்பர் மிதவையில தப்பிச்சிப்போக முயற்சி பண்ணுனப்ப, கடல்ல விழுந்து அப்படிப் பாறையில மோதி தேச்சுக்கிட்டேன்னு கேக்கறியா...?

அது அப்போ... இப்போ நான் எவ்வளவோ கத்துட்டிருக்கேன் தெரிஞ்சுதா...? இப்ப என்னோட அனுபவம் வேற... நிச்சயம் என்னால இந்த எடத்தை விட்டுப் போக முடியும்... வெற்றிகரமா இங்க இருந்து போயி கெல்லி முன்னால உன்னை நிறுத்தறேன் பாரு... அப்ப இந்தக்
******ebook converter DEMO Watermarks*******

கோழைத்தனமான பேச்சைச் சொல்லிப் பாரு... அவ நம்பறாளா பாப்போம்...?

நீ சொல்றது நெஜமாவேகூட இருந்தாலும் அந்த நெஜத்தை நாம நெனச்சா பொய்யாக்கிக் காட்ட முடியும்னு சொல்றேன்... இப்ப எதுக்கு வாய்க்குள்ளயே சிரிக்கிற... இது தான் எனக்குப் பிடிக்காதுங்கறது... எதுவா இருந்தாலும் சொல்லிட்டுச் சிரி... அதென்ன வாய்க்குள்ளயே நமட்டுச் சிரிப்பு... சிரிக்காதேன்றன்ல... போடா...போய்த் தொலை..." என்று தன்னின் ஒட்டுமொத்த பயத்தைத் தன்னுள்ளிருந்து எடுத்து எறிய விரும்பியதின் குறியீடாய் இயலாமையில் வில்சனை எடுத்து குகைக்கு வெளியே எறிந்தான்.

அவன் அவனாக இல்லை அப்போது. அவனின் பயம் இருள் பரவியிருந்த குகையாய் அவனைக் கவ்விக்கொண்டிருந்தது. அத்தனையையும் வெளியே தூக்கிப்போட்டுவிட்டதாய் நினைத்தான்.

ஒரு நொடி தான். ஒரே ஒரு நொடி தான். சட்டென உணர்ச்சிவயப்படலில் இருந்து விடுபட்டான். எங்கே வில்சன்? அவனை எங்கே துரத்தினேன்? இந்த ராத்திரிவேளையில் அவனை வெளியே துரத்தினால் எங்கே தான் போவான்? அவனுக்கென்று யாருமே இல்லையே? என்னை விட்டு கோவித்துக்கொண்டு எங்காவது போய்விடுவானா? அவனுக்குச் சரியாக வழி கூடத் தெரியாதே? அய்யோ... வில்சன்... என்னைவிட்டுப் போய்விடாதே... நான் கோபத்தில் அப்படி நடந்துகொண்டுவிட்டேன்... நான் தானே... நான் தானேடா... சரி... அதற்காக கோபித்துக் கொண்டு அப்படியே போய்விட நினைப்பதா?

பதறியடித்துக்கொண்டு சக் நோலன் வெளியே ஓடி வந்தான். அவனுக்குக் கடல் பழக்கப்பட்டிருந்ததாலும், நிலவொளி வீசிக்கொண்டிருந்ததாலும் கடலுக்குள் ஓடிஓடித் தேடினான்.

கடைசியில் ஒரு இடத்தில் வில்சன் ஒதுக்கமாய் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டுபிடித்து விட்டான். உள்ளே போய் அவனை எடுத்தான். ஆதர்சத்தோடு, "உனக்கொன்னும் ஆகலியே?" என்று கேட்டான். தண்ணீர்பட்டு அவனின் முகம் கொஞ்சம் கோணல்மாணலாகிப் போயிருந்தது. அவன் கண்கள் கலங்கிக்கொண்டு வந்தது.

******ebook converter DEMO Watermarks*******

குகைக்கு அழைத்து வந்தான். தன் புறங்கையில் லேசாக ஒரு கம்பியை வைத்துக் கிழித்தான். ரத்தம் வந்தது. அதை ஒரு சிறிய துணியில் தொட்டுத்தொட்டு அழிந்திருந்த வில்சன் உருவத்தை மறுபடி அந்தப் பந்தில் முதலில் இருந்த மாதிரியே வரைந்தான். அவனுக்குக் கோபித்துக்கொண்டு வெளியே போயிருந்த வில்சன் ராசியாகித் திரும்ப வந்துவிட்ட உணர்வு. வில்சனைப் பார்த்துச் சொன்னான்.

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியும்டா... கேடி... இப்ப ராசி தானே... நீ சிரிக்கிற சிரிப்புலயே தெரியுதே..." என்று புன்னகைத்தான்.

# 21

கிட்டத்தட்ட பாய்மரக்கப்பல் தயார் செய்துவிட்டான். இரவு பகல் பாராத அத்தனை நாளின் உழைப்பு அவனை ஏமாற்றிவிடவில்லை. நினைத்த மாதிரியே உருவாகியிருந்தது.

நினைத்தமாதிரி காற்று அந்தத் தீவிற்கு எதிர்த்திசையில் அடிப்பதை அந்தக் கொடி பறந்து உணர்த்தியது. உற்சாகமானான்.

குகைக்குள் சென்றான். கெல்லி தந்திருந்த அந்த லாக்கெட் எடுத்து கழுத்தில் பத்திரமாய் கட்டிக் கொண்டான்.

அங்கே இத்தனைநாளாய் எடுத்து வைத்திருந்த அந்த யாருடையதோ ஆன முக்கியமான அந்தப் பத்திரத்தைப் பத்திரமாக ஒரு ஃபெடெக்ஸ் பேக்கிங்கிற்குள் வைத்தான். அது இருந்தால் தான் அந்த நபர் தனக்காக வழங்கப்பட்ட அந்தச் சொத்தைச் சொந்தம் கொண்டாட முடியும். அதைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நபருக்கான சொத்தின் ஆதாரப்பத்திரம் அது. காற்றுக்குமிழ் கொண்ட பிளாஸ்டிக் தாள் வைத்துக் கவசமாய்ச் சுற்றினான். அதன்மேல் அந்த ரப்பர் மிதவையின் மிஞ்சியிருந்த ஒரு பகுதியை எடுத்துத் தண்ணீர் பட்டாலும் எதுவும் ஆகாதபடி கச்சிதமாய் அதன் மேல் சுற்றினான். டேப் வைத்துக் கட்டி பத்திரப்படுத்திக் கொண்டான்.

படகின் கூடாரத்திற்குள் படுத்துக் கொண்டான். அவன் மரத்தினாலான மிதவை மீது ஒரு கம்பில் அந்த மெல்லிய துணியைக் கொடிபோலக் கட்டிவிட்டிருந்தான். காற்றின் திசை அறிவதற்காக. அது அவன் எதிர்பார்த்திருந்த பக்கம் திரும்பும் வரைக் காத்திருந்தான்.

******ebook converter DEMO Watermarks*******

அவ்வப்போது அதைக் கவனித்தபடி இருந்தான்.

அன்றிரவு. குகையில் படுத்திருந்தான். அவன் மூடியிருந்த கண்கள் திறந்து வில்சனைப் பார்த்தான். என்ன முழிச்சிட்டு உக்காந்திருக்க... சுற்றுலா வந்த இடத்தைக் கூடிய சீக்கிரமே பிரியப் போறோங்கற வருத்தமா... வந்த எடத்துலயே இருந்துட முடியுமா? சந்திப்பும்பிரிவும் தவிர்க்கமுடியாத நாணயத்தோட இருபக்கங்கள்டா... ப்போ... போயி... வேலை வெட்டியைப் பாக்க வேணாமா?அதில்லையா? பின்ன? என்னமோ தூக்கம் வரவே மாட்டேங்குதா? நெஜமாத் தான் சொல்றியா? நீ இன்னும் தூங்கலையா... நானுந்தான்... நீ இன்னுமா பயந்துட்டிருக்க... சொல்லு... பயமாவா இருக்கு... எனக்குந்தான்...

தூக்கிடப்பட்டிருந்த மனிதவுருவகமான மரப்பொம்மையைத் தூக்குக் கயிற்றில் இருந்து விடுவித்து இப்போது அதை அந்த மலையுச்சி மீதிருந்த பாறையின்மேல் நிற்க வைத்திருந்தான். "போய் வா... வெற்றியோடு போய் வா" என அவனுக்குக் கையாட்டுவதுபோல அங்கே நின்று கொண்டு அது சமிக்ஞை செய்வதாய்ப்பட்டது.

விடிந்தது. சூரிய ஒளிபட்டு எழுந்தான்.

அங்கேயிருந்த ஒரு பெரிய பாறையில் சுண்ணாம்புக் கல் வைத்துக் கல்வெட்டாய் எழுதினான். இங்கே சக் நோலன் என்கிற மனிதன் ஆயிரத்து ஐநூறு நாட்கள் இருந்தான். கடல் வழியாக தப்பித்துப்போனான் என்பதை மெம்பிஸ் நகரில் வசிக்கும் கெல்லியிடம் தெரியப்படுத்துங்கள். ஐ லவ் ஹெர். ஐ சிம்ப்ளி அடோர் ஹெர் சின்ஸ் பிகாஸ் ஐ லவ் மைசெல்ஃப்.

காற்று அவன் எதிர்பார்த்திருந்த திசை நோக்கிப் படபடவென அடித்தது. லாக்கெட் பத்திரமாக கழுத்தில் திடமாகத் தான் தயாரித்துவைத்திருந்த கயிற்றால் கட்டித் தொங்கவிட்டிருந்தான். பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த ஃபெடெக்ஸ் பார்சல் மற்றும் வில்சன் எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரானான். ஒரு பாறையின் மீது இரண்டு பெரிய தென்னை மரங்களை சரிவாய் தாக்கல் கொடுத்திருந்தான். அதன் மீது படகை நிறுத்தி வைத்திருந்தான். இன்னொரு பெரிய கட்டையை வைத்து அதை நெம்பி விட படகு தண்ணீருக்குள் சென்று ஓரளவு ஆழமான அந்தப் பகுதியில் கம்பீரமாய் மிதந்தது.

உடனே கரையில் ஒரு குச்சியின் மீது அமர்ந்திருந்த வில்சனைத் தூக்கிக்

******ebook converter DEMO Watermarks*******

கொண்டான். அவனைப் பார்த்துச் சொன்னான்.

"நாமெ பொறப்பட வேண்டிய நேரம் வந்திருச்சி... நீ எதுக்கும் பயப்படாத... நான் இருக்கேன்... துடுப்புப் போடறது எல்லாமே நான் பாத்துக்கறேன்... நீ பேசாம ஊஞ்சலாடிட்டே எல்லாத்தையும் பாத்துட்டிரு... சரியா..."

அவன் உற்சாகத்தோடும், நம்பிக்கையோடும் துடுப்புப் போடத் துவங்கினான். படகு வேகமாக ஆழ்கடல் நோக்கிப் பயணித்தது. அலைகள் அவ்வப்போது அவனை நோக்கி வரும்போது,

"பத்திரமாப் புடிச்சிக்கோ வில்சன்" என்று எச்சரிக்கையுணர்வோடு கத்தினான். ஆவேசமான போர் அது. கடலின் அத்தனை வலுவையும் அவன் ஒருவனாக இருந்து எதிர்கொண்டான்.

கெல்லி... என் அன்பே... உன்னை நோக்கி என் பயணம் துவங்கிவிட்டது. என் வாழ்வின் மகிழ்ச்சியான நாள் இது. உயிரின் கடைசித் துளி இருக்கிறவரை போராடுவேன். உயிர்த் துளி கொஞ்சமே கொஞ்சமேனும் ஒட்டிக்கொண்டிருந்தால் போதும் உன்னை வந்து தரிசித்து விடுவேன். ஒருவேளை அது முடியாமல் போனால் உன் நினைவுகளோடு கரைந்துபோய் விட்டேன் என்பதை நீ உணர்ந்து கொள்வாய் என எனக்கு உன் மனது என் மனதிற்குள்ளிருந்து சொல்வது கேட்கிறது என்று எண்ணிக்கொண்டான்.

பயம் ஒரு மனிதனை அடிபணிய வைக்கும்போது எந்த அளவு வீழ்த்தி விடுகிறது. அதே பயத்தை அவன் மிஞ்சும்போது எத்தனை பெரிய சாதனைக்கு அழைத்துச் சென்றுவிடுகிறது என்று மனதில் சொல்லிக்கொண்டான்.

சரியான நேரத்தில் பாய்மரம் தன்னை விரித்துக்கொண்டது. உடனே காற்று அதன் மீது மோதத் துவங்க, படகு வேகம் எடுத்துச் செல்லத் துவங்கியது

"வில்சன் பயப்படாதடா... கெட்டியாப் பிடிச்சிக்கோ... நான் நெனைக்கிறேன்... நாம ஆபத்தான கட்டத்தைக் கடந்துட்டோம்னு..."

சக் நோலன் உற்சாகமாய்ச் சிரித்தான். சட்டென அவன் புன்னகை உறைந்து போனது. அவன் எதிரே அந்தத் தீவு கொஞ்சங்கொஞ்சமாய்

******ebook converter DEMO Watermarks*******

சிறுத்துக்கொண்டு வந்தது. அதை ஒருவித நன்றியோடு பார்த்தான். தன் கண்களுக்குள் அதன் அத்தனை அம்சங்களையும் புகைப்படம் எடுத்து மனதில் மாட்டி வைத்துக்கொண்டான்.

இத்தனை நாள் எந்த ஒரு பேச்சோ, இசையோ கேட்க வாய்ப்பற்றிருந்தவன் முதன்முதலாய்த்¢ தன் இதயத்திற்குள் மகிழ்ச்சிப் பெருக்கின் அடையாளமாய் ரீங்கரிக்கும் ஒரு பெண்குரலில் புதுவிதமான ராகத்தைத் தன்னுள் சுதந்திரஇசையாய் உணர்ந்தான்.

மாலை வேளையாகியிருந்தது. அலைகள் மட்டுப்பட்டிருந்தது. அவன் நிதானமாக காற்றின் போக்கில் இரண்டு துடுப்பையும் ஒரே நேரத்தில் லாவகமாய்ப் போட்டபடி இருந்தான்.

இருட்டுவதற்குள் மேலேயிருந்த ஒரு பகுதி ரப்பர் மிதவையில் சேகரமாகியிருந்த மழை நீரை தேங்காய்கள் சில எடுத்து அதன் கண் வழியாக நிரப்பி¢ச் சிறிய துணியை அடைப்பானாய்ப் பயன்படுத்தித் திணித்து மூடி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான்.

இரவின் நிறம் மெல்லமெல்ல அந்தப் படகின் மீது கவிந்தது. அவன் இயங்கிக் கொண்டேயிருந்தான். திமிங்கலம் விட்டுவிட்டுச் சத்தம் எழுப்பிக்கொண்டிருந்தது.

# 22

இரவு மெல்ல மெல்லக் கரைந்து விடியத் துவங்கியது. சக் நோலன் மரக்கலத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தான். தன் கையில் வைத்திருந்த வாய் பிளந்திருந்த மர ஈட்டியை எடுத்துத் தண்ணீருக்குள் சென்று மூச்சுப்பிடித்துக் காத்திருந்து ஒரு பெரிய மீனை லாவகமாகக் குத்திப் பிடித்தான். மரக்கலத்திற்குத் திரும்பவும் நீந்தி வந்தான்.

அதை உண்டான். தண்ணீர் அருந்தினான். காற்று வேகமாக அடிக்கத் துவங்க பாய்மரம் விரிந்து கொண்டதில் படகு வேகமாகப் பயணித்தது. காற்றடிக்கும்போது எழுந்து நின்று கொண்டது. காற்று அடிக்காதபோது அப்படியே படகிற்குள் இறங்கி அதன் கூரை போலச் சரிந்து உட்கார்ந்து கொண்டது. அந்த பிளாஸ்டிக் பாய்மரம் கச்சிதமாக இயங்கியது ஆச்சர்யமாக இருந்தது.

******ebook converter DEMO Watermarks*******

மறுபடி இருள் கவியத் துவங்கியது. அவன் பெருமையாய் பாய்மரம் பற்றி நினைத்துக் கொண்டிருக்கையிலேயே, அந்தப் பாய்மரம் பயங்கரமான ஒரு காற்றை எதிர்கொண்டு மார்பில் குத்துப்பட்டு, காற்றில் அசுரத்தனமாய் இழுத்துச் செல்லப்பட்டு வீரமரணம் எய்தியது.

சக் நோலன் வில்சனிடம் சொல்லிக் கொண்டான்.

"நம்ம பாய்மரம் நம்ம விட்டுப் பிச்சிட்டுப்போயிருச்சின்னு நெனைக்கிறேன்... கெட்டியாப் புடிச்சிக்க. நான் இருக்கேன்டா..." என்றான்.

ஆறுதல் சொல்லிக்கொண்டே அவன் களைப்பில் தூங்கிப் போனான். கை மட்டும் கெட்டியாக அந்த மரக்கட்டைகளைப் பற்றியிருந்தது. வில்சன் அமர்ந்திருந்த கம்பு மெல்லமெல்ல அலைகளின் குலுக்கலில் சரியத் துவங்கியது. அது மெல்லமெல்ல வில்சன் தலையைப் பிடித்து இழுக்கப் பார்த்தது. சக் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். வில்சன் பயத்தில் அலறினான். சக் நோலனுக்குக் கேட்கவில்லை.

எப்போது வேண்டுமானாலும் அந்தக் கம்பு தன் பிடிமானம் இழந்து கழன்று கொள்ளும்போல் இருந்தது. கயிறு பிடி தளரத்தளர முன்னும்பின்னுமாய் அந்தக் கம்போடு சேர்ந்து வில்சன் ஊஞ்சலாடத் துவங்கினான். அப்படியானால் வில்சன் கதி? கடலில் விழ வேண்டியது தானா? கெல்லி அவனைச் சந்திப்பதற்காகக் காத்திருப்பாளே? என்ன பதில் சொல்வது அவளிடம்? வில்சன் தன்னைத் தண்ணீரின் பிடிக்குக் கொடுக்காமல் தப்பிக்க இயன்ற மட்டும் போராடினான்.

இது எதுவும் தெரியாமல் சக் நோலன் உறங்கிக்கொண்டிருந்தான் அல்லது மயங்கிக் கிடந்தான். அருகே அந்த டாக்குமெண்ட் பார்சல் மரக்கலத்தோடு சேர்த்து பத்திரமாய்க் கட்டப்பட்டுப் பாதுகாப்பாய் இருந்தது. கழுத்தில் கெல்லியின் லாக்கெட் தொங்கிக் கொண்டு அவன் மார்பின் மீது படுத்திருந்தது.

வில்சன் பிடி எந்த நொடியிலும் கழன்று விடும் நிலையை உணர்ந்துகொண்டுவிட்டான். சக்நோலனை உருகும் பார்வையில் தீர்க்கமாய்ப் பார்த்தான். அவனின் ஊமை அலறல் அங்கே யாருக்கும் கேட்கவில்லை. பிடி அவிழும் வரை போராடித்தான் பார்த்தான். முடியவில்லை. கடலுக்குள் விழுந்தான்.

******ebook converter DEMO Watermarks*******

கடலின் நீர் மின்னோட்டம் அதனைப் படகிலிருந்து வேறு திசைநோக்கி இழுத்தது. அவன் தத்தளித்தபடி எவ்வளவோ முயற்சித்தான். அவனால் சச் நோலனை எப்படிப் பிரிய முடியும்?

அந்நேரம் பார்த்து ஒரு திமிங்கலம் மூச்சு விட அதன் துவாரம் வழியாகத் தண்ணீர் மேலே பீய்ச்சி அடித்தது. அது சக் நோலன் மீது ஒரு நொடி மழையாய்க் கொட்டியது. நோலன் மெல்ல திரும்பிப் படுத்தான். அவன் கழுத்தில் அந்த லாக்கெட் பத்திரமாகத் தொங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. சக் நோலன் எழுந்ததும் வில்சன் இருந்தபக்கம் தான் பார்த்தான். திடுக்குற்றான். வில்சன் அங்கே இல்லை.

"வில்சன் எங்கெ இருக்க?எங்க போயிட்டடா?"

சுற்றும்முற்றும் பார்த்தான்.

வில்சன் தூரமாய் மிதந்துகொண்டு அவனிடமிருந்து தூரத்திலிருந்தே கண்ணீரோடு

பிரியாவிடை பெறுவதுபோல சிறிய புள்ளியாகிக்கொண்டிருந்தான். அதற்குள் சக் நோலன் பார்த்து விட்டான். அதை நோக்கித் தண்ணீருக்குள் பாய்ந்து நீந்தத் துவங்கினான்.

அவனை நோக்கிச் செல்லத்தான் வில்சன் முயற்சி பண்ணினான். அவனால் ட்ரிஃப்ட் விசையை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை.

சக் அருகே செல்லச்செல்ல அவன் விலகிவிலகிச் சென்றான். உடனே படகும் அவனை விட்டுப் போகத் துவங்கியது. உடனே திரும்ப நீந்திப்போய் படகின் கயிற்றைத் தன்னோடு பிடித்துக்கொண்டு வில்சனை நோக்கி நீந்தத் துவங்கினான். "வில்சன் இருடா... போகாதெ... இந்தா வந்துட்டேன்..." என்று சொல்லிக்கொண்டே அதை நோக்கி நீந்தினான். மரப்படகு எதிர்ப் பக்கமாய்க் காற்றடித்த திசைக்கு அவனை இழுத்தது. நீர்மின்னோட்டம் வில்சனை இன்னொருபுறமாய் இழுத்துக்கொண்டு சென்றது.

சக்நோலன் இரண்டிற்கும் நடுவில் தத்தளித்தான். என்ன செய்வதென்று தெரியாமல்

திமிறினான். உள்ளே முங்கினான். மூச்சு முட்டியதில் தண்ணீர்

******ebook converter DEMO Watermarks*******

குடித்துவிட்டுத் தலையை வெளியே தூக்கிச் செருமினான்.

ஒரு கட்டத்தில் கையில் இருந்த கயிற்றின் பிடி நழுவியது. ஒரு பக்கம் படகு. இன்னொரு பக்கம் வில்சன் ஆளுக்கொரு திசையில் நகர்ந்தார்கள். இவன் எதை நோக்கிச் செல்வதென தெரியாமல் திகைத்துப் போய் நடுவில் துடித்தான்.

"வில்சன்...வில்சன்" என்று கத்தினான்.

அவன் கண்ணீரை கடல் விழுங்கிச் செறிமானம் கொண்டவண்ணமிருந்தது.

தண்ணீருக்குள் ஆழமாய் மூழ்கி முங்கு நீச்சல் செய்து விடுபட்ட கயிற்றின் நுனியைப் பற்றினான். அதற்குள் வில்சன் இன்னும் தூரமாய் நகர்த்திக்கொண்டு செல்லப்பட்டிருந்தான். இப்போது மங்கலான புள்ளியாய் மாறிப்போயிருந்தான்.

தாளமுடியாமல், "வில்சன்... என்னை மன்னிச்சுக்க வில்சன்... என்னை மன்னிச்சுக்க..." என்று கேவலோடு சொன்னான்.

அயர்ச்சியோடு படகிற்குத் திரும்பினான். அவன் விடாமல் புலம்பினான். "என்னை மன்னிச்சிரு வில்சன்... என்னால முடியல வில்சன்..." என்றபடி படகின் மீது ஏறினான். அவன் தன்னையே கடல் விழுங்கிவிட்டதாய் நினைத்தான்.

படகில் ஏறியது தான் அவனுக்குத் தெரியும். பிரக்ஞையும் அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது. உயிரற்ற ஒரு சடலம்போல மரப்படகில் கிடந்தான். அவன் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய அந்தத் தஸ்தாவேஜ் அஞ்சல்சிப்பம் டேப் வைத்து மரக்கலத்தோடு இறுக்கமாகக் கட்டப்பட்டிருந்ததால் ஒன்றும் ஆகாமலிருந்தது.

"மனனிச்சுரு... மன்னிச்சிரு..." என்று மயக்க நிலையிலும் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தான். அந்த நொடிகளின் பேதலிப்பில் தன்னுடைய துடுப்புகள் இரண்டையும் தண்ணீரில் நழுவவிட்டான். அவனுடைய நம்பிக்கையாக இருந்த வில்சன் கழன்று கொண்டுவிட்ட பிறகு அவன் தான் என்ன செய்ய முடியும்? பாய்மரத்தட்டு என்று ஒவ்வொன்றாய் கழன்று சென்றது. முடிவில் வில்சன்.

******ebook converter DEMO Watermarks*******

இப்போது அவனும் அந்த லாக்கெட்டுமாய்த் தன்னந்தனியே நிராதரவாய் அந்த

மரத்தோணியில் மௌனித்திருந்தார்கள். அவன் செத்தையாய்ச் சாய்ந்து கிடந்தான். மரப்படகு அதன் மாறிக்கொண்டுவரும் நீர்மின்னோட்டத்திற்கு ஏற்பத் தன்போக்கில் நகர்ந்து கொண்டிருந்தது. அவன் சக்தியற்றுக் கிடந்தான்.

அந்த நேரம் திமிங்கலம் உறுமும் சத்தம் கேட்டது. ஒரு நொடி மழையை அவன் மீது பீய்ச்சி அடித்தது. அவன் அதில் லேசாக மயக்கம் தெளிவுற்றவனாய் இடப்பக்கமாய் ஒருச்சாய்த்துப் படுத்தான்.

அடுத்த நொடி அவன் முதுகுப்பக்கமாய் மிகப்பெரிய கப்பல் ஒன்றின் நுனிப்பாகம் அமைதியாய்த் தோன்றி மிகப்பிரமாண்டமாய் வெளிப்பட்டுக் கடந்து சென்றுகொண்டிருந்தது. அவன் மயக்கம் இன்னும் தெளிவடையாமல் அயர்நதுபோய்க் கிடந்தான்.

திமிங்கலம் மறுபடியும் நொடிப்பொழுது மழையை அவன் மீது அடிக்கச் செய்தது. அவன் மறுபடி கலைக்கப்பட்டடான். கண்கள் மெல்ல இமைத்தது. காதுக்குள் அந்த வித்யாசமான சத்தம் கேட்டது. காதைத் தீட்டிக்கொண்டு கேட்டான். ஒலிஎழுப்பி அலறிக்கொண்டிருந்தது கேட்டது. அவன் திரும்ப முடியாமல் சிரமப்பட்டுத் தன்னைத் திருப்பினான்.

தன்னை அந்தப் பக்கம் திருப்புவது என்பது பாறாங்கல்லை நகர்த்துவதுபோல கடினமாக இருந்தது. மெல்ல எழுந்து உட்கார்ந்தான். கண்கள் செருகிக்கொண்டு வந்தது. கத்த வேண்டும் என நினைத்தான். குரல்வளை சுத்தமாய் ஒத்துழைக்கவில்லை. தன்னுடைய கையை மட்டும் மிகுந்த சிரமத்துடன் உயர்த்தினான். அந்த விரல்கள் விரிந்து விரைத்திருந்தன. அதன் நுனிகளில் உயிர்த்துளிகள் காய்ந்து உலர்ந்துகொண்டிருப்பது தெரிந்தது. அத்தனை பெரிய ஒலிச் சத்தத்தின் இரைச்சலிலும் ஒரு கப்பல் ஊழியர் பார்த்துவிட்டதுபோல அவனுக்குள் தோன்றியது. அப்படியே மயங்கிப் போனான்.

# 23

******ebook converter DEMO Watermarks*******

கெல்லி வீட்டில் இருந்த தொலைபேசி அழைத்தது. இப்போது கெல்லி உடனே வந்து எடுத்தாள். அவளின் தோற்றத்தில் சில மாற்றங்கள் இருந்தது. நீண்ட கேசத்தை வெட்டிப் புதிய வடிவத்திற்கு மாறியிருந்தாள். கண்களில் மட்டும் அதே ஏக்கத்தின் பதிவு. கார்ட்லெஸ் ஃபோன் எடுத்துக் காதில் வைத்தாள்.

"யாரு... யாரு பேசறது?"என்றாள்.

"நான் யாருன்னு உங்களுக்குத் தெரியாது... ஆனா எங்க மருத்துவமனையில இருக்கறவரு உங்களுக்கு ரொம்பரொம்பத் தெரிஞ்சவரு..."

"ஓ.கே... யாருன்னு சொல்லுங்க..."

அந்த நபர் விசயத்தைச் சொன்னான்.

அவ்வளவு தான். அப்படியே செத்தைபோல மயங்கி விழுந்தாள். அவள் மயங்கி விழும்போது அவளின் இந்நாள் கணவன் அந்தச் சின்னப் பெண் குழந்தைக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தான்.

நான்கு வாரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அதன் பிறகு விமானத்தில் மெம்பிஸ் புறப்பட்டபோது பழைய சக் நோலனாக மாறியிருந்தான். ஜன்னலோர இருக்கையில் அமர்ந்தபடி வெளியைப் பார்த்தவண்ணம் வந்தான். அவனின் சகஊழியன் அந்த விமானத்தில் அவனோடு பயணம் செய்தான். நடக்க இருக்கும் நிகழ்ச்சி நிரல் பற்றிச் சொன்னான். சக் நோலன் விரும்பி அருந்துவானே என்று ஐஸ் வாட்டர் எடுத்து வந்து தந்தான். சக் கொஞ்சமாய் அருந்திவிட்டு அதை ஓரமாய் வைத்தான்.

"அங்கெ போனதும் உங்களுக்கு ஒரு பாராட்டு விழா இருக்கு... நீங்க உங்களை எதுவும்

சிரமப்படுத்திக்க வேண்டியதில்லெ... ஹலோ... தேங்க்யூ இந்த ரெண்டு வார்த்தை மட்டும் சொன்னாப் போதும்..."

அவன் நிதானமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

"அங்க இருந்து நாங்க உங்களை கெல்லி இருக்கற இடத்துக்கு

******ebook converter DEMO Watermarks*******

அழச்சிட்டுப் போகப்போறோம்..."

"எப்பிடியிருக்கா?" என்றான்.

"ம்... ஓ.கே... "

"சொல்லுங்க... அவளைப் பத்திச் சொல்லுங்க..." அந்தக் குரலில் அவனையும் மீறிய ஆர்வம் தெரிந்தது.

"நீங்க ஒரு விசயம் தெரிஞ்சுக்கனும்... நாலு வருசங்கறது ரொம்பப் பெரிய காலம்... இந்த நாலு வருசத்துல உங்களுக்கு என்னல்லாம் நடந்துருச்சி தெரியுமா?"

"எனக்கா?"

"ம். இங்க நீங்க இறந்துட்டதா தீர்மானமே பண்ணிட்டோம்... உங்களுக்கு ஒரு சவப்பெட்டி செஞ்சி அதுக்கு ஒரு சமாதியே கட்டிட்டோம்னா பாத்துக்கங்களேன்..."

"நான் இல்லாமலே எனக்குச் சவப்பெட்டியா... அதுக்குள்ள என்ன தான் வச்சீங்க?"

"அவங்கவங்க உங்க ஞாபகர்த்தமா வச்சிருந்ததை உள்ள வச்சாங்க... பேஜர், உங்களோட புகைப்படம், செல்ஃபோன் இப்பிடி என்னஎன்னவோ... நான் உங்களைப் பத்தின சி.டி வச்சேன்..." என்றான்.

சக் நோலன் தனது சவப்பெட்டி பற்றித் தானே கேட்டறிந்து கொள்ள நேர்ந்த விசித்திர உணர்வோடு ஜன்னல்பக்கம் பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

# 24

அவன் கெல்லியைச் சந்திக்க அழைத்து வரப்பட்ட அந்த இடத்திற்குள் நுழைந்தான். ஃபெடெக்ஸ் விருந்தினர் விடுதியாக இருக்கக்கூடும். ஃபெடெக்ஸ் விமான நிலையம் அருகிலேயே அந்த இடம் இருந்தது என்பது கண்ணாடி ஜன்னல் வழியே நடமாடும் விமானங்கள் மூலம் தெரிந்தது.

******ebook converter DEMO Watermarks*******

அதன் வரவேற்பறையில் இருந்த தொலைக்காட்சியில் ஃபெடெக்ஸ் நிறுவனத்தின் தலைவர் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அது சற்றுமுன் ரிக்கார்ட் செய்யப்பட்ட உரை.

"நாலு வருசத்துக்கு முன்னாடி ஃபெடெக்ஸ் குடும்பம் தன்னோட அருமையான அஞ்சி பிள்ளைங்களை இழந்தது. அது ரொம்பரொம்ப அதிர்ச்சியான தினம். ஆனா இன்னிக்கி அதுல இருந்து ஒரு பிள்ளை உயிரோட திரும்பி வந்து எங்களை இன்பஅதிர்ச்சியில ஆழ்த்தியிருக்கு.

அவரோட குடும்பத்துக்கு அவர் திரும்பக் கிடைச்சிட்டார்... மீளமுடியாத மீட்சியிலிருந்து அவர் மீண்டு வந்துட்டார். அவரோட இந்தக் குடும்பம் அவரை அன்போட வரவேற்கிறதில ரொம்பவே பெருமிதப்படுது..."

தொலைக்காட்சி அவன் அந்த இடத்திற்குள்நுழையும்போது தனியாக ஓடிக்கொண்டிருந்தது. வெளியே மக்கள் கைதட்டி ஆரவாரித்தபடி இருந்தார்கள்.

"எங்கள் குடும்பத்தின் மிக முக்கிய உறுப்பினராகிய சக் நோலன் காலத்தை வென்ற சாதனையாளர்.... அவரால் எங்கள் குடும்பம், அதைத் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல இந்த உலகமே உவகையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறது."

அப்போது அந்த இடத்தின் பின்வாசல் வழியாக அந்த நபர் வந்தான். சூட், கோட் அணிந்து பார்க்க நாகரீகமாக இருந்தான். நடுத்தர வயதில் இருந்தான். அவன் யார் என்று தெரியாமல் சக் தடுமாறியபடி, "மன்னிக்கனும்... நான் தப்பான இடத்துக்கு வந்துட்டேன்னு நெனைக்கறேன்..." என்றான்.

"இல்ல...இல்ல... நீங்க சரியான இடத்துக்குத் தான் வந்திருக்கீங்க..."

"நீங்க என்னை மறந்திருக்கலாம். எனக்கு உங்களெ நல்லா ஞாபகம் இருக்கு... நான் தான் உங்க பல்லுக்கு ரூட் கேனால் தெராபி செஞ்சது... அது கொஞ்சம் சரியா அமையாம வலி வந்தது கூட எனக்குத் தெரியும்... அதுக்காக நான் இப்ப மன்னிப்புக் கேட்டுக்கறேன்..."

"அதுக்குத் தேவையேயில்ல... இப்ப அந்த விசயத்தை நானே சரி பண்ணிட்டேன்..." என்று புன்னகைத்தான்.

******ebook converter DEMO Watermarks*******

"உங்க நண்பர் ஜிம் உங்களெப் பத்தி எல்லாம் சொன்னாரு..."

"ம்"

தயக்கத்துடன் சொன்னான்.

"நான் ஜெரி... கெல்லியோட கணவன்"

சக் உறைந்துபோய்ப் பார்த்தான்.

முகத்தில் எந்தவித வெளிப்பாடும் காட்டாமல் நின்றான்.

"நீங்க இறந்துட்டதா அறிவிச்சி உங்களுக்கு இறுதிச் சடங்கும் செய்து வச்சிட்டாங்க... அதனால தான் நாங்க... இதெல்லாம் கேக்கறதுக்கு உங்களுக்கு எந்த அளவு கஷ்டமாயிருக்கும்னு என்னால புரிஞ்சிக்க முடியுது... காலம் யாருக்காவும் காத்திருக்கிறதில்லையே... இப்ப நீங்க உயிரோட வந்திருக்கறது கேள்விப்பட்டதும் அவங்க ரொம்பவே குழம்பிப் போயிருக்காங்க... எதுக்கும் நீங்க ஒரு சில நாள் விடுங்க அதுக்குள்ள அவங்க மனநிலை உங்களெ எதிர்கொள்ளத் தயாராயிடும்... அப்புறம் அவங்க நிச்சயமா உங்களை சந்திப்பாங்க... நீங்க எதிர்பாக்கலேன்னாலும் நான் மறுபடி கேட்டுக்கறேன்... ஸாரி..." என்றுவிட்டுச் சென்றான்.

சக் நோலன் வின்டோ ஷீல்ட் வழியாகக் கவனித்தான்.

வெளியேறிய ஜெரி என்கிற அந்த பல் டாக்டர் வாகன நிறுத்தப் பகுதியில் நின்றுகொண்டிருந்த கெல்லியிடம் ஏதோ பேசி அவளைச் சமாதானப்படுத்துவது தெரிந்தது. அவள் இல்லை எந்த சூழ்நிலையாக இருந்தாலும் நான் அவரைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்பதுபோல் சொல்லி வர யத்தனித்தாள். அவன் தடுத்துச் சமாதானம் சொன்னான். அநேகமாகக் கொஞ்சநாள் பொறுத்து சந்திக்கலாம் என்று சொல்லியிருந்திருக்கலாம்.

ஒருவழியாய் அவளைக் காரில் உட்கார வைத்து அங்கிருந்து புறப்படுவதை சக் கவனித்தபடி நின்றான். தொலைக்காட்சியில் அந்த ரிக்கார்டட் நிகழ்ச்சியில் பாராட்டு மழை பொழிந்து கொண்டிருந்தது.



******ebook converter DEMO Watermarks*******

அடர்த்தியான ஒரு இரவுப்பொழுது. சக் நோலன் மீண்டு வந்ததற்காக அங்கே பார்ட்டி அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. சகஅதிகாரி ஜிம் கையில் ஒயின் கின்னத்தை வைத்துக்கொண்டு தீர்ந்துபோன ஒயின் பாட்டிலை ட்ரேயில் போட்டபடிச் சொன்னான்.

"ஓ.கே. பார்ட்டி இந்த அளவோட நிறைவடையுது. எல்லாரும் அவங்கவங்க வீட்டுக்குப் போயி நிம்மதியாத் தூங்கலாம்... சரியா..."

சக் நோலனிடம் நாளைய புரோகிராம் பற்றித் தெரிவித்தான். யார்யாரை நாளை சந்திக்க வேண்டும் என்கிற விசயத்தைத் தெரிவித்துவிட்டு, அதிகாலையில் வந்து சந்திப்பதாய்ச் சொல்லிச் சென்றான்.

எல்லோரும் அவனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள். ஆறுதல் சொன்னார்கள். "நிறைய அப்புறம் பேசணும்..." என்றார்கள். வீட்டிற்கு அழைத்தார்கள். ஜிம் அவனிடம், "நீங்க அடைய விரும்பின எல்லாம் இப்ப உன்னைத் தேடி வந்திருக்கு... தைரியமா இருங்க... எல்லாம் பாத்துக்கலாம்... நாளைக்கிப் பாக்கறேன்..." என்று பூரிப்போடும், நம்பிக்கையூட்டும் விதத்திலும் சொன்னான்.

புறப்பட்டான்.

அனைவரும் விருந்து முடிந்து சென்றதும் அவன் அங்கே சாப்பாட்டு மேஜையில் இருந்த வகை வகையான உணவுகளைப் பார்த்தான். அதிலிருந்த நண்டு வருவலைக் கையில் எடுத்துப் பார்த்தான். மறுபடி அதே தட்டில் போட்டான். விளக்கை அணைத்து விட்டுச்

சாப்பிடப் பிடிக்காமல் படுத்தான். கெல்லியோடும் நண்பர்களோடும் ஒன்று கூடி குக் தீவில் தரையிரங்குவதற்கு முந்தைய தினம் மகிழ்ச்சி பொங்க உண்ட உணவு ஞாபகத்திற்கு வந்திருக்கக்கூடும்.

இரவு விளக்கின் வெளிச்சத்தில் அவன் முன்னே இருந்த அந்த லாக்கெட்டில் கெல்லி மோனாலிசாப்புன்னகை புரிவது தெரிந்தது.

இரவு விளக்கை அணைத்தான். எங்கும் இருள் பரவியது.

# 26

******ebook converter DEMO Watermarks*******

முழுமை கொண்டிருந்த இரவு. மழை கொட்டிக்கொண்டிருந்தது. தூக்கம் எத்தனை முயன்றும் பிடிக்கவில்லை. டாக்சியில் கெல்லியைப் பார்க்கச் சென்றான். அழைப்பு மணி அழுத்தினான். திறந்தாள். கெல்லி அவனின் வருகைக்காகக் காத்திருந்ததாகச் சொன்னாள். டாக்சி சத்தம் கேட்டதுமே தெரிந்துகொண்டு விட்டதாகவும் சொன்னாள். அவள் முகத்தில் ஒரு குழந்தையின் பூரிப்பு இருந்தது. வெளியே மழை பெய்கிற சத்தம் மெலிதாய் ஒரே சீராய்க் கேட்டது. அவன் வாசலிலேயே நின்றிருந்தான். அவள் அவன் கையைப் பிடித்து உள்ளே அழைத்தாள்.

"மழை பெய்யுது... சீக்கிரமா உள்ள வந்துருங்க..." என்றாள்.

கதவைச் சாத்தினாள். அவனை இதமாய்த் தழுவிக்கொண்டாள். அவன் கண்களில் சில துளிகள் உதிர்ந்தன.

"இருங்க... உங்களுக்கு டவல் எடுத்துட்டு வரேன்..." என்றாள்.

அவன் மாடிப்படியைப் பார்த்தான்.

அவள் சொன்னாள்.

"அவங்க தூங்கறாங்க..."

டவல் தந்தாள். ஒற்றிக்கொண்டான்.

"உள்ள வாங்க... காஃபி போட்டுத் தரேன்..."

"வீடு நல்லாருக்கு"என்றான் அவளைத் தொடர்ந்தபடி.

"கட்டற வட்டியும் ரொம்பவே நல்ல வட்டி தான்..."

"உன் பொண்ணு பேரு என்ன?"

"கேத்தி"

"அந்த அறையெங்கும் கேத்தியின் புகைப்படங்கள் ஆக்கிரமித்திருந்தன. கெல்லியும், கேத்தியும் சேர்ந்திருந்த சில படங்களும், குடும்ப புகைப்படமும் அங்கே ஒட்டப்பட்டிருந்தன.

******ebook converter DEMO Watermarks*******

"ரொம்ப அழகான பொண்ணு..." என்றான் தலை துவட்டிக்கொண்டே அவள் முகத்தை ஏறிட்டபடி.

"சின்னப் பசங்க எல்லாருமே அழகு தானெ..."

"உன்கிட்ட ஒன்னு கேக்க ஆசைப்படறேன்..." என்றான் நேரடியாக.

காபி போட்டுக்கொண்டிருந்த அவள் சற்றே திகைத்து, காபி போடுவதிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவளின் உதடுகள் விரிந்திருந்தன. ஆனால் அவன் ஏதோ ஒரு கால்பந்து அணியைப் பற்றிய தகவல் கேட்டான். அவள் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி பதிலளித்தாள்.

"புரபசர் ஆகனும்ன்ற உன்னோட கனவு என்னாச்சி?"

அவள் பதில் சொல்லவில்லை.

"நீ இப்ப டாக்டர் கெல்லி இல்லையா?"

"உங்க விமானம் மூழ்கினது தெரிஞ்ச பிறகு அதோட சேந்து என்னோட படிப்பு ஆசையும் மூழ்கிடுச்சின்னு தான் சொல்லனும்..." என்றாள் இயலாமை பூசிய புன்னகையோடு.

"நான் உன்கிட்ட இதெக் குடுக்கனுங்கிறதுக்காகத் தான் இப்ப வந்தேன்..." என்றபடி தன்

சட்டைப்பையில் இருந்து அந்தச் சிங்காரச்சிமிழை எடுத்தான்.

அவள் சகலமும் உறைந்துபோக அச்சிறு பேழையை வாங்கித் திறக்கப் போனாள்.

அவன் சொன்னான்.

"ஸாரி... இப்ப இந்தக் கடிகாரம் ஓடலை..."

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அதைத் திறந்தாள்.

"ஆனா உன்னோட படத்தை பத்திரமா வச்சிருக்கேன்... அதுக்கு ஒன்னும் ஆகலை..." என்றவன், "ஆனா எல்லாமே கொஞ்சம் மழுங்கிப் பழசாகிப்போயிருச்சி... இதை உன்கிட்ட ஒப்படைக்கத் தான்..." என்று

******ebook converter DEMO Watermarks*******

முடிக்காமலேயே நிறுத்தினான்.

"இது நான் உங்களுக்காகக் குடுத்தது..."

"அப்பிடியில்ல... இது உன் குடும்பச் சொத்து... உன் குடும்பத்தைச் சேந்தவங்ககிட்டத் தான் இருக்கனும்..."

அவன் அப்படியே பின்வாங்கி நின்றான்.

அவள் சொன்னாள்.

"உங்க விமானம் மூழ்கினதுல இருந்து என்னென்ன தகவல் வந்ததுன்னு அத்தனையும் பத்திரமாச் சேகரிச்சி வச்சிருக்கேன்..." என்றவள், பக்கத்து அறைக்குச் சென்று அதையெல்லாம் எடுத்துக் காட்டினாள்.

அவள் ஒரு வரைபடத்தை விரித்து அதில் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, "இந்த இடத்தில தான் கப்பல்ல இருந்து உங்களைப் பாத்திருக்காங்க..." என்றாள். "நீங்க தங்கியிருந்த தீவுலயிருந்து கடல்ல கிட்டத்தட்ட ஐநூறு மைல் தூரத்துக்கு கடல் நீர்மின்னோட்டத்தினால மட்டும் இழுத்துட்டு வரப்பட்டிருக்கீங்க... குக் தீவுல இருந்து கிட்டத்தட்ட அறநூறு மைல் தள்ளி வந்துட்டீங்க..." என்றாள்.

அவன் அமைதியாக அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் சொன்னாள்.

"நானும் உங்களுக்கு ஒரு முக்கியமான ஒன்னு காட்டனும்... வாங்களேன்..." என்று வெளிப்பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே அவனுடைய கார் பத்திரமாகப் பராமரிக்கப்பட்டிருந்த நிலையில் பளிச்சென இருந்தது.

அவன் சொன்னான்.

"இது ஒரு அற்புதமான கார்... இந்தக் காருக்குள்ள பல அற்புதமான நினைவுகள் ஒளிஞ்சிட்டிருக்கு..." என்றான்.

அவள் புன்னகையோடு பார்த்தாள்.

******ebook converter DEMO Watermarks*******

"நான் ஓட்டிப் பாக்கட்டுமா?"

"நிச்சயமா..."

சாவியைக் கொடுத்தாள்.

"இந்தாங்க... இது உங்களோட கார்..."

"எனக்கு இப்ப இது தேவை தான்... என்னோட டாக்சி என்னைப் பாதி வழியிலயே விட்டுட்டுப் போயிடுச்சி போல..." என்று வினோதமாய்ச் சிரித்தான்.

அவள் அதன் இருக்கையில் இருந்த சில பொருட்களை எடுத்துக்கொண்டாள்.

அவன் செல்வதற்கு முன் கேட்டான்.

"நீ மேற்கொண்டு குழந்தைங்க பெத்துக்கலையா?"

"அதுபத்தி நெனைக்கல... கொழப்பமா இருக்கு..."

"நெறைய பெத்துக்க..."

"எதுக்காக அப்படிச் சொல்றீங்க?"

"தெரியல..."

"தெரியலேன்னா என்ன அர்த்தம்?"

"நெஜமாவே பதில் சொல்லத் தெரியல..." என்றான்.

காரில் ஏறி அமர்ந்தான்.

இயக்கினான்.

அவள் கேட்டாள்.

"நீங்க போறப்பச் சொன்னீங்க... நான் சரியான நேரத்துக்கு புத்தாண்டு கொண்டாட

******ebook converter DEMO Watermarks*******

வந்துருவேன்னு...?"

அவன் அவளை நோக்கி விவரிக்க முடியாத ஒரு பார்வை பார்த்தான்.

"ஐ"ம் ஸோ ஸாரி..." என்றான்.

"நானுந்தான்..." என்றாள் அவள்.

அவள் ஓட்டுனர் இருக்கையில் இருந்த அவனை நோக்கி முகத்தை நகர்த்திக்கொண்டு சென்றாள். இருவரும் முத்தமிட்டுக்கொணடார்கள். கார் பின்நோக்கிச் சென்றது. அவள் வீட்டின் வெளிக்கதவை மூடினாள். கார் மெதுவாகச் சென்று அவள் பார்வையிலிருந்து மறையத் துவங்கியது.

மழை "ச்சோ"வென கொட்டிக்கொண்டிருந்தது. அவன் கார் செல்வதையே போர்டிகோவில் நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு மூச்சு வாங்கியது.

"சக்" என மனது உடைத்துக் கொள்ள தொண்டைக்குழி அடைத்துக்கொள்ள கூவினாள்.

# 27

ச த்தமிட்டபடி மழையில் காரைத் துரத்திக்கொண்டு ஓடினாள். இருள் அவளின் கதறலில் உயிர்பெற்றெழுந்தது. கார் அந்த நான்குமுனைச் சந்திப்பில் சடன் பிரேக் போட்டு நின்றது. அந்த இடம் நாவலின் துவக்கத்தில் வெறுமையின் குறியீடாய் யாருமற்று அநாதையாய் நின்றுகொண்டிருந்ததே அதே இடம். அவன் காரிலிருந்து இறங்கி வந்தான்.

இருவரும் அடைமழையில் மிருதுவாய் கட்டிக்கொண்டார்கள். பரஸ்பரம் அவர்களின் பிரபஞ்சக் கதகதப்பைப் பரிமாறிக்கொண்டார்கள். மழை அவர்களை முழுமையாய் நனைத்தது.

அவள் சொன்னாள்.

"எனக்குள்ள ஒரு உள்ளுணர்வு எப்பவுமே சொல்லிட்டிருந்துச்சி... நீங்க எங்கயோ உயிரோட இருக்கீங்கன்னு..."

******ebook converter DEMO Watermarks*******

"எனக்கும் அது தெரியும்..." என்றான் அவன்.

"எல்லாரும் அந்த மாதிரி நான் சொல்லிட்டிருக்கிறது அர்த்தமில்லாத விசயம்ன்னு

சொன்னாங்க... என்னை அப்பிடிச் சொல்லிட்டிருக்கறதை நிறுத்திக்கும்படிச் சொன்னாங்க... ஆனா நான் நம்பிட்டுத் தான் இருந்தேன்... எனக்குள்ள உங்க குரல் கேட்டுட்டுத் தான் இருந்துச்சி... ஐ லவ் யூ... எப்பவும் என் வாழ்க்கையோட காதல் நீங்க தான்... "

"நானும் உன்னை உயிருக்குயிரா எப்பவும் காதலிக்கறேன் கெல்லி... அந்த உணர்வுக்குக் கடந்தகாலமோ நிகழ்காலமோ கிடையாது. இத்தனை வருசத்துல எனக்குள்ள இருக்கற காதல்உணர்வு ஒவ்வொரு நொடியும் கூடிட்டே தான் இருக்கு... எனக்கு உன்னைத் தெரியும்... உன்னை எனக்குத் தெரியும்ன்றதும் எனக்குத் தெரியும்..."

அவர்கள் முகமூடி களைத்துவிட்டு மனதில் ஒளிந்திருந்தது அத்தனையையும்

ஜோடனையின்றி அந்தப் பரவசவுணர்ச்சி மேலிட்ட தழுவலின் மூலம் பரஸ்பரம் உணர்த்திக் கொண்டார்கள்.

அவளைத் தன் காரில் ஏற்றிக் கொண்டான். அவளுக்கு மூச்சு வாங்கியது. மூடியிருந்த ஜன்னல் வழியே மழை நீர் வழிந்துகொண்டிருந்தது. அவன் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தான். ஒரு நொடி நிதானித்தான்.

"சக்" என்றாள் அவள்.

"நீ வீட்டுக்குப் போகனும்... அதானெ?"என்றான் அவன்.

அவள் மெதுவாக தயக்கத்துடன் தலையசைத்தாள். விழிகள் அவனை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தது.

கார் அவளை அழைத்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றது.

# 28

******ebook converter DEMO Watermarks*******

சக் அவனின் நிறுவனத்தில் பணியாற்றும் ஜிம் இருப்பிடத்திற்கு அப்போதே போய்ப்பார்த்தான். ஜிம் ஆச்சர்யப்பட்டான். எனினும் அவனுக்கு சக்நோலனின் மனதைப் புரிந்துகொள்ள முடிந்திருந்தது.

சக் நோலன் மனதில் உள்ளதை அதிராமல் விவரித்தான். அவனுக்குச் சாகவேண்டும் போலிருப்பதாகவும், ஆனால் அதற்குக்கூட தான் லாயக்கில்லாதவன் என்றும் சொன்னான். ஜிம் தைரியம் சொல்ல முனையவில்லை. அவன் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அப்போ என்கிட்ட எந்தத் தீர்மானிக்கிற சக்தியும் இல்லெ... ஒவ்வொரு முறையும் தனியா அங்கெயே செத்துப் போகப்போறேன்னு தான் தோணும்... விரக்தியில ஒரு முறை தற்கொலை பண்ணிக்க மனசு நெனச்சிருக்கு.

அதுக்காக ஒரு நீளமான கயிறு தயார் பண்ணிக்கிட்டு அங்கெ மலைஉச்சிக்குப் போனேன். அங்கயிருந்த பட்டுப்போன மரத்துல கட்டிட்டுத் தொங்கிடறதுன்னு தீர்மானிச்சேன்... அதுக்காக முதல்ல என் வெய்ட் உள்ள ஒரு மரக்கட்டையெ எடுத்து அதோட கழுத்துல சுருக்குப்போட்டு கயிறு தாங்குதான்னு பாக்கறதுக்காகத் தள்ளிவிட்டேன். அது தொஙகறத மேலயிருந்து பாத்தேன்.

அதுக்குள்ள அந்த ஒரு நொடிச் சலனம் என்கிட்டயிருந்து விடுபட்டுருச்சி. அதனால அந்தத் திட்டத்தை அங்கேயே விட்டுட்டேன்... என்னால என்னைச் சாகடிச்சிக்கக்கூட முடியல. என்கிட்ட எந்தவிதமான கட்டுப்பாடும் அந்த நிலையில இல்லேன்னு தோணுச்சி... அப்பக் கெல்லியோட நினைவு தான் குளிருக்கு இதமான போர்வையா என்னைப் போர்த்திக்கிட்டு அப்படிப்பட்ட காரியம் செய்யவிடாமத் தடுத்து நிறுத்திட்டிருந்துச்சி.

லாஜிக்கலா அங்கயிருந்து தப்பிக்க எந்த ஒரு நம்பிக்கை தரக்கூடிய சூழலும் அங்க இல்லேன்னு தெரிஞ்சாலும் நான் நம்புனேன். இங்க திரும்ப வரக்கூடிய சாத்தியம் இல்லேன்றது லாஜிக்படி தோணுனாலும் நான் ஏதோ ஒரு நம்பிக்கையோட அங்க உயிரோட இருக்கறதுன்னு தீர்மானிச்சேன். அது கெல்லியோட நினைவுனால தான்...

அதுக்காகவே நான் உயிரோட இருந்தேன். மூச்சுவிட்டுட்டிருந்தேன். ஆனா அந்த லாஜிக் எல்லாமே தப்பாக்கிட்டு அங்கயிருந்து எப்படியோ
******ebook converter DEMO Watermarks*******

தப்பிச்சேன்... ஏதோ ஒரு அலை என்னை இங்க இழுத்துட்டு வந்துருச்சி... விமானத்துல வச்சி மெம்பிஸ் அழச்சிட்டு வந்தது... வழியில விரும்புன ஐஸ் க்யூப் போட்ட தண்ணி குடிக்க வச்சது... இப்ப இந்த ராத்திரி வேளையில உங்ககூட பேச வச்சிட்டிருக்கு... என்ன ஒன்னு அவளை முழுசா நான் இழுந்துட்டேன்... கெல்லி என்கூட இல்லேன்றது எனக்கு வருத்தமா இருந்தாலும், நான் அவளுக்கு எப்பவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். ஏன்னா நான் அந்தத் தீவுல இருந்த நாலு வருசமும் ஒரு நொடிகூடப் பிரியாம என்கூடவே இருந்தாளே அதுக்காக...

அவளோட நினைவுகளோடவே வாழ்ந்தேன்... அவெ எனக்காகக் காத்திட்டிருக்காங்கற நம்பிக்கையோடவே உயிரைப் பிடிச்சி வச்சிருந்தேன்... எத்தனை மழை, வெயில், புயல், பசி, காயம், இயலாமை, பயம், கோபம், அழுகை, தனிமை எல்லாத்தையும் கடந்து இங்க வந்து உக்கார வச்சிருக்கிறது அவெ தான்..."

அவன் கண்கள் கலங்கித் ததும்பிக்கொண்டிருந்தது.

"இனி நான் என்ன செய்யனும்னு எனக்கு நல்லாவே தெரியும்... தொடர்ந்து மூச்சுவிட்டுட்டு இருக்கனும்... அது மட்டும் தெளிவாத் தெரியுது. ஏன்னா நாளைக்கு மறுபடி விடியும் இல்லையா..." என்றான் துடிக்க வைக்கிற நகைப்புடன்.

அவன் கண்களின் ஈரம் அந்த மங்கிய வெளிச்சம்பட்டு மிளிறியது.

# 29

காலை வேளை. சக் நோலன் காரில் பயணித்துக் கொண்டிருந்தான். காரின் மேல்பகுதியைக் கழட்டி விட்டிருந்தான். காற்று அவனது கேசத்தைப் படபடக்கச் செய்து கொண்டிருந்தது. பிளாஸ்டிக் பாட்டில் எடுத்துத் தண்ணீர் குடித்தான். ரேடியோ பாடிக்கொண்டிருந்தது.

"நான் ஒரு கடிதம் தபால்பெட்டியில் போட்டேன்

மறுநாள் காலை தபால்காரர் என் கடிதத்தைத்

திரும்ப என்னிடமே கொண்டு வந்து தந்தார்

******ebook converter DEMO Watermarks*******

அவள் அதில் எழுதியிருந்தாள்

கடிதம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்று

அதனால் கடிதம்

எழுதிய எனக்கே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது

காரணம்

அனுப்பிய விலாசத்திற்குரியவர்

அனுப்பப்பட்டவருக்கு யார் என்றே தெரியவில்லை..."

என்கிற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

காரின் உள்ளே அவன் ஒப்படைக்க குக் தீவிலிருந்து எடுத்து வந்திருந்த அந்த தஸ்தாவேஜ் இருந்த ஃபெடெக்ஸ் பார்சல் பத்திரமாய் இருந்தது. பக்கத்திலேயே ஒரு புதிய வெள்ளை நிறத்திலான வாலிபால் பந்து இருந்தது. அதில் வில்சன் என்கிற எழுத்து ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது.

அந்த அஞ்சல்சிப்பத்தில் இருந்த விலாசத்தைத் தேடிப் போனான். அதிலுள்ள நம்பர் பார்த்து வீட்டைக் கண்டுபிடித்து விட்டான். அது நாவலின் துவக்கத்தில் வந்த ஃபெடெக்ஸ் குறியீடு

போடப்பட்டிருந்த அந்த அலுவலகப் பிரிவின் அருகே துணைக்கு இருந்த அந்த ஓற்றை வீடு தான். துவக்கத்தில் ரஷ்யாவிற்கு பக்கத்திலிருந்த அந்த ஃபெடக்ஸ் மூலம் பார்சல் கொடுத்தனுப்பியிருந்த பெண்மணியின் வீடு தான் அது.

வெளியேயிருந்து அழைத்தான். யாரும் வரவில்லை. உடனே அந்தப் பார்சல் மீது ஒரு துண்டுக் காகிதத்தை வைத்துக் குறிப்பு எழுதினான்.

"இது என் உயிர் காப்பாற்றப்படுவதற்குக்

காரணமாயிருந்த பார்சல்.

அதற்கு நன்றி."

******ebook converter DEMO Watermarks*******

சக் நோலன்

என்று எழுதினான்.

கதவிடுக்கில் அவன் எழுதிய சிட்டையைச் செருகினான். பழசாகிப் போயிருந்த அந்தப் பார்சலை அப்படியே கதவில் சரித்து வைத்தான். புறப்பட்டான்.

அதே நாற்சந்திச்சாலைக்கு வந்தான். காரை நிறுத்தினான். சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் கண்ணுக்கெட்டியதூரம் வரைத் தென்படவில்லை. பாட்டில் திறந்து மறுபடி தண்ணீர் குடித்தான்.

காரின் முன்புறம் தான் வைத்திருந்த வரைபடத்தை எடுத்துவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு சிகப்பு நிறக் கார் அங்கே வந்து நின்றது. அதிலிருந்து ஒரு இளம்பெண் இறங்கினாள். அவனிடம் வந்து கேட்டாள்.

"எப்பிடிப் போறதுனு தெரியலையா?"

"ம்"

தான் சொல்வதாகச் சொல்லி அந்த நான்கு வழிச்சாலை ஒவ்வொரு பாதையும் எங்கே செல்கிறது என்பதை விளக்கினாள். அவன் எங்கே போக வேண்டும் என்கிற விசயம் தெரியாமல்.

"குட் லக்" என்றாள்.

அவன் நன்றி தெரிவித்தான்.

அவள் புன்னகை தந்தபடி காரில் எறி எதிர்த்திசையில் பயணப்பட்டு மறைந்துபோனாள்.

அவன் அவள் சென்ற திசையைப் பார்த்துக்கொண்டிருந்தான். கார் புள்ளியாகி மறைந்து போனது.

அதன் பிறகு யோசித்தவனாய் நான்குவழிச்சாலை சந்திக்கும் மையப் பகுதிக்கு வந்தான். நடுவில் வந்து நின்றபடி நான்குபக்கமும் திரும்பிப் பார்த்தான். எந்தப் பக்கம் செல்வதென்று பிடிபடவில்லை.

******ebook converter DEMO Watermarks*******

உறைந்துபோய் நின்றான். கண்களுக்குள் சுரந்த ஈரம் அவன் மனதிற்குள் பதிந்துபோய் அவனை மேலும் மிருதுவாய் உணரச் செய்தது.

**(முற்றும்)**

******ebook converter DEMO Watermarks*******